உ

கணபதி துணை.

திருவாவடுதுறையாதீனத்துத்

தொட்டிக்கலைச்

சுப்பிரமணியமுனிவர்

இயற்றிய

# திருவாவடுதுறைக்கோவை.

இது,

ஷை ஆதீனத்து

ஸ்ரீமத்

அம்பலவாணதேசிகரவர்கள்

விருப்பத்தின்படி,

கும்பகோணம் காலேஜ் தமிழ்ப்பண்டிதராகிய

உத்தமதானபுரம்

வே. சாமிநாதையரால்

பல பிரதிருபங்களைக்கொண்டு பரிசோதித்து,

சென்னபட்டணம்:

வைஜயந்தி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சுபகிருது வரு தைமீ

1903.

விலை அணா - அ.

*Copyright Registered.*

# இப்புத்தகத்திலடங்கியவை.

க. முகவுரை, க - உ.

உ. நூலாசிரியர் வரலாறு, ௩ - க0.

௩. நூலாராய்ச்சி, கக - உக.

தலவிசேடங்கள், கக - கஉ.

இந்நூலில் தலவிசேடங்களமைந்திருத்தல், கஉ - கரு.

ஸ்ரீ பஞ்சாக்ஷரதேசிகர் பெருமை முதலியன, கசு.

பழைய தமிழ் நூல்களின் கருத்துக்கள் இந்நூலுள் அமைந்திருத்தல், கஎ - உ0.

இந்நூலிலுள்ள பிரயோகவகைகள், உ0 - உக.

ச. கிடைத்த கையெழுத்துப் பிரதிகளின் விவரம், உஉ.

ரு. பிழையும் திருத்தமும், உஉ.

சு. திருவாவடுதுறைக்கோவை, க - எக.

எ. ஷை அரும்பதவுரை, எஉ - எஅ.

அ. செய்யுள் முதற்குறிப்பகராதி, எகூ - அஉ.

கணபதிதுணை.

# முகவுரை.

கோவையென்பது, தமிழ்ப்பாஷைக்குரிய தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்று; காட்சிமுதலியதுறைகள் முறையே நோக்கப்பட்டநூலென்பது இம்மொழியின்பொருள்; இஃது ஐந் திலக்கணங்களுட் பொருளின்பகுதியாகிய அகப்பொருளிலக்கணத் திற்கு இலக்கியமாக அமைந்துள்ளது; குறிஞ்சித்திணைமுதலிய ஐந் திற்கும் உரியனவாக முன்னோர்கள்விதித்த முதற்பொருள் கருப் பொருள் உரிப்பொருள்கள்முகமாகத் தலைவன்தலைவிகளுடைய ஒழுக் கங்களை, உலகவழக்கம் செய்யுள்வழக்கமென்னுமிரண்டிற்கும் ஒப்ப நன்குதெரிவிப்பது; இதனால் இந்நூல் ஐந்திணைக்கோவையென்றும் பெயர்பெறும். பன்னிருபாட்டியல்முதலிய பாட்டியல்களில் இப் பிரபந்த இலக்கணமும், தொல்காப்பியம், இறையனாரகப்பொருள் முதலிய நூல்களில் இதிலுள்ளஅகப்பொருளமைதிகளும் கூறப்பட் டுள்ளன. கட்டளைக்கலித்துறைச்செய்யுளாற் செய்யப்படவேண்டு மென்பதும், அச்செய்யுள் நானூற்றிற்குக் குறையாமலிருக்கவேண்டு மென்பதும் இன்னுஞ்சிலவும் இந்நூலுக்குரியவிதிகள். தாம் வழி படுதற்குரிய தேவர்கள்மீதும் தம்மை ஆதரிக்கும் பிரபுக்கள்மீதும் பண்டைக்காலந்தொடங்கிப் பலபெரியோர்களாற் செய்யப்பட்டுப் பற்பலநூல்கள் இப் பிரபந்தவகையில் வழங்கிவருகின்றன. திருச் சிற்றம்பலக்கோவையார், தஞ்சைவாணன்கோவை முதலிய கோவை களில் இவ்விருபகுதிகளும் மற்றை அமைதிகளும் அறியற்பாலன. அவற்றுள்,—

திருவாவடுதுறைக்கோவையென்பது, திருவாவடுதுறையிற் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ மாசிலாமணியீசர்மீது திருவாவடுதுறையாதீனத்துச் சுப்பிரமணியமுனிவரியற்றியது; இது

துறைசைக்கோவையெனவும் வழங்கும். [துறைசையென்பது, திருவாவடுதுறையென்னும் பெயரின் மரூஉ.] இதில் சஎகூ செய்யுட்களுள்ளன; இன்றியமையாத ஓசையினிமை, எதுகைநயம், மோனைநயம், வழியெதுகை, வழிமோனை, முரண், மடக்கு, யமகம், திரிபு, சிலேடைமுதலியனவும், உள்ளுறையுவமமுதலியனவும், தொனியும், இந்நூலிற் பரக்கக்காணலாம்.

அன்றியும் இத்தலத்தின் விசேடமுதலியவற்றையும் இத்தலத்தில் வழிபட்டோர்கள் அடைந்த பெரும்பேறுகளையும் சைவசாஸ்திரக்கருத்துக்கள்முதலியவற்றையும் இந்நூலில் ஆங்காங்கு நூலாசிரியர் விளக்கிக்காட்டியிருத்தல் மிக வியக்கற்பாலது. இதுநிற்க.

இப்பொழுது திருவாவடுதுறையாதீனத்தில் தலைமைவாய்ந்து வீற்றிருக்கின்றவர்களும், வேண்டிய புஸ்தகங்களைத் தந்தும் பிற இடங்களிலிருந்து வருவித்துக்கொடுத்தும் எனக்குப் பேருதவிபுரிந்துவருபவர்களுமாகிய ஸ்ரீமத் அம்பலவாணதேசிகரவர்கள் தமது ஆதீனமெய்யன்பர்கள் பலருடைய விருப்பத்தையறிந்து இக்கோவையைப் பதிப்பித்துவெளிப்படுத்த அனுமதிசெய்ததன்றி, பதிப்பித்தபின்பு, சிலபிரதிகள் எடுத்துக்கொள்வதாகவும் வாக்களித்தார்கள். அவர்களுடைய பெருந்தகைமை மிகப் பாராட்டத்தக்கது.

இந்நூலிலுள்ள செய்யுட்களுள் ஒவ்வொன்றன்சுவையையும புலப்படுத்தி உரையெழுதுதல் இயலாதென்பதையறிந்தேனாதலின், சில அரும்பதங்களுக்குமட்டும் உரையெழுதியிருக்கிறேன்.

சிலநண்பர்களுடையவிருப்பத்தின்படி, நூலாசிரியர்வரலாறும், இந்நூலுளமைந்த தலவிசேடப்பகுதிகள் முதலியனவும் தொகுத்தெழுதி இப்புத்தகத்திற் பதிப்பிக்கலாயின.

இந்தக்கோவையை ஆராயுங்காலத்தும் பதிப்பிக்குங்காலத்தும் சலிப்பின்றி உடனிருந்து உபகரித்த பழைய மெய்யன்பர்களுடைய பேருதவி ஒருபொழுதும் மறக்கற்பாலதன்று.

இந்த ஆதீனசம்பந்தமானநூலைப் பதிப்பிக்கும்படிசெய்த நல்வினையின்பால் மிக்க நன்றியறிவுடையேன்.

இங்ஙனம்,

**வே. சாமிநாதையன்.**

# நூலாசிரியர் வரலாறு.

இந்நூலாசிரியராகிய சுப்பிரமணியமுனிவர் சிதம்பரத்தைச்சார்ந்த காட்டுமன்னார்கோயிலில், ஸ்ரீ வீரநாராயணப்பெருமாள்கோயில் மேலைவீதியின் கீழ்ச்சிறகிலுள்ளதோர்வீட்டிற் கார்காத்தவேளாளவருணத்திற் பூகோடையார் கோத்திரத்தில் ஜனித்தவர்; துறவறம் பூண்டொழுகியவர்; சித்தாந்தசைவர்; முருகக்கடவுளை உபாஸித்து மந்திரஸித்தி பெற்றவர். இவர் பிறந்தவருடமும், இவருடைய இல்லறவரலாறுகளும் இப்பொழுது தெரியவில்லை. ஆனாலும், [சாலிவாகனசகாப்தம் ௧௭௦௮; கொல்லமாண்டு ௯௬௦-௯௬௧; கி. பி. ௧௭௮௫ - ௧௭௮௬=] விசுவாவஸு ௵ சித்திரை ௴ பரிபூரணமான ஸ்ரீ சிவஞானமுனிவருடைய பிரிவையாற்றாது, "நினைத்தாற் சகிக்கப்போமோ" என்னும் கீர்த்தனையை இயற்றியிருப்பதோடு, ஆவினன்குடிப் பதிற்றுப்பத்தந்தாதியை, அவ்வருடத்திற்குப்பின்னதாகிய [சாலி. ௧௭௧௧; கொல்லம். ௯௬௩ - ௯௬௪; கி. பி. ௧௭௮௮ - ௧௭௮௯=] கீலக ௵ தை ௴ த்தில் *அரங்கேற்றியதாகத்தெரிகின்றமையாலும் இவர் இற்றைக்கு ௧௧௩-வருடங்களுக்குமுன்வரையில் இருந்தாரென்பதுமட்டும் ஒருவாறு தெரிகின்றது.

[வித்தியாகுரு.]

இவர், சிவஞானபோதத்தின் திராவிடமகாபாஷ்யகர்த்தராகிய ஸ்ரீ சிவஞானமுனிவரிடம் தமிழ்ப்பாஷையிலுள்ள இலக்கண இலக்கியங்கள் பலவற்றையும் உரைநடைகளையும் சைவசாஸ்திரங்களையும் முறையே கற்றுப்பயின்று அவருடையமாணாக்கர்கள் பன்னிருவர்களுள் ஒருவராய்ச் செய்யுள்செய்தலிலும் மிக்க வன்மையுடையவராயினார். அம்மகானை வித்தியாகுருவாகப்பெற்ற இவர் கற்றமுறையைச் சொல்லவும்வேண்டுமோ. இவர் கல்விபயின்றது அப்பெரியோருடைய வாழ்நாட்களுட் பிற்காலம் [அஃது அவர் தொட்டிக்கலையில் இருந்தகாலம்] என்றுதெரிகிறது. [தொட்டிக்கலையென்பது தொண்டைநாட்டிலுள்ளதோரூர்.] அவரிடம் இவருக்கிருந்த மெய்யன்பிற்கு எல்லையின்று; அவர்மீது இவரியற்றிய† "கருணைபொழிதிருமுகத்தில்", "திண்ணவின்பச்சேவடியும்", "ஓதரிய வாய்மை" என்னுஞ்செய்யுட்களும், அவர் பரிபூரணமானதுதெரிந்து ஒருவாற்றானும் பிரிவாற்றாதுவருந்தி இவரியற்றிய, "நினைத்தாற் சகிக்கப்போமோ வென்சுவாமியை" என்னுங்கீர்த்தனையும் இதனை நன்குபுலப்படுத்தும்; பின்னும், அவருடைய பிரிவாற்றாத இவர் தொட்

* அரங்கேற்றிய காலவிவரத்தை ௧௦-ம் பக்கத்திற்காண்க.

† இச்செய்யுட்கள் சிவஞானமுனிவர் பிரபந்தத்திரட்டிலுள்ளன.

டிக்கலைச்சிதம்பரேசர் திருக்கோயிற் சந்நிதிமண்டபத்தில் அவருடைய திருவுருவமமைப்பித்து அதனை நாள்தோறும் போற்றி வழிபட்டுவந்தனரென்றுஞ் சொல்லுவர்; இது மேற்கூறிய செய்யுட்களுள், "ஓதரியவாய்மை" என்பதிலுள்ள,

"அழகுபொலி கலைசைச் சிதம்பரே சுரரடிக்
கதிமதுர கவிதைமாரி
மாதவர் வழுத்தப் பொழிந்தருளி யென்றுமவர்
மன்னிவளர் சந்நிதியிலோர்
மணிவிளக் கென்னவளர் சிவஞான மாதவன்
மலர்ப்பதம் வணங்குவாமே."

என்பதனால் தெரிகின்றது.

[ஞானகுரு.]

திருவாவடுதுறையாதீனத்தில் ௧௫-ம் பட்டத்திருந்த அம்பலவாணதேசிகரிடத்துச் சைவசந்நியாசமும் சிவதீக்ஷையும் ஞானோபதேசமும் பெற்றவர். இவர் இவைகள்பெற்றது, திருச்சிற்றம்பலதேசிகர் பெரியபட்டத்திலும் அம்பலவாணதேசிகர் சின்னப்பட்டத்திலுமுள்ள காலமென்று தெரிகிறது. [திருச்சிற்றம்பலதேசிகர் எப்பொழுதும் சிவாகம ஆராய்ச்சியையே செய்துவந்தாரென்றும், அதனால், அவர்செய்தற்குரிய காரியங்களிற் பெரும்பாலனவற்றை அவர்கட்டளையால் அம்பலவாணதேசிகர் செய்துவந்தாரென்றும் கேள்வியுண்டு.] இவர் திருச்சிற்றம்பலதேசிகர்மீது சிந்துமுதலியனசெய்திருத்தலும் இவரியற்றியநூல்கள்வரைந்துள்ள ஏட்டுப்புஸ்தகங்கள் சிலவற்றில், 'திருக்கைலாயபரம்பரைத் திருவாவடுதுறை நமச்சிவாயகுருமரபில் அம்பலவாணதேசிகருடைய ஞானபுத்திரனான சுப்பிரமணியதம்பிரான்செய்தது இந்நூல்.' என்று வரையப்பட்டிருத்தலும் இதற்குத் தக்கசான்றாகும். [ஞானாசிரியனை ஞானபிதாவென்றலும் ஞானோபதேசம்பெற்றுக்கொண்ட சிஷ்யனை ஞானபுத்திரரென்றலும் மரபு.]

[கல்விவளர்ச்சி.]

ஆதீனத்தில் தம்மைப்போன்றவர்களும் தமக்கு மேலானவர்களுமாக இருந்த பல கல்விமான்களோடு இடைவிடாது பழகுதலும் மாணாக்கர்களுக்குப் பாடஞ்சொல்லுதலும் அவைக்களத்திற் பிரஸங்கித்தலும் ஆகிய இவைகள் புண்ணிய மிகுதிபற்றி இவர்க்கு வாய்த்திருந்தனவாதலால், இவருடைய புலமை மேன்மேலும் மாட்சிமையுற்றுவிளங்கிற்று; "அவ்வினை யாளரொடு பயில்வகை யொருகாற், செவ்வி தினுரைப்ப வவ்விரு காலு, மையறு புலமை மாண்புடைத் தாகும்" என்றாரன்றோ.

[விசேடகுணங்கள்.]

வித்தியாகுருவினிடத்தும் ஞானாசிரியரிடத்தும் இடைவிடாத மெய்யன்புடைமை, சிவபக்தி, அடியார்பக்தி, கல்விமான்களை ஆதரித்தல், நன்றிமற

வாமை, மேன்மேலும் நூல்களை ஆராய்தல், அழுக்காறின்மை, பிறர்பாலுள்ள குணங்களைப் பாராட்டல், ஸ்தலயாத்திரைசெய்தலில் விருப்பம், யாவர்க்கும் பொருள்விளங்க எளியநடையாக விரைவில் எவ்வகையானசெய்யுட்களையும் செய்யும்வன்மை, ஸங்கீதப்பயிற்சி ஆகிய இவைகள் இவர்பால் அமைந்திருந்த விசேடகுணங்கள். இவர் இவற்றையுடையராயிருந்தமை இவருடைய சரித்திரத்தையும் இவரியற்றிய செய்யுட்களையும் உற்றுநோக்குவோர்க்கு நன்கு விளங்கும்.

[சிறப்புப்பெயர்.]

கேட்டவர்கள் வியக்கும்படி மிகவும் இனிமையான செய்யுள்செய்தலில் வல்லுநராயிருந்ததுபற்றி, இவர் மதுரகவியென்று ஆதீனத்திற் சிறப்புப் பெயர்பெற்று விளங்கினர். தொட்டிக்கலையிற் பெரும்பாலும் இருந்தமையின், தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவரெனவும் தொட்டிக்கலைச்சுப்பிரமணிய தம்பிரானெனவும் இவர்பெயர்வழங்கும்.

[இவர்காலத்திருந்த தமிழ்வித்துவான்கள்.]

சிவஞானமுனிவருடைய மாணாக்கர் பன்னிருவருள் இவர் ஒருவரென்று தெரிதலால், அம்முனிவரும், அவருடைய மற்றமாணாக்கர்களாகிய இலக்கணம் சிதம்பரநாதமுனிவர், கச்சியப்பமுனிவர், இராமநாதபுரம் சோமசுந்தரம் பிள்ளை, காஞ்சீபுரம் சரவணபத்தர் (ஏனை எழுவர்பெயரும் தெரியவில்லை) முதலியவர்களும், சென்னையில் ஸ்ரீ கச்சியப்பமுனிவர் விநாயகபுராணமியற்றும் போது இருந்தவரென்று சொல்லப்படும் சீகாழி வடுகநாததேசிகரும் இவர் காலத்திலிருந்த தமிழ்வித்துவான்களென்று தெரிகிறது.

[ஆதரித்த பிரபுக்கள்.]

தொட்டிக்கலைக் கேசவமுதலியார், *வேதாசலமுதலியாரென்னு மிருவரும் இவரை மிகப் பாராட்டிவந்ததன்றி அவ்வூரிற் கோயில்கொண்டெழுந்தருளிய ஸ்ரீ சிதம்பரேசர் சந்நிதியினருகே மடமொன்று கட்டுவித்து அதில் வஸிக்கும்படிசெய்து ஆசிரியராகக்கொண்டு குறிப்பறிந்தொழுகி மிக்க பணிவுடன் ஆதரித்துவந்தார்கள்; "தொட்டிக், கலைக்கேச வன்மெய்ப் புகழ்போல் விளங்குங் கதிர்ப்பிறையை" என்றும், "வேதா சலத்தின் புகழ்போல் விளங்குக வெண்சங்கமே" என்றும் தாம்பாடிய கலைசைக்கோவைச்செய்யுட்களில் இவர் அவர்களைப் பாராட்டியிருத்தல் இதனை வலியுறுத்தும். அவ்வூரில் இவரிருந்தமடம் இப்பொழுதும் சாமியார்மடமென்று வழங்கப்படுகின்றது.

---

* இந்த வேதாசல முதலியாருடைய படத்தை, சிலவருடங்களுக்குமுன்பு பூண்டி அரங்கநாத முதலியாரவர்கள் [எம்-ஏ] வீட்டிற் கண்டதுண்டு.

[ஸஞ்சரித்த இடங்கள்.]

இவர் இடையிடையேசென்று சிற்சிலவருடங்கள் தொட்டிக்கலையில் இருந்துவந்ததன்றித் திருச்செந்தூர், திருக்குற்றாலம், பழநி, திருத்தணிகை, வடதிருமுல்லைவாயில், திருவொற்றியூர், ஆயலூர், ஆவினன்குடி, திருவல்லிக்கேணி முதலியஸ்தலங்களுக்கும் யாத்திரையாகச் சென்றுசென்று அவ்வவ்விடத்தே சிலசிலநாள் தங்கிவந்தனர். இதனை இவரியற்றிய பிரபந்தங்களும் தனிச்செய்யுட்களும் தெரிவிக்கின்றன.

[சிலபாடல்கள்.]

இவர் அவ்வச்சமயங்களிற்செய்த அழகிய தனிப்பாடல்கள் பல. அவற்றுட் சில வருமாறு:—

இவர் விரைவிற்பாடுதலைக்கேட்ட அம்பலவாணதேசிகர், ஒருசமயத்தில், 'நம்முடைய ஆசிரியராகிய திருச்சிற்றம்பலதேசிகர்மேல், "குருதிருச்சிற் றம்பலவெங் கோ" என்பதை ஈற்றடியாகவைத்து நேரிசைவெண்பா ஒன்றியற்றுக' என்று கட்டளையிட, உடனே இவர்பாடியது:—

முனிக்குமுனி யானை முனிந்தே பொதியின்
முனிக்குமுனி யாதளித்த மூர்த்தி - முனிக்குப்
பொருகளிறு நீரூட்டும் பொன்னித் துறைசைக்
குருதிருச்சிற் றம்பலவெங் கோ.

[முன் இக்கு முனியானை முனிந்து - முன்பு கரும்புவில்லையுடைய மன்மதனைக் கோபித்து; முனி - வில். பொதியின்முனி - அகத்தியர். முனி - யானைக்கன்று. பொன்னி - காவிரி.]

ஆதீனத்தில் தேவாரப்பணிவிடைசெய்யும் ஓதுவார்களுட் குருசாமியோதுவாரென்று ஒருவருண்டு; அவர் ஸங்கீதத்தில் நல்லபயிற்சியுடையவர்; இனியசாரீரமுடையவர்; இவர்பால் மிக்க அன்பினர்; இவரியற்றிய பழநிக் குழந்தைவேலர்பஞ்சரத்தினமாலை முதலிய பிரபந்தங்களை இசைவரம்புடன் பாடி உவப்பித்து வருபவர். அவர் வழக்கப்படி ஒருநாள் அம்பலவாணதேசிகருடைய பூஜாகாலத்தில் மற்றவர்களோடுசேர்ந்து தேவாரங்களைப் பண்ணுடன் ஓதுவாராயினர். அப்பொழுது தரிசனத்திற்குச்சென்ற இவர், அவருடைய இனியசாரீரம் மற்றையோர்சாரீரங்களிலும் மிகச்சிறந்து விளங்குதலை அறிந்து,

கட்டளைக்கலித்துறை.

ஒருசாமி வாழ்திருக் கோமுத்தி யூர்தனி லுற்பவித்து
வருசாமி யெங்கள் வயித்திய லிங்கம் வலம்புரிந்து
தருசாமி முத்தமிழ்ச் சங்கீத சாமிநற் சாந்தகுணக்
குருசாமி நீங்குர லெந்நாளுங் கோகிலங் கோகிலமே.

என்னும் செய்யுளையியற்றி, பூசைமடத்திலிருந்து வெளிப்பட்ட ஆசிரியர்க்கு விண்ணப்பஞ்செய்து உவப்பித்தனர். [வைத்தியலிங்கமென்பது குருசாமியோதுவாருடைய தந்தையார்பெயர்.]

தொட்டிக்கலைமுதலிய இடங்களிற் சிலவருடந்தங்கிவிட்டு வந்தபொழுது மடத்திலிருந்த அன்பர்கள் இவரைநோக்கி, 'தேவர் இந்த இடத்தை மறந்தீர்போலும்' என்றுசொல்ல, அப்பொழுது இவரியற்றிய பாடல்கள் :—

விருத்தம்.

க. தெய்வப் பொன்னித் திருநதிசூழ் சிறப்பு மிருநான் கொருகோடி
சித்தர் வாழுந் திருவரசு மதன்கீ ழொருமா சிலாமணியு
மைவைத் தனைய விருட்டறையிற் குருட்டா மானு மான்மாக்கண்
மலநோ யகற்றிக் கதியளிப்பான் வந்தங் கவர்புன் றலைமீது
கைவைத் தருளி முறையேபொற் கழலுஞ் சூட்டுங் கோமுத்திக்
கருணைக் கடல்பஞ் சாக்கரதே சிகன்சீ ரடியார் கலந்திருக்குஞ்
சைவத் திருவோ லக்கமுமங் குண்டேற் கைலை தனையொருகாற்
சார்ந்து மீள்வேன் மற்றங்குத் தரியே னங்குத் தரியேனே.

வேறு.

உ. எத்தலமு மெந்நதியு மெத்தளியுந் திருமூர்த்த மெனைத்தும் போதி
மெய்த்தருவோங் கியதுறைசைத் திருநகருங் காவிரியும் விடையு ருச்சோ
வத்திருக்கோ யிலுமாசி லாமணியு மதனருகா னந்த வைப்பி
லுத்தமபஞ் சாக்கரசற் குருமணியு மாகியெனை யுருக்கு மன்றே.

[விடையுருச்சோ - நந்திகளில்லாத திருமதில். நாரசிங்கனென்னும் கொடிய அரசனொருவனை வெல்லும்படி, ஸ்ரீ கோமுத்தீசர்திருக்கோயின் மதிலின்மேலிருந்த இடபங்களைத் திருமாளிகைத்தேவர் ஒருருவாக்கி அனுப்பினரென்பர்; இதனை, "மதினந்திகளைவரவழைத்தும்" என்னும் திருமாளிகைத்தேவர் திருவிருத்தத்தாலுமுணர்க.]

இக்கோவையை இவர் அரங்கேற்றிக்கொண்டு வருகையில், நாள்தோறும் வந்து கேட்டுக்கொண்டு இன்புற்றிருக்கும் அன்பர்களுள் ஒருவர், 'பிறர்க்கு எளிதிற் பொருள்புலப்படாதபடி அகப்பொருட்டுறையை அமைத்து, அம்பலவாணதேசிகர்மீது செய்யுள் செய்துதருக' என்று வேண்ட, இவரியற்றிய வெண்பாக்கள் :

வெறிவிலக்கல்.

க. இத்தை யனையவுரு வில்லான் விடுமலரே
வைத்தகரை யோதடுக்க மாட்டாதே - நித்தநித்த
மங்கமுகங் காத்துறைசை யம்பலவா ணன்புயத்திற்
செங்கழுநீர்த் தாரனையே தேடு.

[இத் தையல் நைய - இப்பெண் மெலியும்படி. மலரேவை - மலர்ப்பாணத்தை. தகர் - ஆடு. அனையே செங்கழுநீர்த்தாரைத் தேடு.]

உ. இந்தவச மந்தவசந் தன்மலைதற் கேதுசெயு
நொந்தவச முற்றுட்கே நோக்குங்காற் - பைந்தொடியா
யாண்டகுருத் தென்றுறைசை யம்பலவா ணன்புயத்திற்

[இந்த அசம் - இந்தஆடு. வசந்தன் - மன்மதன். பைந்தொடி - விளி. செங்கழுநீர்ப்பூவை ஆய்வாயாக; ஆய்தல் - ஈண்டுத் தேடிக்கொணர்தல்.]

திருவொற்றியூர்ச் சிவபெருமான்மீது இயற்றிய வெண்பா.

வல்லவகு ளத்திருக்கு மன்னவா வாசமலி
நல்லவகு ளத்திருக்கு நாதனே - மெல்ல
வடிவாளைக் கொண்டமண வாளா கணிச்சி
வடிவாளைக் கொண்டெனிடர் மாற்று.

[குளத் திருக்கு - நெற்றிக்கண். வகுளம் - மகிழமரம்; இது திருவொற்றியூர்த் தலவிருக்ஷம். கணிச்சி - மழு. வடிவாளை - வடிவாளென்னுந் திருநாமமுடைய உமாதேவியாரை, கூரிய ஆயுதத்தை.]

சென்னையிலிருக்குநாட்களுள் ஒருநாள், இவர், தம்மையழைத்த சில பிரபுக்களுடன்சென்று திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதிப்பெருமாளைத் தரிசித்து, அவர்கள் விரும்பியவண்ணம் அப்பெருமாள்மீதுபாடிய கட்டளைக் கலித்துறை.

பாங்கிகூற்று.

திருவல்லிக் கேணி வடிவந் தனஞ்சொற்கட் சீர்ச்சிலம்ப
திருவல்லிக் கேணி யலருமுன் னேயருள் செய்யவெழுந்
திருவல்லிக் கேணிபஞ் சொல்லிற்கண் முத்தங்கள் சிந்துங்கண்டாய்
திருவல்லிக் கேணி மருவிய சங்கத் திருக்கரனே.

[திருவல்லிக்கேணி மருவியசங்கத் திருக்கரனே—, திரு வல் இக்கு ஏணி-முறையே திருமகளையும் சூதாடுகருவியையும் கரும்பையும் மானையும்போன்ற, வடிவம் தனம் சொல் கண் - வடிவத்தையும் தனத்தையும் சொல்லையும் கண்ணையுமுடைய, சீர் சிலம்பு அதிர் உ வல்லிக்கு - சிறப்புப்பொருந்திய சிலம்புகள்முழங்கப்பெற்ற இந்தக் கொடிபோல்வாளாகிய தலைவிக்கு, ஏணி அலரும் முன்னே - சூரியன் உதிக்குமுன்னே, அருள்செய்ய எழுந்திரு—; வல்லிக்கேள் - விலங்கைப்போலச் சூழ்ந்துவருத்தும் உறவினர், நிபம் சொல்லின் - பழிமொழிகளைக் கூறுவாராயின், கண் முத்தங்கள் சிந்தும்—. ஏணியென்பது எல்லையையுணர்த்த, எல்லையென்பது சூரியனையுணர்த்திற்று. நிபம் - திசைச்சொல். 'வல்லிக்கேள்' என்பதை வலிய இந்தக்கேளென்றும், உயிர்முதலாக்கி அல் இக்கேளென்றும் பிரித்துப் பொருள்கூறுதலுமுண்டு.]

பின்பு இவர் அவர்களுடன் தம்மிடஞ்சென்றபொழுது, ஆங்குள்ளோர்களிற் சிலர், 'விஷ்ணுவைத் தேவர் பாடலாமோ' என்றுவினவ, இவர், 'நான் சிவவிஷயமாகவேதான் பாடினேன்' என்று சொல்லி, உடனே அச்செய்யுளின் முன்புள்ள எல்லாப்பாகத்திற்கும் முன்பு குறித்தவாறே பொருள்கூறி, 'சங்கத் திருக்கரனே' என்பதை மட்டும் சங்கம் திருக்கு அரனே என்றுபகுத்து, நெற்றிக்கண்ணை யுடைய சிவபெருமானே யென்று வேறு பொருள்கூறித் தமது ஆற்றலை விளக்கி அவர்களுக்குப் பெருவியப்பை விளைவித்தனர். [சங்கம் - நெற்றி.]

இங்ஙனம் சமயோசிதமாக இவரியற்றிய தனிச்செய்யுட்களும் கீர்த்தனைகளும் பற்பலவுண்டென்பர்.

[இவர் நூல்களுக்குள்ள மதிப்பு.]

இவரியற்றிய நூல்களுட் கலைசைச்சிலேடைவெண்பா ஷை ஆதீனத்தும் அதிற்கல்விபயின்ற தமிழ்வித்துவான்களிடத்தும் கற்கும் மாணாக்கர்களுக்கு முதன்முறை கற்பிக்கப்பட்டுவருகின்றது. திருவாவடுதுறைக்கோவைச் செய்யுட்கள் அத்தலத்து ஸ்ரீ தியாகேசப்பெருமான்சந்நிதியில் ஒவ்வொரு தினத்திலும், திருக்குற்றாலச்சித்திரசபைத்திருவிருத்தமும் திருத்தணிகைத்திருவிருத்தமும் ஆதீனத்தலைவர்கள் வருடந்தோறும் ஐப்பசிமாதத்திற் காலையிற் காவேரிஸ்நானஞ்செய்து மீண்டுவருங்காலத்திலும், அம்பலவாணதேசிகர் ஆனந்தக்களிப்பு அவர்கள் சிவதரிசனமும் குருதரிசனமுஞ்செய்து மீண்டு வந்து ஒடுக்கத்திற் பீடத்திருந்து அடியார்களுக்கு விபூதியளிக்குங்காலத்திலும், மற்றவைகள் உரிய ஒவ்வொருகாலத்திலும் ஓதுவார்களால் ஓதப்பட்டு வருகின்றன. இவ்வழக்கம், இவ்வாதீனத்தலைவர்கள் முதலியோர்கள் இவருடைய நூல்களிடத்துவைத்திருந்த நன்மதிப்பைச் செவ்விதாக விளக்குகின்றது.

[இன்னாரின்னார் ஒப்பர்.]

முதன்முறை ஒருவகையாகப் பொருள்கொள்ளும்படி இயற்றிய செய்யுளுக்குப் பின்பு சமயோசிதமாக வேறுபொருள்கூறிப் பிறரை மகிழ்விக்கும் ஆற்றலால் காளமேகப்புலவர்முதலியோர்களையும், இயற்றமிழிசைத்தமிழ்க்குரிய பலவகையானசெய்யுட்களையும் நூல்களையும் எளியநடையினவாகச்செய்யும் வன்மையால் மேலகரம் திரிகூடராசப்பக்கவிராயர், சீகாழி அருணாசலகவிராயர் முதலியோர்களையும் இவர் ஒப்பர்.

இவரியற்றியநூல்கள்பல; அவற்றுள் இப்பொழுது தெரிந்தவை.

க. திருவாவடுதுறைக்கோவை.
உ. திருக்கலைசைக்கோவை.
௩. திருக்கலைசைச்சிலேடைவெண்பா.
௪. திருக்கலைசைச்சிதம்பரேசர்சந்நிதிமுறை.
(இதிற்பத்தொன்பது பிரபந்தங்கள் அடங்கியுள்ளன.)
௫. திருக்கலைசைச்சிதம்பரேசர்வண்ணம்.
௬. திருக்கலைசைச்சிதம்பரேசர்பஞ்சரத்தினம்.
௭. திருக்கலைசைச்சிவகாமியம்மைபஞ்சரத்தினம்.
௮. திருக்கலைசைச்சிதம்பரேசர்பரணி.
௯. திருக்கலைசைச்சிதம்பரேசர்கட்டியம்.
௧௦. திருக்குற்றாலச்சித்திரசபைத்திருவிருத்தம்.
௧௧. பழநிக்குழந்தைவேலர்பஞ்சரத்தினமாலை.

௧௨. ஸ்ரீசுப்பிரமணியர்திருவிருத்தம்.
௧௩. திருத்தணிகைத்திருவிருத்தம்.
௧௪. வடதிருமுல்லைவாயிற் கொடியிடையம்மை பிள்ளைத்தமிழ்.
௧௫. ஆயலூர் முருகர்பிள்ளைத்தமிழ்.
௧௬. திருச்செந்திற்சந்தவிருத்தம்.
௧௭. ஆவினன்குடிக்கைலாயநாதர் பதிற்றுப்பத்தந்தாதி.
௧௮. திருமாளிகைத்தேவர்விருத்தங்கள்.
௧௯. திருச்சிற்றம்பலதேசிகர்சிந்து.
௨0. திருச்சிற்றம்பலதேசிகர் சந்தவிருத்தம்.
௨௧. அம்பலவாணதேசிகர் பஞ்சரத்தினமாலை.
௨௨. அம்பலவாணதேசிகர்வண்ணம்.
௨௩. அம்பலவாணதேசிகரானந்தக்களிப்பு.
௨௪. சிவஞானமுனிவர்துதிவிருத்தங்கள்.
௨௫. சிவஞானமுனிவர்கீர்த்தனை.

மேற்கூறியவற்றுள் ஸ்ரீ சுப்பிரமணியர் திருவிருத்தமும், திருத்தணிகைத் திருவிருத்தமும் தம்பாலன்புடைய இருவர்களுக்கு முறையே நேர்ந்திருந்த குட்டரோகத்தையும் அந்தகத்தன்மையையும் நீக்கியருளும்படி முருகக்கடவுளைப்பிரார்த்தித்து முறையே இவராற் பாடப்பட்டனவென்பர்.

[திருக்கலைசை - தொட்டிக்கலை; ஆயலூர் - தொண்டைநாட்டிலுள்ளதோரூர்; ஆவினன்குடி - இங்கே பழநியன்று; இவ்வூர் தொண்டைநாட்டிற் பாலாற்றின் வடகரைக்கண்ணதென்று ஷை நூலின் காப்புச்செய்யுள் தெரிவிக்கின்றது; இவ்வூர்ப் பதிற்றுப்பத்தந்தாதிக் கையெழுத்துப் பிரதியில், 'கீலகஹு தைமீ ௨௧௨ சுக்கிரவாரம், உத்தரநக்ஷத்திரத்தில் இந்நூல் அரங்கேற்றப்பட்டது' என்ற வாக்கியம் எழுதப்பட்டுள்ளது.]

[இவர் வரலாறு தெரிந்துகொண்டதற்கு ஆதாரங்கள்.]

திருவாவடுதுறையாதீனத்தில் ௧௬ - ம் பட்டத்திலிருந்த ஸ்ரீமத் சுப்பிரமணிய தேசிகரவர்களாலும், ஷை ஆதீனவித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் முதலியோர்களாலும், பின்னும் பலர்கூறிய கர்ணபரம்பரைச் செய்தியாலும், இவரியற்றிய நூல்கள் வரைந்துள்ள கையெழுத்துப்பிரதிகளிலிருந்த குறிப்புக்களாலும், ஷை நூல்களாலும் இவர்வரலாறு ஒருவாறு தெரிந்தது.

[இவருடைய நூல்கள்கிடைக்குமிடம்.]

இவரியற்றிய நூல்கள்யாவும் ஒருங்கே எங்கும் கிடைக்கவில்லை; அவற்றுள் சிற்சிலநூல்கள் திருவாவடுதுறைப் புஸ்தகசாலையிலும், ஷை ஊரிலுள்ள சில ஓதுவார்கள்வீடுகளிலும், சென்னை இராஜாங்கத்துப் பழைய கையெழுத்துப்புஸ்தகசாலையிலும் (Madras, Government Oriental Manuscripts Library.), மதுரைப் பாண்டியன் புஸ்தகசாலையிலும், வேறுசிலவிடங்களிலும் இப்பொழுதுகிடைக்கும்.

# நூலாராய்ச்சி.

இக்கோவையில் நூலாசிரியர் பலவண்ணமாக எடுத்தாண்டு பாராட்டியிருக்கிற இத்தலவிசேடங்களை முதலில் அறிந்துகொள்ளுதல் இந்நூலைப் படிப்போர்க்கு இன்றியமையாததாதலின், அவை, இத்தலபுராணமுதலியவற்றிலிருந்தெடுத்து இங்கே எழுதப்படுகின்றன.

தலவிநாயகர்கள் இருவர். (க) துணைவந்தவிநாயகர்; இவர் அம்பிகை பசுவடிவங்கொண்டு வந்தபொழுது துணையாகவந்தவர். (உ) அழகியவிநாயகர்; இவர் அகத்தியமுனிவர்க்குப் பஞ்சாக்ஷரோபதேசம் செய்தவர்.

ஸ்வாமியின் திருநாமங்கள்:—ஸ்ரீ ஸ்வயம்வியக்தேசுவரர், பிரகாசமணிநாதர், மாசிலாமணியீசர், கோமுத்தீசர், கோகழிநாதர், அணைத்தெழுந்தநாயகர், பூகைலாஸேசுவரர், புத்திரத்தியாகர், போதிவனநாதர், போதியம்பலவாணர், மஹாதாண்டவேசுவரர், அர்த்தத்தியாகர், முத்தித்தியாகர், சிவலோகநாயகர் என்பனவும், இவற்றின் வேறு பரியாய நாமங்களுமாம்.

தேவியார் திருநாமங்கள் :—அதுலகுசநாயகி, ஒப்பிலாமுலையம்மை, ஒப்பிலாள் என்பன.

தலத்தின் திருநாமங்கள் :—கோமுத்தி, கோகழி, திருவாவடுதுறை, பூகைலாஸம், நந்திநகர், தியாகபுரம், போதிவனம், அரசவனம், மஹாதாண்டவபுரம், வேதபுரம், ஸித்தபுரம், நவகோடிஸித்தபுரம், முக்திக்ஷேத்திரம், சிவபுரம் என்பனவும், இவற்றின் வேறுபரியாயநாமங்களுமாம்.

தீர்த்தங்கள்மூன்று :—(க) முத்திதீர்த்தம் அல்லது கோமுத்திதீர்த்தம், (உ) கைவல்யதீர்த்தம், (ங) பத்மதீர்த்தம் என்பன. இவை முறையே திருக்கோயிலின் எதிரிலும், திருக்காவிரியிலும், ஸ்ரீ கொங்கணேசுவரர் கோயிலின் பக்கத்திலுமுள்ளன.

விருக்ஷம் :—திருவரசுகள். படர்ந்துவிளங்குதலால் இவை படர்ந்த அரசுகளென்றும், நிலவரசுகளென்றும் வழங்கப்படும்.

ஸபை :—போதியம்பலம் அல்லது அரசம்பலம்.

நந்தி :—தருமநந்திதேவர்.

இத்தலத்தில் சிவபெருமான் நிகழ்த்தியருளிய விசேடங்கள் :—

க. லீலார்த்தமாகநேர்ந்த பசுவடிவத்தை உமாதேவியார்க்குநீக்கி அணைத்தெழுந்துநின்று இத்தலத்தைக் கைலையங்கிரியாகக் காட்டினர்.

உ. தமதுகட்டளைப்படி தேவர்கள் படர்ந்த அரசவிருக்ஷங்களாகத் தோன்றிவிளங்க அவற்றின் நிழலில் எழுந்தருளியிருந்தனர்.

௫. மகப்பேறுகருதிவந்த முசுகுந்தசக்கரவர்த்திக்கு இந்தத் தலத்தைத் திருவாரூராகவும் தம்மைத் தியாகேசராகவுங் காட்டிப் புத்திரப்பேறும் அளித்தனர்.

௬. தம்மைப்போற்றிய தருமதேவதையை இடபவாகனமாகக்கொண்ட தன்றிச் சந்நிதியில் அரசவிருக்ஷத்தின் நிழலில் கோயில்கொண்டிருக்கும்படிக்கும் வரமளித்தனர்.

௫. தேவர்களும் முனிவர்களும் செய்த பிரார்த்தனைக்கு இரங்கி அரசவிருக்ஷத்தினிழலில் அமைந்த அம்பலத்தில் மஹாதாண்டவம் புரிந்தனர்.

௬. திருமூலநாயனாரைத் தடுத்தாட்கொண்டு ஆகமஸாரமாகிய திருமந்திரத்தை வெளிப்படுத்தத் திருவருள்புரிந்தனர்.

எ. திருஞானசம்பந்தமூர்த்திநாயனாருக்குப் பொற்கிழியளித்தனர்.

அ. சில முனிவர்களுக்குச் சிவஞானோபதேசம் செய்தருளினர்.

௯. சில அந்தணர்களுக்கு வேதத்தை ஓதியருளினர்.

க0. போகர் முதலிய ஸித்தர்களுக்கும் நவகோடி ஸித்தர்களுக்கும் அவர்கள் விரும்பியவண்ணம் அட்டமாஸித்திகளையும் பிறவற்றையும் அருளினர்.

[இந்த விசேடங்களால், மேற்காட்டிய ஸ்வாமியின் திருநாமங்கள் முதலியவற்றுட் பெரும்பாலன காரணப்பெயர்களாதலை அறிந்துகொள்க.]

அன்றியும் இத்தலத்தில் கோச்செங்கட்சோழநாயனார் திருப்பணிசெய்து பேறுபெற்றனரென்றும், ஸித்தர்கள் பலர் எப்பொழுதும் தங்கியிருக்கின்றார்களென்றும் புராணங் கூறும்.

ஸ்ரீ அணைந்தெழுந்தநாயகர்:—இவர் உமாதேவியாரை அணைந்தெழுந்த கோலமாக எழுந்தருளியிருப்பவர். உத்ஸவாந்தத்தில் கோமுத்திதீர்த்தத்தில் தீர்த்தங்கொடுத்தருள்பவர் இவரே.

ஸ்ரீ தியாகராஜர்:—முசுகுந்தருக்குச் சிவபெருமான் திருவாரூர்த்தியாகராஜராகக் காட்சிகொடுத்ததுதொடங்கி இவர்சந்நிதி இங்கே உளதாயிற்று; இவர் வீரசிங்காதனமுடையார். இவருடையநடனம் ஸுந்தரநடனம். உத்ஸவத்தில் திருத்தேரூர்ந்தருள்பவர் இவரே. இவரதுபந்தர்க்காட்சி மிக அற்புதமானது. திருவாரூரில் ஸ்ரீ தியாகராஜர்க்குள்ள சிறப்புக்கள் இங்கும் உள்ளன.

இதுகாறுங்கூறிய விசேடங்கள் இக்கோவையில் பலவண்ணமாக அங்கங்கே அமைந்திருப்பவற்றுள், ஒவ்வொருபகுதி இனி எடுத்துக்காட்டப்படும்:—

(ஸ்ரீ மாசிலாமணியீசர் உமாதேவியாருடைய பசுவடிவைநீக்கி அணைந்தெழுந்தது.)

(கச) "கோவைக் கரந்தொப்பி லாமுலையைக், காட்டி நின்றீர்"

(கசரு) "அரகூரணைந்த, நாயக னார்திருக் கோலமுமாய்"

(௫அ௫) "ஆனார் துவச னணைந்தெழு நாயகன்."

(முசுகுந்தருக்குப் புத்திரப் பேறளித்தது:)

(உஎ) "மின்னுக் கதிர்வடி வேன்முசு குந்தன்முன் வேண்டவருள்"

(உசக) "அளியா வடுதுறைப் புத்ரத் தியாகர்."

(மகாதாண்டவம்புரிந்தது:)

(கச) "துறைசை, யாட்டினர்"

(உ௦ரு) "ஆட்கொண் டாடுந் துறைசையெங் கோமுத்தி யப்பர்"

(௬அ௬) "கோமுத்திக் கூத்தர்"

(சசக) "குனித்தருள் கோமுத்தி நாதன்."

(ஆகமஸாரமாகிய திருமந்திரம் வெளிப்பட்டது:)

(ககரு) "ஆகமநற், சரக்கார் துறைசை"

(உகசு) "மூலாக மங்கண் முழங்குந் துறைசை."

(திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்க்குப் பொற்கிழியளித்தது:)

(க௬ச) "காழிமன் னர்க்கருள் செம்பொற் றியாகர்"

(கரு௬) "தோணிபுரத், திறையவ ளுர்சொன்ன செந்தமிழ்க் காக வினி தளித்த, நிறையுல வாக்கிழிச் செம்பொற் றனமது நேரிழையாய், குறையினு முன்பொற் றனமொரு நாளுங் குறைவிலதே"

(உருக) "சொர்ணத் தியாகரிற் காணநல்க, வயலார் கருதுகின்றார்"

(உஅரு) "வண்டார் செருந்தி தியாகேசர் நல்குல வாக்கிழிபோற், றண்டா தவிழ்பொன் றருமா தூரர்"

(௬உச) "சண்பை யாண்டகைக்கோ, ராயிரம் பொன்னருள் சொர் ணத் தியாகர்"

(சருக) "ஒப்பி லாமூலே நாயகரும், பொன்னுலன் றேபுகழ்ப் பேர் படைத் தாண்டனர் பொற்பசே."

(முனிவரா வழிபட்டது:)

(உசச) "உயருந் தவத்தினர் சொர்ணத் தியாகரோ ராயிரநற், பெய ரும் பரசுந் துறைசை."

(அவர்களுக்கு ஞானோபதேசம்புரிந்தது:)

(சக) "பண்பினர்க்கு, ஞானத் திரளருள் செம்பொற் றியாகர்."

(வேதம் ஓதியருளியது:)

(எஉ) "இருக்காலுங் கோமுத்தி."

(கோச்செங்கட்சோழநாயனார்க்கு அருள்செய்தது:)

(உ௦க) "கதிர்மகுட, முடிவளர வன்றெழுஞ் செம்பொற் றியாகர்"

(உகரு) "சென்னிக் கருள்செய்த சொன்னத் தியாகர்"

(சஉக) "ஆரனை யாதருள் கோமுத்தி யீசர்."

(இங்கே ஸித்தர்கள் வாஸஞ்செய்தல்:)

(கஉ) "எத்திறச் சித்தரும் வந்தறியாச், சித்திரக் காவுமுண்டு"

(எஎ) "நவகோடிசித்த, ரிருக்குந் துறைசைப் பதிமாசி லாமணி யீசர்வெற்பி, லுருக்குமச் சித்துச் சுனைநானு மாடுவன்"

(உகரு) "துறைசையில்வாழ், சித்தர்தம் விஞ்சையின்."

(தீர்த்தவிசேடங்கள்:)

(சஎ) "திருத்தத் துறைசை"

(எஉ) "திருக்கா விரித்திருத் தம்படிந்தோ."

(திருக்காவிரியினியல்புகள்:)

(சுஎ) "இருகோ டிவர்புனற் காவிரி"

(கக0) "திருத்துறைசைக், காவேரி யங்கயற் கண்ணுள்"

(உகசு) "உன் பதிவினவி, யங்கே வரவெண்ணி னேம்பொன்னி யாற்றினுக் கஞ்சினமே"

(உசுஎ) "காவிரி யாடி யிரவுதங்கி"

(ருசுசு) "கான்சென்ற வெப்பாறச் சீதளக் காவிரி தோய்ந்து"

(ச0எ) "பொன்னி, நுரையா மெனும்வெள் ளுடுக்கை யுடீஇ"

(சஉ0) "துறைசை, மங்கைய ராடமணங்கூர்பொன் னித்துறைவா"

(சஉக) "காவிரி தோய்ந்துவப் பார்தோய்வ ரோசிறு காற்புனலே."

(திருவரசுகளின் இயற்பெயர்:)

(ரு0) "நிலவரசார், தலக்கோயில்."

(அவற்றின் நிழலில் ஸ்வாமி எழுந்தருளியிருத்தல்:)

(உஅரு) "அரசிடத்தி, னிடுமென் செம்பொற் றியாகேசர்"

(ருஎ0) "அரசந், தருவது சேர்திருக் கோமுத்தியீசர்"

(சருக) "ஆண்டனர் பொற்பரசே." (சிலேடை)

(அவை சந்நிதியினிற்றல்:)

(ருகஉ) "கோமுத்தி நாதன்முன் போதி யருள்பெறுவா, னெடியவ னின்றென நிற்குந்துறைசை."

(மகப்பேறுகருதினோர் அவற்றை வலம்வருதலும், அவற்றினடியில் வரங்கிடத்தலும், சூளுறுவோர் அவற்றை நோக்கிக்கூறுதலும்:)

(ருஉஅ) "இணையிலெம் மூரசல் லரசினைச் சூழுங்கொ லென்றனர்"

(ருருக) "புத்ரத் தியாக ரரசடிக்கீழ், வரங்கிடந் தேழை யுயிர்த்தே னொருமகள்"

(௬கக) "செம்பொற் றியாகர் திருத்துறைசை, வாயழ காரு மரசினை நோக்கி மறைமொழிபோற், காயழல் வேலன்பர் யானக லேனென்று கட்டுரைத்து, நீயழச் சென்றனரே."

(ஸடை:)

(கக) "துறைசைமன்றிற், றீட்டிய பாவையன்னீர்"

(கஎஉ) "மன்றேறி யாடிய செம்பொற் றியாகர்"

(கஎ௪) "செம்பொற் றியாகரைத் தண்வரைக்கோ, தண்டாமன் றுவெனப் போற்றன்பர் வாழ்துறைசை"

(௬௫௬) "துறைசைமன்று, ளுடக மாடிய செம்பொற் றியாகர்."

(ஸ்ரீ தியாகராசருடைய திருநடனம்:)

(௪௫௫) "தொம்மென வாட்டயர் சொர்ணத் தியாகர்."

(அவருடைய வீரசிங்காதனம்:)

(கக) "கோகழிச் செம்பொற் றியாகர்வைகு, மம்மணி யாசனங் கண்டு ரவங்க ளடைவுறவே, தம்முது காற்பிற பல்லா யிரமுகந் தாங்கிநிற்கு, மிம்மட வார்த மிடைக்கிடை யாவள மெய்துதற்கே."

(அவருடைய சிலம்பொலி:)

(க௬௬) "செம்பொற் றியாகேசர் பாதச் சிலம்பொலிபோ, லேர்தங்கு தார்மன்னர் தேர்மணி யோசை யிருசெவியும், வேர்தங்கு மாறென வீழ்குந"

(உஅ௪) "சிலம்புஞ் சிலம்படிச் செம்பொற் றியாகர்."

(அவருடைய பந்தர்க்காட்சி:)

(௬௪) "சிற்பரர் செம்பொற் றியாகேசர் காட்சியிற் செல்வமின்னார், பற்பலர் போற்றிடுங் கற்பகக் கொம்பின் பரிசு."

(திருவிளக்குச்சிறப்பு:)

(கஅக) "துறைசைப், பதிவைத்த தீபமன்னாள்"

(௬௫அ) "கோமுத்தி யீசன் றுறைசை விளக்கனையாள்."

(அன்பர்கள் தோடுகட்டிச்சாத்தும் பணிச்சிறப்பு:)

(உஅ) "பறவாக் குளவியை வண்டோடு கட்டிப் பணித்திடவே."

இப்படியே மற்றவிசேடங்களும் இந்நூலுட் பலஇடங்களிற் பாராட்டப் பட்டிருத்தலைக் கண்டுகொள்க.

மேலும், இந்நூலாசிரியர் இக்கோவையில் ஸ்ரீ பஞ்சாக்ஷர தேசிக நுடைய பெருமையையும், அவர் எழுந்தருளியிருக்கும் மடத்தின் சிறப்பையும், அதிலுள்ள திருக்கூட்டத்தாரின் இயல்பையும், புலவர்களின் விசேடத்தையும், தமிழின் வளர்ச்சியையும், தமிழ்வேதம் ஓதப்படுதலையும், ஓதுவார்களிருத்தலையும் கூறியிருக்கும் அருமை மிகப் பாராட்டற்பாலது. அவை வருமாறு:—

(ஸ்ரீ பஞ்சாக்ஷரதேசிகர்பெருமை :)

(௧௭௧) "நறுந்துறைசை, யஞ்செழுத் தெங்குரு நாதன் றனதடி யார்க்கொழித்த, சஞ்சிதம் போலத் தினைமுற்று மாள"

(௪௫௭) "எங்கள்பஞ் சாக்கர தேசிகன் மாமரபு வாழி."

(மடம் :)

(௩௪௧) "மெய்ஞ்ஞானச் செல்வர் திருமடமும்."

(திருக்கூட்டத்தாரினியல்பு :)

(௧௨௪) "அவநெறியிற், செல்லார்கள் வாழுந்துறைசை"

(௨௬௬) "தவமேரு வார்தொண்டர் வாழ்திரு வாவடுதண்டுறை"

(௩௩௬) "தியாக ரடிவணங்கித், தொக்குர வோர்மன்றுறைசை"

(௩௫௦) "திருத்துறைசை, யுற்றிடு மாதவர் போலத் தவஞ்செய்து."

(புலவர்களின்விசேடம் :)

(௧௪௦) "ஆவடுதுறை யொண்புலவோர், படிக்கத் தகுங்குள கக்கவி போலவிப் பைந்தழைநீ, முடிக்கத் தகும்"

(௪௩௨) "செந்நாப் புலவர் துதிக்குந் திரவியத் தியாகர்."

(தமிழின்வளர்ச்சி :)

(௪௪) "முத்தமிழ் தெள்ளுந் திருவா வடுதுறை"

(௩௭௦) "தமிழ்த் துறைசை"

(௪௯௩) "தமிழரசூர்."

(தமிழ்வேதம் ஓதப்படுதல் :)

(௩௧௦) "சுகந்தா விலாத்தமிழ் வேதங்க ளோதுந் துறைசை."

(ஓதுவார்களிருத்தல் :)

(௧௬௦) "துறைசை, யூரோது வார்வினை வீழ்ந்தென." (சிலேடை)

## பழையநூல்களின் கருத்துக்கள்பல இந்நூலுள் அங்கங்கேவந்துள்ளன;

### அவற்றுட்சில வருமாறு:—

| பழையநூல்கள். | திருவாவடுதுறைக்கோவை. |
|---|---|
| தொல். பொருளதிகாரம்.<br>ககரு. "உயிரினுஞ் சிறந்தன்று நாணே நாணினுஞ், செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று" | ருரு௦.—'உயிரிற் சிறந்தன்று நாண்மட வார்களுக் கோததனிற், செயிரற்ற கற்புச் சிறந்தன்று' |
| திருவாசகம், திருவெம்பாவை,<br>கக. "எங்கெழிலென் ஞாயிறெமக்கேலோ ரெம்பாவாய்" | ருஅஎ.—'இந்நாட் கதிரவ னெங்கெழி லென்னெனு மின்புதந்தாய்' |
| திருக்கோவையார்,<br>கருக. "ஏனற் பசுந்தினை யென்றூழ்க் கழிய வெழிலி யுண்ணிச், கானக் குறவர்கள் கம்பலை செய்யும்வம் பார்சிலம்பா"<br>ஐங்குறுநூறு,<br>உருக. "குன்றக் குறவ னார்ப்பி னெழிலி, நுண்ப லழிதுளி பொழியு நாட" | உஅஅ.—'ஐவனம் வித்திய செவ்வேட் பராய்நம ரார்த்திடநீ, னைவன மேகஞ் சொரிந்தது' |
| திருக்கோவையார்,<br>ருஅஎ. "வில்லாண் டிலங்கு புருவ நெரியச்செவ் வாய்துடிப்பக், கல்லாண் டெடேல்கருங் கண்சிவப் பாற்று கறுப்பதன்று, பல்லாண் டடியே னடிவலங் கொள்வன் பணிமொழியே" | சகச.—'அறிந்தில ரென்னக் கொதித்துப் புகையுயிர்த் தம்மவென்மே, லெறிந்தகற் போது மினிக்கல்லெடேலெம் பிராட்டி......உன தாள்பணிவேன்' |
| நற்றிணை,<br>கசரு. "ஒரை யாயமு நொச்சியும்"<br>கஅச. "மணியேர் நொச்சியுந் தெற்றியும்"<br>ரு௦ரு. "மயிலடி யிலைய மாக்குர னொச்சியும்"<br>தஞ்சைவாணன்கோவை,<br>ருருரு. "பெருஞ் சிற்றில்லமே, வயலைக் கொடிநொச்சி மண்டபமே" | ருருஉ.—'சிற்றில்லமேநொச்சிப் பந்தர்களே' |
| நற்றிணை,<br>கசக. "சிலரும் பலருங் கடைக்கணோக்கி, மூக்கி னுச்சிச் சுட்டுவிரல் சேர்த்தி, மறுகிற் பெண்டி ரம்ப றூற்றச், சிறுகோல் வலந்தன ளன்னை யலைப்ப, வலந்த | ருருக.—'வன்புடன் சுட்டுவிரன்மூக்கி னுச்சியில் வைத்துப்பெண்டிர், கொன்பழிதூற்றப் பயந்தார் சினத்திக் |

| பழையநூல்கள். | திருவாவடுதுறைக்கோவை. |
|---|---|
| னென்.........கொண்கனொடு, செலவயர்ந் திசினல் யானே, யலர்சுமந் தொழிகவிவ் வழுங்க லூரே" | குளித்துநின்றேன், ......அன் பரொ டியான்செல்வ னிவ்வூ ரொழிக வலர்சுமந்தே' |
| குறுந்தொகை, கஅ. "இன்ன ளாயின ளன்னுத லென்றவர்த், துன்னச் சென்று செப்புநர்ப் பெறினே, நன்றுமன் வாழி தோழிநம் படப்பை, நீர்வார் பைம்புதற் கலித்த, மாரிப் பீரத் தலர்சில கொண்டே" | உ௩௬.—'ஊரற்கு....பீரத் தலர்சில கொண்டின்ன ளாயி னள் பெண்கொடியென், றீரத் தரைகுநர் தாமுள ரேலுய்யு மென்னுயிரே' |
| ஐங்குறுநூறு, கரு௧-க௬0.வெள்ளாங்குருகு-செய்த னிலத்திற்குரியதோர்பறவை (நற். எ0.) | க உ ௩. — 'வெள்ளாங் குருகு' |
| ஐங்குறுநூறு, உ௧௪. "நாட, வினிதுசெய் தனையா லுந்தை வாழியர், நன்மனை வதுவை யயர விவள், பின்னிருங் கூந்தன் மலரணிந் தோயே" | ௩0௪.—'தையலுக் கப் போ தலர்புனை யுன்கைநலஞ், கைப்போதில் வேலனும் வள் ளியும் போலுற்ற காட்சியின, லிப்போ தறிந்தன மாலென் றும் வாழி யிறையவனே' |
| ஐங்குறுநூறு, ௩௪௪. "குரவம் பயந்த, செய்யாப் பாவை" | ௩௫௬.—'ஆடவரீர்குரவம் பாவைகாள்' |
| கலித்தொகை, அ௧. "ஒருயிர்ப் புள்ளி னிருதலை யுள் ளொன்று, போரெதிர்ந் தற்றால்" திருக்கோவையார், கஉ-ம் பாட்டின் விசேட வுரை. 'யானென்புழி இருதலைப்புள்ளின் ஒருயிரேனுகியயான்' | உ௧க.—'ஒன்றுமிருதலைப் புள்ளி னிருவர்க்கு மோருயி ரே, யென்றுசொன் னோர்நம் வினையாற் பிரிந்தனர்' |
| கலித்தொகை, ௧. தாழிசைகள்:<br>பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை [யு மலையுளே பிறப்பினுமலைக்கவைதாமென்செய் நினையுங்கா லும்மக ளுமக்குமாங் கனையளே.<br>சீர்கெழு வெண்முத்த மணிபவர்க் கல்லதை நீருளே பிறப்பினு நீர்க்கவைதா மென்செய்யுந் தேருங்கா லும்மக ளுமக்குமாங் கனையளே.<br>ஏழ்புண ரின்னிசை முரல்பவர்க் கல்லதை யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதாமென்செ [ய்யுஞ் சூழுங்கா லும்மக ளுமக்குமாங் கனையளே.<br>(திருக்கோவையார், உ௪அ) | ௩௬க. — 'வருணத்திற் போதுந் தருத்தரும் போது மலர்ந்தவந்தத், தருணத்திற் சூடுநர்க் கல்லா தவைக்கவை தாமென்செயுங், கருணைத் திர வியத் தியாகேசர் கோகழிக் காரிகையா, யருணத் திலவித ழாருமந் நீர்மைய ரன்பினர்க் கே' |

| பழையநூல்கள். | திருவாவடுதுறைக்கோவை. |
|---|---|
| அகநானூறு,<br>கசு, "பொலந்தொடிப் புதல்வனைத், தேர்வழங்கு தெருவிற் றமியோற் கண்ட, கூரெயிற் றரிவை குறுகி யாவருங், காணுந ரின்மையிற் சேர்த்தனள் பேணிப், பொலங்கலஞ் சுமந்த பூண்டாங் கிளமுலை, வருக மாளவென் னுயிரெனப் பெரிது வந்து, கொண்டன ணின்றோட் கண்டு..... நீயுந் தாயை யிவற்கென யான்றற், கரைய வந்து விரைவனள் கவைஇக், களவுடம் படுநரிற் கவிழ்ந்துநிலங் கிளையா, நாணி நின்றோ ணிலைகண் டியானும், பேணினே னல்லனோ" | சஉஉ.—'பொன்மறு கோடித் தனிவிளை யாடும் புதல்வற் புல்ல, வுன்மக னேயிவ னையுறனீயு முவனன்னையே, நின் மனை யேயிது வாவென நாணி நிலங்கிளையாச், சொன்மறந் தேகினள்' |
| அகநானூறு,<br>உச. "மங்குன் மாமழை தென்புலம் படரும், பனியிருங் கங்குல்" | சசச.—'தென் றிக்கோட மேக முருக்கமலம், படுங்கால மென்னக் கருகப் பெருகும் பனியினையே' |
| பட்டினப்பாலை,<br>க-சு. "வசையில்புகழ் வயங்குவெண்மீன், றிசைதிரிந்து தெற்கேகினுந், தற்பாடிய தளியுணவிற், புட்டேம்பப் புயன்மாறி, வான்பொய்ப்பினுந் தான்பொய்யா, மலைத்தலைய கடற்காவிரி" | கஎரு.—'என்றும், பொய்யா தொழுகும் புனற்பொன்னி'<br>உகரு. 'பொன்னித்தெண்ணீத்தமு நம்மன்பர் வாய்ச் சொல்லும் பொய்ப்பதின்றால்' |
| திருக்குறள்,<br>கக0க. "கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு. மொண்டொடி கண்ணே யுள" | சுரு.—'ஐ, வாயிலும் கொள்ளு மருந்தாகு வாருயிம் மாணிக்கமே' |
| திணைமாலை நூற்றைம்பது,<br>சுரு. "தான்றாயாக் கோங்கந் தளர்ந்து முலைகொடுப்ப, வீன்றாய்நீ பாவை யிருங்குரவே - யீன்றாண், மொழிகாட்டா யாயினு முள்ளெயிற்றாள் சென்ற, வழிகாட்டா யீதென்று வந்து" | ருசுரு.—'விழிகாட்டுநெற்றியர் கோமுத்தி யீசர் விளங்கு பொன்னிச், சுழிகாட்டு மூந்தியெங் தோகையொர் தோன்றல் பின் சொல்குடிக்கோர், பழிகாட்டி யிந்தச் சுடுபாலை நீந்திப் படர்ந்தவந்த, வழிகாட்டி டாய்பல பாவைக ளோடிங்கு வாழ்குரவே' |
| சிந்தாமணி, காந்த.<br>கஅ. "பாடகம் போலச் சூழ்ந்த பழவினைப் பயத்தின்"<br><br>கல்லாடம்,<br>கக. "உயிர்புகுஞ் சட்டக வழிதொறு மூழிதொறும், பழவினை புகுந்த பாடகம் போல" | ருருசு.—'பாடக மான தொடர்புற வெங்பன் பழவினளே' |

| பழையநூல்கள். | திருவாவடுதுறைக்கோவை. |
|---|---|
| கல்லாடம், ௪௫. "அமுதமூந் திருவு முதவுத லானும், .........அளக்க ராகியும், .........புண்ணியக் கல்வி" | ௪௬௪.—'பொருவொண் ணிலாதது புண்ணியக் கல்வி புகன்றிடினோர், திருவு மமிர் தும் தருங்கடல் போலும்' |
| அம்பிகாபதிகோவை, எ௪. "பூங்கேச மன்றல் புனையா ரெழில்வெண் புதுமதிகண், டாங்கே யிக ழ்த லருகிய வுண்டி யருஞ்செலவு, தீங்கே கரத்த லொருவயி னேசென்று சென்று நிற்ற, ருங்கே வலமல்ல வந்ததென் னே விந்தத் தையலுக்கே" | எ௬.—'மழைதருங் கந்தம் பெறும்புத் தெழில்வனப் பா ரொழுக்கங், கழிவுறு மூண்டி கரக்குந் தொழிலினங் கைய கற லுழைநிற்றலோடு தியாகே சர் கோமுத்தி யூர்வனமே, லெ ழுவகைத் தன்மையு மெங்கு ற்ற வாவெங்க ளேந்திழைக்கே' |
| நளவெண்பா, சுயம்வரகாண்டம், ௧௧௬. "அள்ளிக் கொளலாய்......... கூரிருள்வாய்" | ௨௨௧.—'அள்ளிக்கொள் வன்ன நிறையிருள் யாமத்து' |

பழையநூல்களிலுள்ள செய்யுட்களின்கருத்தை முற்றுந்தழுவியும் ஒருவாறுதழுவியும் இங்ஙனம் இந்நூலாசிரியர் அவ்வவ்விடங்களில் அமைத்திருக்கும்பகுதிகள் மிகப் பாராட்டற்பாலனவாய் இவருடைய பயிற்சியின் மிகுதியைப் புலப்படுத்துகின்றன.

---

பலவகையான பிரயோகங்கள் இந்நூலில் வந்துள்ளன: அவற்றுள்,

செய்யுளின் எண். வெளிப்படையாற்பொருளுணர்த்துவன:

| | | |
|---|---|---|
| ௨அ | பரவாக்குளவி | — மலைமல்லிகை. |
| அ௫ | பாயாதவேங்கை | — வேங்கைமரம். |
| | பாயும்வேங்கை | — புலி. |
| ௪௫௨ | உரையாத்தனம் | — கொங்கை. |
| | உரைக்குந்தனம் | — பொன். |

குறிப்பாற்பொருளுணர்த்துவன:

௧௬. 'முல்லாய் நின்பேர்க்குணம்'—பேர் - கற்பு.

அஅ. ஒற்றிடையாரும் அதி=அத்தி - யானை.

௨0அ. 'வண்டின்பெயர்பெற்றன வொன்றற வொன்றடினும்'—பெயர்=தும்பி, அரி என்பன; பெற்றன முறையே யானையும் சிங்கமும்.

௪௨௧. 'கோமுத்தியீசரவர்க்குரிய பேரனையாய்'—பேர் - மாசிலாமணி.

தோழி பூத்தருபுணர்ச்சியால் அறத்தொடுநிற்றல்.

௬௧௧. 'நீடுவின் கண்ணுக்கு நேரிது பாரென்று நின்மகட்கு
காடுமொ ராடவன் வந்தீறில் காவிரி நல்கினன்ற
ஏறுடை நீள்செவிச் சொர்ணத் தியாகர் துறைசை யுள்ளா
ராமெவ் வாற்றின் றலையெழுத் தாடுநின் முடிடத்தே.'

ஈறில்காவிரி=காவி - நீலோற்பலமலர்; அவ்வாற்றின் தலையெழுத்து=கா - சோலை.

---

மேலும் இந்நூலில் அங்கங்கே இவர் அமைத்திருக்கும் சைவநூற்கருத்துக்கள் முதலியன நோக்கற்பாலன. அவற்றுள்,—

சைவநூற்கருத்துக்கள்;

அ0. 'முத்தியென் னப்படு மங்கையைச் சேர முயல்பவருஞ்
சத்தியென் னப்படு மீச னருளன்றிச் சார்தலுண்டோ'

கரு. 'அருளா வடுதுறைச் செம்பொற் றியாக ரடியனைவிட்
டிருளா னவங்கழிந் தோடுதே லேய்ப்ப'

கருச. 'சொர்ணத் தியாகனை வாழ்த்தலர்நெஞ், சல்லா
யிருண்ட வணரார் குழலி'

உகக. 'ஈட்டும் வினைதவிர்த் தன்பர்க் கருளெனு மின்னமிர்த
மூட்டிடுஞ் செம்பொற் றியாகேசர்'

ருகஅ. 'என்சென்னியிற் பங்கயப்பா, தஞ்சூட்டுங் கோகழிச் செம்
பொற் றியாகர்.'

இலக்கணக்கருத்து:

உச. 'அணியியன் முற்றும் படித்தலினால்'

எக. 'எல்லா வெழுத்திற்கு நாயக மாமவ் வெழுத்தினென்றி, னல்லா லவைக்குச் சிறப்புளதோ'

கருஎ. 'நீயுன் னருள்பெற்ற மின்னினையு, நேரிய லாக வருமொழி
யோடு நிலைமொழிக்கோர், சாரியை போனடு நின்றே
னையுமெண்ணித் தாங்குகவே.'

இசைநூற்கருத்து:

சகரு. 'உகந்தவர் பாற்பாடு பாடினி தோடியையே.'

மந்திரவாதம்:

ககo. 'ஐந்தலை நாக மகன்முழைச் கண்டஞ்சு மன்றுதங்கை, தந்தலை
யேலென்றோர் மந்திரங்கூறித் தடுத்தளித்த, வெந்தலைவர்'

ருஅக. 'அவர் சொன்னபதமனுவால்.'

இந்நூலில்வந்துள்ள சிலமொழிகள்:—

எத்து - உசக
ஒருக்கால் - எஉ
கோட்டி - ககரு, ருருஎ.
சரி - க0அ
சரிப்பட்டது - உச
சொக்கு - எரு
சொர்ணம் - (மிகுதி)
தயவு - உருரு
தனகு - சருரு
பற்பம் - உ
பெற்று - ருசகூ

## இந்நூலாராய்ச்சிசெய்யும்பொழுது கிடைத்த கையெழுத்துப் பிரதிகள்.

திருவாவடுதுறை ஆதீனத்துப் ... ... பிரதி. க.
திருப்பனந்தாட் காசிமடத்துப் ... ... ,, க.
முன்பு கும்பகோணம் காலேஜில் தமிழ்ப்பண்டிதராகவிருந்த திரிசிரபுரம் வித்துவான்
ஸ்ரீ - தியாகராஜசெட்டியாரவர்கள் ... ,, உ.
திருமயிலை வித்துவான்
ம-ா-ா-ஸ்ரீ சண்முகம்பிள்ளையவர்கள் ... ... ,, க.
[சறுசு - ம் பாடலின் பிற்பாதியும், சறுஎ - ம் பாடலும் இவர்கள் பிரதியில்மட்டும் இருந்தன.]
திருவாவடுதுறைமடத்துக் காரியதரிசிகளாகிய
,, பொன்னுஸாமிபிள்ளை ... ... ,, க.
,, சண்முகம்பிள்ளை ... ... ... ,, க.
சீகாழிச் சபாநாயகமுதலியார்ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதராகிய திருவாவடுதுறை
,, சு. பொன்னோதுவார் ... ... ,, க.
[இவர், சுப்பிரமணியமுனிவருடைய சரித்திரத்திற்கூறப்படும் குருசாமியோதுவாருடைய பௌத்திரரின் புத்திரர்.]

ஆகப்பிரதிகள். அ.

## பிழையும் திருத்தமும்.

| பக்கம். | பாடல். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| ௩ | க0 | க | குழற் | குழல் |
| ௫ | உ௩ | உ | தலையலங் | தலைக்கலங் |
| க0 | ௫௫ | ௩ | கன்னிக்கு | கள்ளிக்கு |
| உகூ | க அ உ | ச | உய்வியன் | உம்வியன் |
| ௩உ | உ0௫ | க | வெற்பர் | வெற்பா |
| ௩௫ | உகக | க | சனு | சானு |
| ச0 | உ௫உ | ௩ | தாமறை | தார்மறை |
| சஉ | உசுக | உ | வினையேன் | வினையென் |
| ௫உ | ௩௩சு | ௩ | வெதும்பியதால் | வெதும்பியவால் |
| சு௩ | ச0௫ | க | பெருநலம் | பெறுநலம் |

கணபதி துணை.

—:0:—

# திருவாவடுதுறைக் கோவை.

## விநாயக வணக்கம்.

நறைக்கோவை யன்னசெவ் வாயொப்பி லாமுலை நன்னுதலிற்
பிறைக்கோவை யக்கணி வான்றரு மைங்கர பேணுமன
வுறைக்கோவை யாதரித் தன்போ டுரைக்குநல் லாவடுதண்
டுறைக்கோவை பாடத் துறைதோறு நின்னடி தோன்றிடுமே. (௧)

நின்றுறைசைக் கோவைமுன்னே நிற்கவைத்த *பேர்நிரம்பத்
தென்றுறைசைக் கோவைதனைச் செப்பவே—நன்றுறைசை
யாதிபனே யெங்க ளழகியநற் குஞ்சரமே
கோதறவென் னெஞ்சிற் குடி. (௨)

(பிரதிபேதம்:) நன்றுறைசெய்.

## கைக்கிளை.

காட்சி.

நீர்கொண்ட செம்பொற் கமலமு நீலமு நீங்கரிய
வார்கொண்ட முல்லையுங் கோங்குமென் காந்தளு மல்கியொல்கிச்
சீர்கொண்ட வாவடு தண்டுறைச் செம்பொற் றியாகர்வெற்பி
லேர்கொண்ட தெய்வ மலர்ப்பூங் கொடியொன் றெதிருற்றதே. (௧)

ஐயம்.

பாதல மோதிருப் பாற்கட லோசங்க †பற்பநிதி
மீதல மோவிஞ்சை யோர்தல மோவிரி நீருடுத்த
பூதல மோதிருக் கோமுத்தி யீசர் பொருப்பின்மய
லாதல மோகத் தவரு முறுமிவ ளார்தலமே. (௨)

(பி - ம்:) அவர்க்குமுறும்.

* பேர், துணைவந்தவிநாயகரென்பது.

† பற்பம்=பத்மம் - தாமரை; 'சடகோபர், "பற்பநாப னுயர்வற வுயரும்பெருந்திறலோ - னெற்பரன்" எனறுராதலின், பரஸ்மைபதம் ஆத்மநேபதம் என்னுது மகரத்தைப் பகரமாக்கி, பரப்பைபதம் ஆற்பநேபதமென்றும்' என்பது, பிரயோகவிவேகவுரை, திங்குப்படலம், ௨, உரை.

### துணிவு.

வாடாத போதிமை யாடாத போதிந்த மாநிலத்திற்
சூடாத போதழ லோடாப்பொற் பூணுமில் சோருநெஞ்சே
யீடார் துறைசைப் பதிமாசி லாமணி யீசர்வெற்பில்
வீடா விளக்கனை யார்க்கிடம் வேறில்லை மேதினியே. (௩)

### குறிப்பறிதல்.

தென்னா வடுதுறைச் செம்பொற் றியாகர் செழுங்கிரிமே
லந்நா ளமரர்க்குப் பொன்னாழி முன்ன ரடுத்ததொரு
கொன்னார் விடந்தந்து பின்னா ரமுதங் கொடுத்ததிந்த
மின்னார் கடலி லிரண்டுமொர் காலை விளங்கியவே. (௪)

### கைக்கிளை முற்றிற்று.

## இயற்கைப் புணர்ச்சி.

### இரந்து பின்னிற்றற்கெண்ணல்.

திருவா வடுதுறைச் செம்பொற் றியாகர் செழுஞ்சிலம்பி
லொருவாமை வம்பிற் புதைக்குந் தனங்களு மூற்றிருந்து
வருவா யமிர்தமு மென்றுமுள் ளாருண் மகிழ்ந்துநெஞ்சே
தருவார் களிப்புறச் சார்ந்திரந் தார்க்கிந்தத் தையலரே. (௫)

### இரந்து பின்னிலைநிற்றல்.

இருந்தா மரையனம் பானிறப் பேட்டுக் கிறவருத்திப்
பொருந்தா வடுதுறைச் செம்பொற் றியாகர் பொருப்பிலரு
மருந்தா யெனக்கின்று வாய்த்தவ ரேமன் மதன்கணைக்கு
விருந்தாய் வருந்தி மெலிவேன் பிணியை விலக்கிடுமே. (௬)

(பி - ம்:) விலக்குவரே.

### முன்னிலையாக்கல்.

துண்டப் பிறைச்சடைச் செம்பொற் றியாகர் துறைசைவெற்பிற்
றண்டைக் கிணங்கிய தாளுடை யிர்சகி மாருடனே
கெண்டைத் தடஞ்சுனை நீர்குடைந் தாடு கிலாமலிங்கென்
பண்டைத் தவப்பயன் போனிற்கு மாறு பகருமினே. (௭)

### வண்டோச்சிமருங்கணைதல்.

நாகத் திருவனைக் கோமுத்தி யீசர் நறுந்துறைசை
மாகத்தண் சோலை மதுகரங் காளந்த வைப்பகன்று
பாகொத் தமிர்தொத்த சொல்லியற் கொல்லியம் பாவையன்னண்
மேகத்தைச் சூழ்ந்தென்கொன் மின்னுக் கிடுக்கண் விளைக்கின்றதே.

### இதுவுமது.

வண்ணச் சடாமுடிச் செம்பொற் றியாகர் வளர்துறைசைப்
பெண்ணிற் சிறந்தவர் நாலுண ராமற் பெரிதுமந்தோ
பண்ணிற் பழகிய பாட்டளி காள்பைத்த பாயிருள்வாய்க்
கண்ணிக்குள் ளேயகப் பட்டரென் றும்மைக் கடத்துவனே. (௯)

### மெய்தொட்டுப்பயிறல்.

கட்டா ரணிகுழற் கட்டா நிரைவளை கைத்திருத்திப்
பட்டாடை யிற்பட்ட நுண்டுக ணீவிப் பரமதத்தார்
சுட்டாப் பரம்பொருள் செம்பொற் றியாகர் துறைசையன்னார்
கிட்டாப் பதமுமென் கையால் வருடக் கிடைத்ததுவே. (௧௦)

### பொய்பாராட்டல்.

செம்மலர் மாதுறை கோகழிச் செம்பொற் றியாகர்வைகு
மம்மணி யாசனங் கண்டார வங்க ளடைவுறவே
தம்முது காற்பிற பல்லா யிரமுகந் தாங்கிநிற்கு
மிம்மட வார்த மிடைக்கிடை யாவள மெய்துதற்கே. (௧௧)

### இடம்பெற்றுத்தழால்.

நுத்தி யராவணி செம்பொற் றியாகர் துறைசையன்னாள்
வைத்தகண் ணோட்டமுண் டெத்திறச் சித்தரும் வந்தறியாச்
சித்திரக் காவுமுண் டுள்ளூறும் வேட்கைச் செழுங்கடலை
நீத்திலப் பூண்முலைப் பொற்குடங் கைக்கொண்டு நீந்துவமே. (௧௨)

### வழிபாடுமறுத்தல்.

நல்லா வடுதுறைச் செம்பொற் றியாகர்த நற்பொருணூல்
கல்லாதவரிற் கவலாம லென்னுயிர் கால்விழுந்த
செல்லாளைக் கண்டு செழித்தே யசோகத்தைச் சேர்ந்தகொடி
முல்லாய்நின் பேர்க்குணம் பெற்றேற கிடந்தந்தென் முன்னிற்பையே.

### இடையூறுகிளத்தல்.

பாட்டளி யாலிக்கும் பங்கே ருகத்தைப் பழித்துவனத்
தோட்டிய வத்தத்திற் கோவைக் கரந்தொப்பி லாமுலையைக்
காட்டிநின் றீர்மட வீரத ணற்கவி ஞர்துறைசை
யாட்டினர் செம்பொற் றியாகேச ரேயென்ன வாயினிரோ. (௧௪)

### இதுவுமது.

தொழுதவர்க் கின்பருள் செம்பொற் றியாகர் துறைசையங்கா
மழலைவண் டாடுங் குழன்மட வீர்கையில் வைத்திருக்கு
முழுவது நீர்மறைத் துக்கொண் டிரந்து மொழிந்திடுமிப்
பொழுதும தாகமுன் றந்தத்தைக் காட்டல் புகழல்லவே, ௧௫)

சூட்டம் புயங்கத்தர் செம்பொற் றியாகர் துறைசைவெற்பில்
வாட்டம் பெறப்புத்தி மான்றனைப் போர்க்கண் வலைபரப்பி
வேட்டஞ் செயத்தளர்ந் தெய்த்தேனெப் போதென் விடாய்முழுது
மோட்டந் தரவுங்க ளோட்டந் தருமமிர் துண்பதுவே. (கசு)

## மறுத்தெதிர்கோடல்.

வீணார்க் கருமையர் செம்பொற் றியாகர் வியன்றுறைசை
யாணர்க் கெளியர் வரைமேன் முராரி யடன்மகனார்
கோணைப் படைவந்து சூழ்ந்ததென் றன்பர் குதுகுதுத்தா
ஞணற் கபாட மினிதிற்கு மோசொல்லு நன்னெஞ்சமே. (கஎ)

## வறிதுநகைதோற்றல்.

விண்ணுற் றறலை யரசிலை தோய்த்தள்ளி வீசுகின்ற
தண்ணு வடுதுறைச் செம்பொற் றியாகர் தடஞ்சிலம்பி
லுண்ணுண் முழுதும் வெளிதாய் வெளிப்புறத் தற்றதுபோற்
பெண்ணு ரமுதொண் முகத்திள மூரல் பிறந்ததுவே. (கஅ)

## முறுவற்குறிப்புணர்தல்.

அள்ளற் பழனத் துறைசையெங் கோமுத்தி யப்பர்சென்னிப்
பிள்ளைப் பிறைநுத லொடிரு வாயிற் பிறந்தநிலா
வெள்ளத் தனையுமென் றாழ்க்கக லாவென் மனத்திருளை
விள்ளக் கடிந்தத ரோவென்சொல் வேனிந்த விம்மிதமே. (கசு)

## முயங்குதலுறுத்தல்.

இருங்கன்னி யிஞ்சித் துறைசையெங் கோமுத்தி யீசர்வெற்பின்
மருங்கண்ணி வென்மதன் மாட்டம ரேதினி மன்னுயிர்போ
லொருங்கிவர்க் காத்தநன் றொண்டுங் காவ லுடைப்புண்டகா
லருங்கொம்மைக் கோட்டைநங் கையாற் பிடித்தர சாளுவமே. (உ0)

## புணர்ச்சியின்மகிழ்தல்.

சிட்டர்கொண் டாடுந் துறைசைத் திரவியத் தியாகர்வெற்பிற்
சட்டக வெற்புத் தனைதொ றுந் தித்திக்கத் தாமரைநீண்
மொட்டென்ற பூண்முலை யாளெனக் கீந்த முருக்கலர்வாய்
மட்டின் சுவைக்கின்ன மட்டென்று சொல்ல வரம்பில்லையே. (உக)

## புகழ்தல்.

சோணுடர் போற்றிய செம்பொற் றியாகர் துறைசைவெற்பிற்
காணு மருங்குனின் பூணுரக் கொங்கையைக் கண்டழிந்த
நாணுற் புவியி லொருவர்தங் கண்ணுக்கு நண்ணரிதாய்ச்
சேணுர் விசும்பிடைச் சக்கர வாகந் திரிகின்றதே. (உஉ)

## வன்புறை.

### ஏற்புறவணிதல்.

பொற்றோர்க்குப் பட்டுநல் யானைக் கணிகளும் பூஞ்சிலம்பி
னற்றுட் குருளுந் தலையுலங் காரமு நான்புனையக்
கற்றார் துறைசைக் கனகத் தியாகர் கருணையின்னீர்
வற்றாத முற்பலன் கைப்பல னின்று வாய்த்ததுவே. (உ௩)

இயற்கைப்புணர்ச்சி முற்றிற்று.

---

## வன்புறை.

### அணிந்துழி நாணியதுணர்ந்து தெளிவித்தல்.

ஓங்கிய செம்பொற் றியாகேசர் கோமுத்தி யூர்வரைமேல்
வாங்கிய சிற்றிடை நாணியஞ் சேன்முன்னம் வாய்த்திடுநின்
பாங்கியும் யானு மணியியன் முற்றும் படித்தலினற்
றுங்கணி முன்னுக்குப் பின்வில காது சரிப்பட்டதே. (உ௪)

### பெருநயப்புரைத்தல்.

தொடுக்குங் கடுக்கையர் செம்பொற் றியாகர் துறைசைவண்டு
படுக்குங் குழலிதன் செவ்வாய்க் குமுதப் பனிமலர்போ
லடுக்குங் கலைத்திங்க ளன்றியெப் போது மருந்தநறுக்
கொடுக்குங் குமுதமுண் டோவண்டு காணுங் குறுஞ்சுனைக்கே. (உ௫)

### தெய்வத்திறம்பேசல்.

துப்பார் திருவுருச் செம்பொற் றியாகர் துறைசை வெற்பிற்
செப்பார் முலைக்கொடி வாடுவ தென்றென் கடலுருளின்
மைப்பாய் வடகட லச்சியைத் தென்ன மணத்தல்செய்த
விப்பா லினைநமக் கப்பால் விலக்குவ ரேவர்களே. (உ௬)

### பிரியேனென்றல்.

மின்னுக் கதிர்வடி வேன்முசு குந்தன்முன் வேண்டவருள்
பொன்னித் துறைசைநஞ் செம்பொற் றியாகர் பொருப்பிடைநின்
றன்னைப் பிரிந்தக லேன்பிரிந் தாலுயிர் தாங்குவனோ
வென்னுக் கிரங்கல் சுடர்நிற்கு மோதிரி யின்றிமின்னே. (உ௭)

### பிரிந்துவருகேன்றல்.

பிறவா நெறியருள் செம்பொற் றியாகப் பிரான்றுறைசை
யுறவாரிற் போகி வருவலின் னேயென் னுயிர்க்குயிரே
நிறவாரி சத்துத் திருவனை யாயிங்கு நீபறிக்கும்
பறவாக் குளவியை வண்டோடு கட்டிப் பணித்திடவே. (உ௮)

### இடமணித்தென்றல்.

நஞ்சிக் கொடிக்குந் துறைசையெங் கோமுத்தி நாதர்வெற்பி
லஞ்சிக் கொடியவர் போற்கவ லேலெனக் காரமுதாம்
வஞ்சிக் கொடியிடை வெய்யோன் விலக வளர்ந்தவெம்மூ
ரிஞ்சிக் கொடிசெயு நும்மூர்க்கெப் போது மிளநிழலே. (௨௯)

### இதுவுமது.

மூப்பா யிளையரு மாகிய கோமுத்தி முத்தர்பணிக்
காப்பார் துறைசையெம் மூர்ச்செந்நென் முத்துங் கருப்புமுத்துங்
கேப்பான லங்கண்ணி வந்தங்கு வாரித் தினங்கொடுபோய்க்
கோப்பார்நும் மூர்வரை நித்திலத் தோடுங் கொடிச்சியரே. (௩௰)

வன்புறை முற்றிற்று.

## தெளிவு.

நடத்திற் சிறந்தவர் செம்பொற் றியாகர் நறுந்துறைசை
யிடத்திற் சிறந்தவர் போய்வர வேண்டுமென் றெண்ணியந்தோ
திடத்தினிற் றேற்றுவித் திட்டிங் குரைக்கவென் சித்தமென்னுங்
குடத்திற் கலங்கிய நீர்தெளி வாம்வண்ணங் கூடியதே. (௩௧)

தெளிவு முற்றிற்று.

## பிரிவுழிமகிழ்ச்சி.

### செல்லுங்கிழத்தி செலவுகண்டு உளத்தொடு சொல்லல்.

நன்னத்தின் முத்து வடமலை தாங்கி நடுநடுங்கப்
பின்னுற்ற பார்வையு முன்னுற்ற காலும் பெயரநெஞ்சே
யென்னத்தர் மின்னத்தர் சொன்னத்தி யாக ரெழிற்றுறைசை
யன்னத்தின் மென்மெலச் செல்கின்ற வாநம தாருயிரே. (௩௨)

### பாகனொடுசொல்லல்.

பல்லார வண்டலிற் சிற்றடி போர்த்துப்பின் பார்த்துமுன்பார்த்
தெல்லார்க்கு நாணித் திருமுகங் கோட்டி யிளங்கொடிபோ
னல்லா வடுதுறைச் செம்பொற் றியாகர் நளிர்வரைமே
லுல்லாசத் தேகுதல் காண்வல வாவென் னுயிர்த்துணையே. (௩௩)

பிரிவுழிமகிழ்ச்சி முற்றிற்று.

## பிரிவுழிக் கலங்கல்.

### ஆயவெள்ளம்வழிபடக்கண்டிது மாயமோவென்றல்.

நற்பல தேவர் முடித்தலை தாழ்க்கநண் ணுந்துறைசைச்
சிற்பரர் செம்பொற் றியாகேசர் காட்சியிற் செல்வமின்னார்
பற்பலர் போற்றிடுங் கற்பகக் கொம்பின் பரிசிதென்றூற்
சொற்பன மோவென்ன வற்புத மோவங்குத் தோன்றியதே. (௩௪)

### வாயில்பெற்றுய்தல்.

ஆவித் துணையெனக் கெப்போது மீங்கிவ ளாமெனவே
காவித் துணைவிழி காட்டிப்பொற் றேட்டைக் கடந்துலவும்
வாவித் துறைசைச் சிவலோக நாயகர் மால்வரைமேற்
பாவித் துளையுநெஞ் சேயுய்ய லாமிவள் பாலடுத்தே. (௩௫)

### இதுவுமது.

குயிற்குல நாணுஞ்செவ் வாய்மொழி யாளைநங் கோமளத்தி
னுயிர்க்குயி ராமென் றுணர்ந்துநெஞ் சேயிடை யூறுளதோ
செயிர்க்குல நீக்கித் துறைசையி லானந்தத் தேன்வழங்கு
மயிற்பெடை வாமத்தர் கோமுத்தி யீசர் வரையிடத்தே. (௩௬)

### பண்புபாராட்டல்.

சீரொப்பில் கோகழிச் செம்பொற் றியாகர் திருவரசு
மேரொப்பி லாளல்குல் போன்றிலை யினைரி தின்சொலைப்போற்
பேரொப்பி லாமுலை யேந்துகைக் கிள்ளையும் பேசரிதாற்
பாரொப்பி லாளூறுப் புக்கவை யேயொப்புப் பார்த்திடிலே. (௩௭)

### பயந்தோர்ப்பழிச்சல்.

தென்னு வடுதுறைச் செம்பொற் றியாகர் சிலம்பிடத்தென்
மன்னுவி யைத்தந்த தக்கோ ரிருவரும் வாழியரோ
பொன்னுட ரோக்குறப் போதன் படைப்பறப் பூவைமல
ரன்னான் பழிச்சிடத் தங்நே ரிலாதிவ் வகலிடத்தே. (௩௮)

### கண்படைபெறாது கங்குனோதல்.

நத்துறை யாவித் துறைசையெங் கோமுத்தி நாதர்வெற்பி
லுத்திய ராகிதம் பத்தாளென் னெஞ்சு முறக்கமுந்தான்
கைத்தலங் கொண்டுகைம் மாறுத்தன் குந்தளக் காரிருளை
வைத்தெங் ககன்றன ளோவற நீளுமிம் மைக்கங்குலே. (௩௯)

### இதுவுமது.

சேலாடு கண்ணியை நீங்கிக் கருங்கங்குல் சேரக்கண்டு
மாலாய்த் துயிலற் றிமையா தழுங்கலின் வான்றுறைசைச்
சூலா யுதக்கரர் செம்பொற் றியாகர் துணையிழந்தே
யாலாலங் கண்டஞ் சுறுமிமை யோரையொப் பாயினனே. (சo)

பிரிவுழிக்கலங்கல் முற்றிற்று.

## இடந்தலைப்பாடு.

### தந்ததெய்வந்தருமெனச்சேறல்.

நானேது மெண்ணி முயலா திருக்க நயந்துமுன்னந்
தானே தடுத்துத் தருந்தெய்வ மின்றுந் தருநெஞ்சமே
தேனேறு கொன்றையர் செம்பொற் றியாகர் திருத்துறைசை
வானேறும் வாச மலர்க்காவிற் சேறும் வருதியொத்தே. (சக)

### முந்துறக்காண்டல்.

மாசிலைக் காமன் றொழுந்தெய்வ மோவவன் வாசமுறும்
பாசறைக் கேற்று மணிவிளக் கோவெனப் பல்பொறியார்
தேசர ணோங்குந் துறைசைத் திரவியத் தியாகர்வெற்பின்
மூசலர்க் காவில்வந் தென்பெரு வாழ்விங்கு முன்னின்றதே. (சஉ)

### முயங்கல்.

கற்கண்டு வெற்பின் மதுக்கொண்டல் பெய்து கரைந்தொழுகி
நிற்கின்ற வாறொக்கு நீக்கற் றிரண்டற்ற நேசமொடு
மற்கண்டர் கோகழிச் செம்பொற் றியாக ரடுக்கலினன்
பொற்கென்ற பூண்முலை யாளைக் கலந்து புணர்ந்ததுவே. (சங)

முத்தமிழ் தெள்ளுந் திருவா வடுதுறை முக்கணக்க
ரத்தர்நஞ் செம்பொற் றியாகேசர் வெற்பி லணியிழைநின்
வித்தக வல்குற் றடந்தேரைக் கண்டுமுன் வெவ்கியன்றே
சித்தசன் றேரின்னுங் காற்றாய் விசும்பிற் றிரிகின்றதே. (சச)

மன்னிரு வாணி துறைசையெங் கோமுத்தி வள்ளல்வெற்பிற்
பின்னிருங் கூந்தலுன் மென்சாய லின்வளம் பெற்றிடவே
முன்னிரு நான்குகண் ணோனைச் சிறையிட்டு முற்றுங்கண்ட
பன்னிரு தோளனை யின்னமுந் தோகை பரிக்கின்றதே. (சரு)

## பாங்கற்கூட்டம்.

### உடன்புணராய்த்துய்த்தல்.

வண்டில தால்விரைச் செண்பகப் பூம்பொழில் வான்றருவாக்
கண்டிட நின்சகி மார்தெய்வ தப்பெண் களிற்கனலத்
தொண்டெனைக் கொண்டவர் சொன்னத் தியாகர் துறைசைவெற்பிற்
றெண்டிரைத் தெள்ளமு தேநீ சசியிற் சிவனுகவே. (சசு)

இடந்தலைப்பாடு முற்றிற்று.

---

## பாங்கற்கூட்டம்.

### தலைவன்பாங்கனைச்சார்தல்.

திருத்தத் துறைசையிற் செம்பொற் றியாகரைச் சிந்தைசெய்யார்
கருத்திற் கவலையு றேனெஞ்ச மேகருங் கல்லினுநா
ருரித்துத் தருநம் முயிர்ப்பாங்க னைக்கண்டிவ் வுண்மைசொன்னுன்
மருத்துப் பயோதரத் தாலனங் காங்கியை மாற்றுவனே. (சஎ)

### பாங்கன் தலைவனை உற்றதுவினாதல்.

பன்னுமத் தெய்வப் படைபயின் றேவெம் பகைதுமித்துத்
தன்னு ருயிரிற் றிசைபுரந் தோசெந் தமிழ்வடித்தோ
மின்னார் துறைசையிற் செம்பொற் றியாகர்தம் வெற்பண்ணலே
யென்னு டகவரைத் தோளினை யாம லிளைத்ததுவே. (சஅ)

### தலைவன் உற்றதுரைத்தல்.

பானத் துலாம்வயற் கோமுத்தி யூர்நண்ப பண்பினர்க்கு
ஞானத் திரளருள் செம்பொற் றியாகர் நளிர்வரைமேல்
வானத்திற் சஞ்சரி யாப்பே ரொழிலி வளர்குறிஞ்சிக்
கானத்தின் வந்துண்ண வற்றிய தாலென் கலைக்கடலே. (சகூ)

### கற்றறிபாங்கன்கழறல்.

நிலக்கோர் பசும்பொற் றொளிர்குவ தென்ன நிலவரசார்
தலக்கோயின் மேவிய செம்பொற் றியாகர் சயிலத்தஞ்சை
வலக்கோதைப் பேதைக் கனலரக் காகி மறுகலென்னே
யிலக்கோ விதுபுவ னத்தொப் பிலாவெம் பிரான்றனக்கே. (நிo)

### கிழவோன்கழற்றெதிர்மறுத்தல்.

தோணு லிரண்டுள செம்பொற் றியாகர் துறைசைவெற்பிற்
கோணுர் பிறைநுதற் கோகன கைக்குங் குலதெய்வத்தைப்
பூணு ரிளமுலைக் கொம்பினை யான்செய்த புண்ணியத்தைக்
காணுய்கண் டாயெனில் வீணுவிவ் வீரங் கழறலையே. (நிக)

### கிழவோற்பழித்தல்.

ஆசிலக் கன்னிக்கு மீதுசென் றோங்கர சார்துறைசைத்
தேசிகப் பொற்சடைச் செம்பொற் றியாகர் சிலம்பிலொரு
பாசிழைக் காநெஞ் சிளகிற்றென் றுயண்ணல் பண்ணிருப்பி
னூசிவைக் கோவயி ரப்பொருப் புத்துளை யுண்பதுவே. (௫௨)

### கிழவோன் வேட்கை தாங்கற்கருமைசாற்றல்.

சுற்றுஞ் சடிலத்தர் கோமுத்தி யீசர் துறைசைவெற்பிற்
குற்றும் புதுமலர்க் காவூடு வந்தவள் கோக்கடல்வீழ்ந்
தெற்று மவாவலை யாற்சுழல் வேனுக் கினியவடன்
பற்றுந் தனக்கல னன்றிப்பின் வேறொரு பற்றிலையே. (௫௩)

### பாங்கன்தன்மனத்தழுங்கல்.

சூலேந்து செம்பொற் றியாகேசர் கோகழித் தொல்லரசின்
மேலேயெக் காலுமின் மாலேறக் கண்டன மெய்ம்மையது
போலேநெஞ் சீரர சின்றலை மீதும் புனத்தொருமின்
மாலே றிடின்மட நெஞ்சே யிருந்தென்ன வாய்நமக்கே. (௫௪)

### பாங்கன்தலைவனோடழுங்கல்.

விளக்க மறுத துறைசையெங் கோமுத்தி மெய்யர்வெற்பி
லளக்கரி தாயநின் கல்வியுஞ் சீலமு மாண்மையுமோர்
குளக்கனி வாய்மொழிக் கன்னிக்குக் கொள்ளை கொடுத்துநெஞ்சந்
துளக்க முறுநிற்றி யேந்தாலஃ தென்னுடைத் தொல்வினையே. (௫௫)

### பாங்கன் எவ்விடத்து எவ்வியற்றென்றல்.

பைம்போதி மாநகர்ச் செம்பொற் றியாகர்பற் றுரையொறுக்
கும்போதி லேந்துங் கொடுமர போவவர் கோறுயிலு
மம்போதி யோவிடம் யாதுன்னை யிவ்வண்ண மாகக்கண்ட
வம்போதி மான்வண்ண மென்னிறை வாசொல் வகையெனக்கே. (௫௬)

### தலைவன்அஃது இவ்விடத்து இவ்வியற்றென்றல்.

துளவே யணிவிடைச் சொர்ணத் தியாகர் துறைசைவெற்பிற்
களவே பயில்கருங் கண்ணுமென் னுள்ளங் கவர்ந்தவட்குத்
தளவே நகைதந் தளவே யிடுகிடை தண்மதியின்
பிளவே நுதல்செண்ப காடவி யேயிடம் பெண்கொடிக்கே. (௫௭)

### பாங்கன்இறைவனைத்தேற்றல்.

தேன்வருங் காவிடை நின்னுவிக் காவியைச் சென்றுகண்டு
நான்வருங் காறும் பனிக்கறை மேனிற்றி நற்றவர்வாழ்
வான்வருங் கோகழிச் செம்பொற் றியாகர் வரையிலன்னந்
தான்வருங் காறுந் தரித்துநிற் குந்நளன் றுனென்னவே. (௫௮)

(பி - ம்:) நின்னுயிர்க்காவியை.

### பாங்கன்தறிவழிச்சேறல்.

மயில்போ னடந்துபந் தாடுவ ரோபன் மலர்பறித்துக்
குயில்போன் மிழற்றிநிற் பாரோ வறிகிலன் கொள்ளைவண்டு
துயில்போங் கடுக்கையர் சொர்ணத் தியாகர் 'துறைசையண்ண
லயில்போல் விழியு மலைபோன் முலையுமுண் டானவரே. (ருக)

### பாங்கன் இறைவியைக்காண்டல்.

பனிச்சந் திரமுக மண்டல மீதரைப் பாம்பிதுசீ
ரனிச்சம் பொருத வடித்தா மரையிவை யாந்துறைசைத்
தனிச்சங் கரரெங்கள் செம்பொற் றியாகர் தடங்கிரிமே
லினிச்சங்கை யில்லை யிவரே யிறைசொன்ன வேந்திழையே. (சுo)

### பாங்கன்இகழ்ந்ததற்குஇரங்கல்.

துதியைப் பெறுங்கழற் சொர்ணத் தியாகர் துறைசையிலெம்
பதியைப் பகர்ந்திகழ் வாருமுண் டோவெண்ணிப் பார்த்திலன்வே
னுதியைப் பொருங்கண்ணி வாழைக்குட் பாம்பிது நோக்கினவர்
மதியைக் கவர்ந்து விழுங்கா திராதெனில் வையகத்தே. (சுக)

### பாங்கன் தலைவனை வியத்தல்.

நடங்கொண்ட செம்பொற் றியாகேசர் காவிரி நாடனையா
ளிடங்கொண்ட வல்குற் படங்கொண் டவளிறு மாந்தகொங்கைத்
தடங்கண்ட கண்ணுந் தடங்கண்ட தோவென் றலைவனென்ன
திடங்கொண்டு வந்தன னேவறி யேனென்னைத் தேடிக்கொண்டே. ()

### பாங்கன் தலைவியைவியத்தல்.

தாயினு மின்பருள் செம்பொற் றியாகர் தடந்துறைசைக்
கோயினு மென்னெஞ்சங் கொண்டோர் வரையினங் கொற்றவற்கு
நோயினு நோயளிப் பாருஞ்சற் றேதிரு நோக்களித்தை
வாயினுங் கொள்ளு மருந்தாகு வாருமிம் மாணிக்கமே. (சுங)

### பாங்கன் தலைவன்றனக்குத் தலைவிநிலைகூறல்.

தேரணி வீதித் துறைசைத் திரவியத் தியாகர்வெற்பிற்
றூரகை மூவொன் பதுமொப்பி டாவொரு தாரகைதான்
வாரணி பக்கங் குறையாத சோமன் வரவதுபார்த்
தேரணி காவிடை நிற்கக்கண் டேனென் னிறையவனே. (சுச)

### தலைவன்சேறல்.

தென்னவிர் கோகழிச் சொர்ணத் தியாகர் சிலம்பினிரு
பொன்னடி நோவத் தனிநின்று காவிற் புனமயில்போன்
முன்னையின் மிக்க திருவிளை யாடல்செய் மோகமொடு
மென்னையு நோக்குங்கொ லெங்குந்தித் திக்கு மிளங்கரும்பே. (சுரு)

### தலைவன் தலைவியைக்காண்டல்.

உரக்கும்வண் போதி வனமாசி லாமணி யும்பர்வெற்பி
லரக்குங் கறுக்குநற் செவ்வா யிதழி யமிழ்தவெள்ளஞ்
சுரக்குங் கடைக்கண் விழிசாரி போதவென் சோருமுயிர்
புரக்குஞ்சஞ் சீவினி போனின்ற வாவிப் பொழிலிடத்தே. (௬௬)

இருகோ டிவர்புனற் காவிரிக் கோமுத்தி யீசர்வெற்பி
லொருகோடி மால்வண் டொருகோடி மேகத் துருவெடுத்தே
வருகோ டிவர்கின்ற தேன்வாரி வாரி மடுத்தலொக்கு
மருகோ டிடீகண்ணி ஞளைத் திளைத்துண்ட வானந்தமே. (௬௭)

### புகழ்தல்.

விடையார் துறைசைக் கனகத் தியாகர்தம் வெற்பிலென்று
முடையாத நீர்நின்று நோற்பவர் போற்குழை யோடிகலும்
படையார் விழியுன் னிதழ்நலம் பார்த்துட் பசையறுசெங்
கிடையார் கிடைப்பதற் கேநெடு நாளறற் கீழ்நிற்பதே. (௬௮)

### இதுவுமது.

சொன்னேச ருக்கருள் சொன்னத் தியாகர் துறைசையன்ன
பொன்னேநின் னேருத ரத்துக்கொவ் வாத புரையறிந்தா
றன்னே ரிலையை மறைப்பது போலுஞ் சமர்கடந்த
கொன்னேமி யான்பள்ளி கொள்ளிட மாகக் கொடுத்ததுவே. (௬௯)

### தலைவியைப் பாங்கியோடுவருகெனப்பகர்தல்.

அடையார் புரஞ்செற் றரசாளுங் கோமுத்தி யப்பர்வெற்பிற்
புடையா ரிளங்கொங்கை நல்லீ ரினிவரும் போதினிய
மடையார் குவளை விழிப்பாங்கி யோடிங்கு வாரும்வந்தாற்
கடையா தமிர்தம்வந் தாற்போ லிருக்குமென் காதலுக்கே. (௭௦)

### தலைவியைப்பாங்கிற்கூட்டல்.

நல்லா வடுதுறைச் செம்பொற் றியாகர் நளிர்வரைமே
லெல்லா வெழுத்திற்கு நாயக மாமவ் வெழுத்தினைன்றி
னல்லா லவைக்குச் சிறப்புள தோவது போலடுத்து
வல்லா ரிளமுலை மாதேநின் னுயை மருவுகவே. (௭௧)

### பாங்கற்கூட்டம் முற்றிற்று.

## பாங்கிமதியுடன்பாடு.

### ஐயமுற்றோர்தல்.

திருக்காவி ரித்திருத் தப்படிந் தோசெழுந் தேன்பிலிற்று
மருக்கா விரிமென் மலர்பறித் தோவண்ட லாட்டயர்ந்தோ
விருக்காலுங் கோமுத்தி யூர்மாசி லாமணி யீசர்வெற்பி
லொருக்காலு நானறி யாமெலி வான துவள்வடிவே. (எஉ)

### இதுவுமது.

மழைதருங் கந்தம் பெறும்புத் தெழில்வனப் பாரொழுக்கங்
கழிவுறு முண்டி கரக்குந் தொழிலினங் கையகற
லுழைநிற்ற லோடு தியாகேசர் கோமுத்தி யூர்வரைமே
லெழுவகைத் தன்மையு மெங்குற்ற வாவெங்க ளேந்திழைக்கே. (எங)

### ஐயந்தீர்தல்.

பெண்ணுழை யாளர் துறைசையெங் கோமுத்திப் பிஞ்ஞகனார்
பண்ணுழை வேதனுங் காணு முடியிற் பரித்தலினாற்
கண்ணுத லாரவர் செம்மார்பிற் கோடன்ன காட்சியினாற்
றண்ணிறை வெண்பிறைக் கேசெங்கை கூப்பத் தகுந்திருவே. (எச)

### இதுவுமது.

தக்கோர் பணிகழற் செம்பொற் றியாகர் தடந்துறைசை
முக்கோ வுடையர் சடிலவட் டத்தின் முளைமதிபோற்
சொக்கோடு செக்கர்ச் சுடர்வானில் வெண்பிறைத் தோற்றங்கண்டாற்
கைக்கோ கனக மலரே குவியுநங் காரிகைக்கே. (எரு)

### சுனைநயப்புரைத்தல்.

எண்ணிய வெண்ணிய வெல்லாந்தந் தொண்டர்க் கினிதளிக்கும்
புண்ணியர் கோகழிச் செம்பொற் றியாகர் பொருப்பினில
வண்ணிய முத்தமுத் தாகவிக் கோவையக் கோவைய தாப்
பண்ணிய தோகன்னி நீபடிந் தாடிய பைஞ்சுனையே. (எசா)

### சுனைவியந்துரைத்தல்.

பருக்குந் தனச்சந் தனமுமைம் பாலிற் பரிமளமுங்
குருக்குமெய் வேர்வும் பெறலா மெனினவ கோடிசித்த
ரிருக்குந் துறைசைப் பதிமாசி லாமணி யீசர்வெற்பி
லுருக்குமச் சித்தச் சுனைநானு மாடுவ னொண்ணுதலே. (எஎ)

### தகையணங்குறுத்தல்.

மாமேனிக் குள்ள குழைவுங்கட் சேப்பு மணிமுருக்கின்
பூமேல் வெளுப்பும் புறம்பணங் கேமற்றப் பொற்பனைத்துந்
தேமேவு பூமத்தர் கோமுத்தி யீசர் சிலம்பிலெங்கள்
பாமே கலையிள மான்வடி வாம்வரப் பார்த்தகலே. (எஅ)

### நடுங்கநாட்டம்.

தடக்கும்ப ராசி தொடுமர சூர்க்குத் தலைவர்விடங்
கிடக்குந் திருமிடற் றம்பொற் றியாகர் கிரியிற்கொம்பா
னடக்கு மொருவரை குத்திற்றந் தோதுப்பி னன்றதன்வீ
றடக்கு மொருவனை வேலொடு கண்டன னாரணங்கே. (௭௯)

### பெட்டவாயில்பெற்றுஇரவுவலியுறுத்தல்.

முத்தியென் னப்படு மங்கையைச் சேர முயல்பவருஞ்
சத்தியென் னப்படு மீச னருளன்றிச் சார்தலுண்டோ
சுத்திபெற் றூர்தொழுஞ் சொர்ணத் தியாகர் துறைசைவெற்பிற்
சித்திர தீபத் துயிர்ப்பாங்கி யாற்சுகஞ் சேருதுமே. (அ௰)

### இதுவுமது.

உம்பர்க் கரசென்றுள் ளோனையில் லோன்சென் றுரைப்பதுபோற்
கொம்பைப் பொருமிடைப் பாங்கிக் கினியவை கூறியிரந்
திம்பர்க் கரிய வெழுதரும் பாவையை யெய்துவம்யாஞ்
செம்பொற் றியாக ருறையுந் துறைசைச் சிலம்பிடத்தே. (அக)

துதிப்பார்க் கருள்செயுஞ் சொன்னத் தியாகர் துறைசைவெற்பிற்
சதிர்ப்பா டிலாது நெறிதப்ப விப்புனஞ் சார்ந்தனன்யான்
கதிர்ப்பூண் முலைமட வீர்களின் னேவழி காட்டியுங்கள்
பதிப்பே ருரையு முரைத்தா லுமக்கொர் பழியில்லையே. (அ௨)

### பெயர்வினாதல்.

ஓராழி யங்கையன் பங்கயன் றேட வுமையுடனே
சீரா வடுதுறை மேவிய செம்பொற் றியாகர்வெற்பிற்
கூராரும் வேல்விழி யீருங்க ளூர்குரு மந்திரமென்
மாராய மாயுங்கள் பேராகி லுஞ்சொல்லும் வாய்திறந்தே. (அ௩)

### வேழம்வினாதல்.

பதவா ரணத்தர சூரொப்பி லாமுலை பாகர்வெற்பி
லிதவா ரணவு மிளமுலை யீர்தெவ்வர்க் கீடழிந்து
சிதவா ரணமொன்று கையான் புனத்திடைச் சேறலைப்போன்
மதவா ரணமொன்று வந்ததுண் டோவுங்கள் வான்புனத்தே. (அ௪)

### வேங்கைவினாதல்.

சேயான மேறுந் துறைசைத் திரவியத் தியாகர்வெற்பிற்
சாயா முலைக்கின மென்றுரை யாடிலிர் தந்திதனைக்
காயா மலர்க்குழ லீர்வந்த தோவிக் கடிப்புனத்தாற்
பாயாத வேங்கையுட் பாயுமொர் வேங்கை படருழந்தே. (அ௫)

### கலைவினுதல்.

தொத்திட்ட கொன்றையர் செம்பொற் றியாகர் துறைசையெண்ணு
வெத்திட்ட நெஞ்சுடைக் கள்வரைப் போற்பிழைத் திப்புனத்தே
முத்திட்ட வெண்ணகை யீர்வீர பாண முனையமூழ்ந்தத்
தைத்திட்ட தோர்கலை கண்டதுண் டோவின்று தான்வரவே. (அசு)

(பி - ம்:) துறைசையென்னு.

### வன்றிவினுதல்.

பொன்னோதி வில்லத்தர் சொன்னத் தியாகர்தம் பூந்துறைசை
யின்னோதி மங்கற்கு நன்னடை யீர்சர மேற்றவன்றி
முன்னோட வென்மனம் பின்னோடி வந்ததிம் மொய்புனத்தே
யன்னோ வவைகண்டி லேன்கண்டி ரோசொல்லு மாதரித்தே. (அஎ)

### இடைவினுதல்.

சுற்றிய வார்சடைச் செம்பொற் றியாகர் துறைசைவெற்பி
லெற்றொடி யேந்துகை யீரின்று நான்வனத் தெய்தவெய்த
வொற்றிடை யாரு மதிகலை வேங்கை யொருவினபோற்
சிற்றிடைச் சிங்கமெங் கேநுங்கள் பால்விட்டுச் சென்றதுவே.(அஅ)

### மொழியாமைவினுதல்.

திரையார் புனற்சடைச் செம்பொற் றியாகர் திருத்துறைசை
வரையா ரமுதனை யீர்வரை யாரங்கள் வட்குமென்றோ
விரையாரும் வாய்முத்தங் காட்டிலிர் சாட்டா விரதங்கொண்டா
லிரையார் கிளியின மெப்படி யோட்டுவ திப்புனத்தே. (அகூ)

### யாரே யிவர்மனத் தெண்ணம்யாதெனத்தேர்தல்.

பதியாதென் பாருங்கள் பேரென்னென் பார்பின் படிப்படியா
முதியானை யோடு பிறவும் வினைய்விற்பர் மூதறிவோர்
வதியா வடுதுறைச் செம்பொற் றியாகர் வரையிலிந்த
விதியாளர் யாரிவர் யாதோ விவரெண்ணம் விள்ளரிதே. (கூ0)

### எண்ணந்தெளிதல்.

ஆறேந்து சென்னியர் செம்பொற் றியாகரொ ராயிழையைக்
கூறேந்து வாரர சூர்வரை மேன்முறி கொண்டுவந்து
மாறே யிவர்சொன்ன வார்த்தையெல் லாமறி வாய்நெஞ்சமே
வேறேது மில்லை யிவர்கொண்ட கோலமிம் மின்பொருட்டே. (கூக)

### இருவருமுளவழிஒருமையிற்போதல்.

பிரியாது வள்ளிக் கொடியையுந் தெய்வப் பிடியையும்போ
லுரியா ரிருவரு மொத்திருந் தாரர சூருகந்த
வரியா ரதளுடைச் செம்பொற் றியாகர் வரைக்கணிளித்
தரியா தியாஞ்சென்று கண்டுகொண் டாடுஞ் சமயமிதே. (கூஉ)

### கையுறையேந்திநின்று அவ்வகைவினாதல்.

அருளா வடுதுறைச் செம்பொற் றியாக ரடியரைவிட்
டிருளா னவங்கழிந் தோடுத லேய்ப்பவென் னேவுங்கொண்டு
மருளா வுதிர வருவியி னோர்கைம் மலைவந்ததோ
சுருளார் கருங்குழற் கட்டழ கீரிச் சுனைப்புனத்தே. (கூ௩)

### எதிர்மொழிகொடுத்தல்.

காயத் திருஞ்சிறை தீர்ப்போர் துறைசைக் கருத்தர்சிதா
காயத் திரவியத் தியாகர்பொன் னைகத்தெங் கார்ப்புனத்தே
காயத்தி கண்டதுண் டல்லா லொருவர்செங் கைக்கணைதான்
காயத்தி வந்திடக் கண்டோ மிலையொரு காலமுமே. (கூ௪)

### இறைவனைநகுதல்.

அரங்தொட்ட வேற்கண்ணி யிவ்வீர ரின்றெய்த வாம்பனெடுங்
கரங்தொட்ட மாவிலை யம்பொடுஞ் சேட்செலக் கற்றதனால்
வரங்தொட்ட கோகழிச் செம்பொற் றியாகர் மதுரைச்சிங்க
சரந்தொட்டு முன்னெய்த மாயக் களிற்றினுந் தான்சதிர்த்தே. (கூ௫)

### மதியினின் அவரவர்மனக்கருத்துணர்தல்.

தினைக்காடு காக்குங் கருத்தே யிவட்கின்று தேரிலவர்
முனைக்கோட் டிரலையெய் வாருமன் றாலென்பர் மொய்யரசூர்ப்
புனற்கோட்ட மார்சடைப் புத்ரத் தியாகர் பொருப்பிருவர்
மனக்கூட் டுறவினுக் கொற்றுமை யாத் தாடு மலர்க்கண்களே. (கூ௬)

பாங்கிமதியுடன்பாடு முற்றிற்று.

---

## பாங்கியிற்கூட்டம்.

### தலைவன்உட்கோள்சாற்றல்.

தொழும்புசெய் வார்க்கருள் சொர்ணத் தியாகர் துறைசைவெற்பிற்
செழுங்கொடி யீர்விண்ணிற் றாரா கணத்தையுந் திங்களையுங்
கழுங்கென வாடவு மாடியு மாகக் கடைந்துமக்கு
வழுங்கவும் யான்வல்ல னேவல்கொள் வீர்திரு வாய்மலர்ந்தே. (கூ௭)

### பாங்கி தலைமறைகிளத்தல்.

உள்ளாரை யோட்டி யுலகம் புரக்கு முயர்மன்னனீ
புள்ளாய வோட்டிப் புனங்காக்கு மாதெங்கள் புன்குறமான்
றுள்ளாடு மானத்தர் சொர்ணத் தியாகர் துறைசைவெற்பில்
துள்ளாலுன் கோதையெம் பேதைக்குச் சூட்டன் மரபல்லவே. (கூ௮)

### தலைவன் தலைவிதன்னை யுயர்த்தல்.

தோட்டெருக் கந்தொடைச் செம்பொற் றியாகர் துறைசைமன்றிற்
றீட்டிய பாவையன் னீர்தெய்வ ராசன் றிருமகளே
வேட்டிருந் தும்முரு கோன்மீட் டொருகுற மின்னைமணந்
தீட்டிய கீர்த்தியன் றேவெழு லோகமு மேறியதே. (கூகூ)

### பாங்கி அறியாள்போன்றுவினாதல்.

தொல்லா வடுதுறைச் சொர்ணத் தியாகர் சுடர்க்கிரிநீர்க்
கல்லாரங் குற்றுவெண் முத்தூச லாடுவர் காவகத்திற்
பல்லாயி ரங்கைய லார்யார்மண் காத்திடும் பார்த்திவநின்
வல்லாண்மை யைக்கவர்ந் திம்மால் கொடுத்த மடமங்கையே. (க00)

### இறையோன் இறைவிதன்மை யியம்பல்.

பஞ்சடி தாமரை யல்குல்பொற் றேர்த்தட்டுப் பைங்கழைதோள்
வஞ்சிமென் சிற்றிடை கொங்கைபொன் மேரு மதிவதனஞ்
செஞ்சடைக் கோலத்தர் கோகழிச் செம்பொற் றியாகர்கண்டத்
தஞ்சனக் கூர்விழி மாதே யெனக்கமு தானவட்கே. (க0க)

### பாங்கி தலைவியருமை சாற்றல்.

சூடா மணியினை யாந்தொழப் பெற்ற சுடர்த்தொடியைக்
கோடார் விலங்கலெங் கோமா னருமைக் குமாரியைநீர்
நாடா தெளியளென் றெண்ணுதிர் கோமுத்தி நாதர்வைகும்
பீடார் துறைசைப் புரவல ரேசில பேதம்வைத்தே. (க0உ)

### தலைவன் இன்றியமையாமை இயம்பல்.

கோங்கே ரிளமுகை கும்பிடுங் கொங்கைக் கொடியினுக்கா
வீங்கே யுனையொரு தஞ்சமென் றேற்கிரங் காதொழிந்தாற்
றீங்கேத நீக்கு மரசூரர் செம்பொற் றியாகர்வெற்பிற்
றுங்கே னுயிரிமைப் போதுஞ் சரதந் தளிரியலே. (க0௩)

### பாங்கி நின்துறை நீயேசென்றுறையென்றல்.

மறைகட் கரிய பிரான்மாசி லாமணி வள்ளல்வைகுந்
துறைசைக் கதிபவுன் னுள்ளத்தி னின்று துளும்புகின்ற
குறையெத் தனையத் தனையுமெம் பாவைக்குக் கூறுகநீ
யறையக் கடவதன் றுலெம்ம னோர்க்கிங் கறிந்தருளே. (க0௪)

### பாங்கியைத் தலைவன் பழித்தல்.

வடிக்கணல் லாடனக் கென்காத லோதி மனக்குறையை
முடிக்கவல் லாயென் றுனையிரந் தேனின்று மூதரசூர்
நடிக்கவல் லாரெங்கள் செம்பொற் றியாகர் நறும்பதத்தைப்
பிடிக்கவல் லார்தமைப் போன்மொழிந் தாய்நன்று பெய்வளையே. ()

### பாங்கி பேதைமை யூட்டல்.

காதும் பரசர் துறைசையெங் கோமுத்திக் கத்தர்வெற்பி
லோதுந் திணைத்தடஞ் சாரலி லூர்முகி லேக்கதையான்
மாதுன் புறப்புடைக் குந்தன் றமையரின் மற்றிவளு
மேதும் பிறர்வருத் தம்மறி யாத வியல்பினளே. (க0சு)

### காதலன் தலைவி மூதறிவுடைமை மொழிதல்.

சீரோ ருயர்த்தவர் கோகழிச் செம்பொற் றியாகர்வெற்பி
னீரோது சொற்றனிர் நான்றஞ்ச மற்றங்கு நிற்குமப்போ
தேரோறு தாரிற்றன் பேரூ ருறத்தொடுத் தீந்தனளா
லாரோ யுலகி லவளுக்கொப் பான வறிவினரே. (க0எ)

### பாங்கி முன்னுறுபுணர்ச்சி முறையுறக் கூறல்.

உமக்கேமுன் னட்பந்த வொண்டொடி யாளுள ளாயிருந்தா
லெமக்கேன் பிறருக்கெ னல்வார்த்தை சொல்வ தெழிற்றுறைசைத்
தமக்கேயொப் பானவர் செம்பொற் றியாகர் சயிலத்தினீர்
நமக்கே சரியில்லை யென்பவ ளோடின்ப நண்ணுகவே. (க0அ)

### தலைவன் தன்னிலைசாற்றல்.

கார்நாட்டு கூந்தன்மின் னுகந் தழாவிடிற் காதல்வெப்பஞ்
சீர்நாட்டு மாவடு தண்டுறைச் செம்பொற் றியாகர்பொன்னி
நீர்நாட்டி லுள்ளதண் ணெல்லாமெய் யேற்பினு நீங்கரிதால்
வார்நாட்டு கொங்கைநல் லாயுன்ன லாலினி வாய்ப்பதின்றே. (க0கூ)

### பாங்கி உலகியலுரைத்தல்.

சேவேறு செம்பொற் றியாகேசர் செல்வத் திருத்துறைசைக்
காவேரி யங்கயற் கண்ணு ளிளமுலை காமுறினீ
கோவே வரைந்தனை கொண்மோசெந் தீவலங் கொள்ளன்முன்னு
மாவேத நீதி யொழுகல்பட் டாங்கிந்த வையகத்தே. (கக0)

### தலைமகன்மறுத்தல்.

விற்படும் வெப்பினின் றெய்த்திளைப் பார்க்கு விடாயறவிண்
கற்பகக் காக்கொணர்ந் தின்னீழல் செய்யக் கருதலொப்பாம்
பொற்பமர் கோகழிப் புத்ரத் தியாகர் பொருப்பின்மின்னே
யற்புதக் கொம்பைமுன் வேட்டுப்பின் கூடென்ற வாதரவே. (ககக)

### பாங்கி அஞ்சி அச்சுறுத்தல்.

நம்மாசி லாமணி நாதன் றுறைசை நளிர்வரைமேல்
வெம்மாலை வந்ததி யாங்கள்செல் வேமெங்கள் வேடர்கண்டா
லம்மா பொருரின்று சும்மா வரும்பழி யாதலினு
மிம்மா தனிப்புனம் விட்டைய நீயு மெழுந்தருளே. (ககஉ)

### தலைவன் கையுறை புகழ்தல்.

தொனிகொண்ட வார்கழற் சொர்ணத் தியாகர் துறைசையிற்செங்
கனிகொண்ட வாயன்ன மேதரிக் கத்தகுங் காணற்சஞ்சி
வனிகண்ட செம்பொ னிமயா சலத்தில் வளர்ந்ததனாற்
பனிகண்ட தன்றி வெயில்கண்ட தின்றிப் பசுந்தழையே. (கக௩)

### பாங்கி கையுறைமறுத்தல்

நறையா ரிதழியர் செம்பொற் றியாகர்நல் லாவடுதண்
டுறையா திபகை யுறையாகத் தந்தவை தூமொழியாள்
குறையாத வல்குற் றடத்தெமர் காணிற் குறித்தயிர்ப்பார்
முறையாக யாங்கள்கைக் கொள்ளேநின் கையின் முழுத்தழையே. ()

### ஆற்றநெஞ்சினோடு அவன்புலத்தல்.

மனையா வடுதுறை கொண்மாசி லாமணி யார்வரைமே
னனையார் மலர்க்குழன் மானார் திருவுள்ள நம்மிடத்தி
லினையா திருந்தது நெஞ்சேயப் பூவை யிடங்கொளல்குற்
சுனையாட லின்றிநங் கைம்மாந் தழையுந் துவள்கின்றதே. (கக௫)

### பாங்கி ஆற்றுவித்தகற்றல்.

துய்யவெண் ணீற்றினர் செம்பொற் றியாகர் துறைசைவெற்பி
லைய விராவிலெந் தையலை வேண்டி யருள்பெறுவேன்
பொய்யல வைகறை போய்க்கதிர் தோன்றும் பொழுதிங்குவா
கையுறை யேற்கமுன் வந்துநிற் பேணிந்தக் காவகத்தே. (ககசு)

### இரந்துகுறைபெறாதுவருந்தியகிழவோன் மடலேபொருளென மதித்தல்.

தோற்றமுங் கேடுமில் சொர்ணத் தியாகர் துறைசைவெற்பி
லாற்றருங் கேத முறுநெஞ்ச மேநடை யன்னமன்னாள்
கூற்றெனுங் கண்ணிணை தந்தவெங் காமக் கொடும்பிணியை
மாற்றுதற் கேம மடலல்ல தில்லை வழிநமக்கே. (ககஎ)
(பி - ம்:) வலிநமக்கே.

### இதுவுமது.

இணையார் திருவடி யென்றலை மேல்வைத் திரவுபகற்
றுணையாகி நின்றருள் சொர்ணத் தியாகர் துறைசையன்னார்
கணையார் விழிதந்த காமக் கடலைக் கடக்கநெஞ்சே
புணையாகக் கோடன் மடலன்றி வேறு பொருளில்லையே. (ககஅ)
(பி - ம்:) செம்பொற்றியாகர்.

### பாங்கிக்கு உலகின்மேல் வைத்துரைத்தல்.

சுழியொன்று நீர்ச்சடைச் சொர்ணத் தியாகர் துறைசையன்னாய்
மொழியொன்று கேண்மட வார்காம வெள்ளத்தின் மோதலுற்றார்
கிழியொன்று கைப்பிடித் தேமட லேறுவர் கேண்மையற்றார்
பழியொன்று மெண்ணில ராய்ப்பறம் பேறியும் பாய்வர்களே. (கக௯)
(பி - ம்:) கேண்மையற்றால்.

### அதனைத் தன்மேல் வைத்துச் சாற்றல்.

தூவேத வாசியர் சொர்ணத் தியாகர் துறைசையன்ன
வேவேய்கண் ணாளைக் கிழியூ டெழுதிக்கொண் டேயினிநான்
பூவே யெருக்கென்பு பூண்டுவெண் சாந்தமும் பூசிமடன்
மாவேறி நாளை வருவேனும் மூர்க்குண் மடமயிலே. (௧௨௦)

(பி - ம்:) எருக்கெனப்பூண்டு.

### பாங்கி தலைமகள் அவயவத்தருமை சாற்றல்.

துவ்வா விடமுண்ட செம்பொற் றியாகர் துறைசைவெற்பா
வவ்வாண்மை நன்று படமீ தெழுத வவண்மருங்கு
லிவ்வா றிருக்கு மெனவுண ராயன்றி யீர்ம்பவளச்
செவ்வா யெழுதி னமிர்தமெங் கேயினித் தேடுவையே. (௧௨௧)

### தலைமகன் தன்னைத் தானே புகழ்தல்.

ஆராக வென்றன்னை நீர்நினைந் தீரென் னருமைசற்றும்
பாரா துரைத்தனிர் பாருமிப் போதுபொற் பார்துறைசை
யூராளுங் கோமுத்தி யீச ரருளா லுருவெழுதி
வாரார் முலைமட வீருயிர் கூட வருவிப்பனே. (௧௨௨)

### பாங்கி அருளியல் கிளத்தல்.

வெள்ளாங் குருகிட்ட முட்டையுங் கோடி வியன்குடம்பை
யுள்ளா ரிறகன்றிற் பிள்ளையுந் தூக்கணத் தொண்சினையுந்
தள்ளாநற் கோமுத்தி யீசன் றுறைசைச் சயிலத்தரோ
கொள்ளார் பனைமடன் மாநெஞ்சி லேயருள் கொண்டவரோ. (௧௨௩)

### இதுவுமது.

வில்லார வேழத்தன் காகள வீக்குச் செவிலியென்னு
மல்லார் கொடியின் கரும்பார்ப்பு வாட வவநெறியிற்
செல்லார்கள் வாழுந் துறைசைத் திரவியத் தியாகர்வெற்பா
புல்லாரைக் கோற லருளுடை யார்க்குப் புகழல்லவே. (௧௨௪)

### பாங்கி கொண்டுநிலைகூறல்.

பிறைவார் நுதன்முலைப்பெண்ணையிப் போது பெறுவிடிற்கண்
ணிறைவாங் குரும்பை முலைப்பெண்ணை நீகொண்டு நின்குறையை
யிறைவா முடிமதி செம்பொற் றியாகர்க் கினியபொன்னித்
துறைவாய்முத் தாருந் திருவா வடுதண் டுறைநகர்க்கே. (௧௨௫)

(பி - ம்:) திருவாவடுதண்டுறைக்கரசே.

### தலைவியிளமைத்தன்மை பாங்கி தலைவற்குணர்த்தல்.

முடித்திட மென்குழல் பற்றாது சற்று முலைக்குறிகள்
பொடித்தில முத்தங் குமுதத் திலகண்கள் புன்களவு
படித்தில கோகழிச் செம்பொற் றியாகர்வெற் பாவுடைகொய்
துடுத்திட வும்மறி யாட்கென்னை நீயிரந் தோதுவதே. (௧௨௬)

தலைவன் தலைவிவருந்தியவண்ணமுரைத்தல்.

வெங்கட் கரிவந் தெதிர்ப்படி லீன்றவவ் வேளையிலே
சிங்கக் குழவி யடுமாறு கேட்டுந் தெரிந்திலையோ
துங்கப் பொருவிடைச் செம்பொற் றியாகர் துறைசையன்னாய்
மங்கைக் கரசியன் றோவென்னை வாட்டிய வாணுதலே. (௧௨௭)

பாங்கி தலைவி சேவ்வியருமை சேப்பல்.

கொய்யாள் குவளையு முல்லையும் பூந்தொடை கூந்தலின்மேல்
வையா டுறைசைக் கனகத் தியாகர் வரையிலிடை
பொய்யா ணறுந்தளிர் மெய்யாள்பந் தாடப் புனத்திலளை
செய்யாள்செய் யாளனை யாட்கொந்த வாறு தெரிவிப்பதே. (௧௨௮)

தலைவன் சேவ்வியெளிமை சேப்பல்.

தென்னர சூர்வளர் செம்பொற் றியாகர் சிலம்பின்மின்னே
பொன்னனை யாளுக்கி யான்வந்த வாறு புகலுதியேற்
பின்னடை யாளங்கள் கேளா ளெழுந்து பிரியமுடன்
சொன்னநின் வாயிற் கனகமு முத்துஞ் சொரிந்திடுமே. (௧௨௯)

பாங்கி என்னைமறைப்பின்எளிதென நகுதல்.

தண்ணங் குமுதமு மால்வண்டு மொன்றினுந் தாதுறுந்தேன்
விண்ணம் பொலிநில வின்றியுண் ணாது வியன்றுறைசைப்
பண்ணஞ் சொலாளொப் பிலாமுலை பாகர்வெற் பாவுனதுள்
ளெண்ணந் தனைமுடிக் தற்கேலு மோவிங் கெனைமறைத்தே. (௧௩௦)

அந்நகை பொறாது அவன் புலம்பல்.

உள்ளீட் டினர்தொழுஞ் சொர்ணத் தியாக ருறைதுறைசை
நள்ளீட் டியபொரு ளன்னாள் பொருட்டு நலிதல்கண்டும்
வள்ளீட்டி குத்திய புண்மேன் மறுவலும் வாளெரிதோய்
வெள்ளீட்டி யிட்டதொப் பாமங்கை நீசெய்த வெண்ணகையே.(௧௩௧)

பாங்கி தலைமகனைத் தேற்றல்.

மின்னேது மிட்டிடைப் பாங்கியர் பற்பலர் மேவினுந்தா
னென்னேக்க மெப்படி யப்படி யேவரு மெங்கள்செல்வி
தொன்னோ யொழித்தருள் சொர்ணத் தியாகர் துறைசையுற்றோர்
பின்னோர் குறையில ராலினி யேங்கல் பெருந்தகையே. (௧௩௨)

(பி - ம்:) இனியெங்கள்.

பாங்கி கையுறையேற்றல்.

ஓங்குமெங் குன்றத் திறையாஞ்செவ் வேளை யுயிர்த்தருளுந்
தேங்கும் புனல்வயற் கோகழிச் செம்பொற் றியாகர்பன்னி
யாங்குங் குமமுலை யாளைத் தரும்வெற் படுத்தலினால்
வாங்குங் கடலுண் டரோவைய நீதரு மாந்தழையே. (௧௩௩)

### கிழவோன் ஆற்றல்.

காழிமன் னர்க்கருள் செம்பொற் றியாகர் கவின்றுறைசை
வீழியஞ் செங்கனி வாயாளுக் காந்தழை வேண்டிக்கொண்ட
தோழிதன் வாண்முகச் செந்தா மரைகண்டு சோகமற்று
வாழியிப் போதென்ற னுள்ளச் சுரும்பு மகிழ்வுற்றதே. (கஙச)

### இறைவன்றனக்குத்துறைநேர்பாங்கிஇறைவிக்குஅவன்துறையுணர்த்தல்.

குழையேறு காதரெங் கோமுத்தி யீசர் குளிர்துறைசை
மழையேறு சாரலின் மாதே யொருவர் வருவர்வந்தென்
னுழையே யடுப்பர் முகம்பார்த்து நிற்பர்பின் னென்றுரையார்
தழையே மிகத்தரு வாரென்னை யாஞ்செயத் தக்கதுவே. (கஙரு)

### இறைவி அறியாள்போன்று குறியாள் கூறல்.

நலம்பாவு நம்பொருப் பெல்லாமுந் தூழி னடிக்குமந்திக்
குலம்பாய முத்தஞ் சொரிந்து நிலாக்கொப் புளித்திடலா
லலம்பாய் கழனி யரசூரர் கோமுத்தி யப்பர்வெள்ளிச்
சிலம்பா யிருக்கின்ற தாலேல வார்குழற் றேமொழியே. (கஙசு)

### பாங்கி இறையோற்கண்டமை பகர்தல்.

சுரும்பாடு தும்பையர் செம்பொற் றியாகர் துறைசைவெற்பில்
விரும்பா தவரின் மறைப்பதென் னேயென் விளங்கிழையா
யிரும்பா சிலைபிடித் தன்றுவந் தார்தம்மை யின்றுகண்டே
னரும்பார் தருமுத்தி யானத்தி னும்பண்ணை யாடிடத்தே. (கஙஎ)
(பி - ம்:) சுரும்பார்கொன்றைச்சடைச்சொர்ணத்தியாகர்.

### பாங்கியைத் தலைவி மறைத்தல்.

மடங்காத பேரருட் கோமுத்தி யீசர் வளர்துறைசைத்
தடங்கா விரித்திரு நாட்டி லடாதசொற் றுன்குடங்கைக்
கடங்கா விழிவஞ்சி நீசொல் வதுநமக் காவதன்றே
கடங்கால் கரிதிரி காவிற்செல் வோர்களைக் கண்டுவந்தே. (கஙஅ)

### பாங்கி என்னைமறைப்பது என்னெனத்தழால்.

மைவண்ண வார்குழன் மாதே பரிவு வரவுரைத்து
மவ்வண்ண மேது மறிந்திலர் போலணி யார்துறைசைச்
செவ்வண்ண வார்சடைச் செம்பொற் றியாகர் செழுங்கிரிமே
லிவ்வண்ண நீமறைத் துண்மைசொல் லாததென் னென்னுடனே. ()
(பி - ம்:) தியாகர் சிகரவெற்பில்.

### பாங்கி கையுறைபுகழ்தல்.

பிடிக்கத் தகும்பொருள் செம்பொற் றியாகர் பிறங்கலுள்ள
தொடிக்கத் தகுவதன் றுலா வடுதுறை யொண்புலவோர்
படிக்கத் தகுங்குள கக்கவி போலவிப் பைந்தழைநீ
முடிக்கத் தகுமுன் னரசிலை யோடு முகிழ்நகையே. (கச0)
(பி - ம்:) அரசிலை யோடெங்கண் மொய்குழலே.

### தோழி கிழவோன் துயர்நிலை கிளத்தல்.

ஆயினங் கோகழிச் செம்பொற் றியாக ரடுக்கலிற்றே
னீயினம் வீசிக்கை யேற்றுக் களிறொன் றிரும்பிடியின்
வாயினங் கூட்டிடக் காணூஉ மயங்குபு மற்றெனையும்
பாயின மேகலை பார்த்தயர் வாரொரு பார்த்திபனே. (௧௭௧)

(பி - ம்:) காணு.

### மறுத்தற்கருமை மாட்டல்.

அனமும் பிடியு மனநடை யாயடி பேணுடைய
மனமுந் துறைசையும் வாழ்மாசி லாமணி வள்ளல்வெற்பர்
தினமுந் தனிவந்து வாடுதல் காண்டலிற் சேர்ந்ததினைப்
புனமும் பொறுதினி மேலினி நானென் புகல்வதுவே. (௧௭௨)

(பி - ம்:) தொழுநடை. செய்யதினை.

### தலைவன் குறிப்புவேறாக நேறிப்படக்கூறல்.

ஆயவெண் ணீறொருக் கங்கம் புனைந்தர சூரணைத்த
நாயக னார்திருக் கோலமு மாய்ப்பொன்னி நாட்டிறைவன்
தூயவஞ் சிக்கர சாரம் பரிக்கத் துணியுங்கொலோ
மாயம் பிறிதென்ன செய்யுங்கொ லோவினி வாணுதலே. (௧௭௩)

(பி - ம்:) பறிக்க.

### தலைவியை முனிதல்.

வடுப்பான்மை யாகிய வம்ப லுறுமல் வகையறிந்தே
தடுப்பார்க் கருளுதி யெம்பெரு மாட்டிதந் தொண்டரைவந்
தெடுப்பார் துறைசையெங் கோமுத்தி யீசனை யேத்தலர்போல்
விடுப்பா யினியென்னை யான்சொன்ன தீங்கொடு மெல்லியலே.(௧௭௪)

### தலைவி பாங்கியை முனிதல்.

வேய்வந்த தோண்மங்கை நீயேவல் செய்திட மேவியெங்கும்
போய்வுந்திந் நாள்வரை யொன்று மிருக்கவிப் போதொருதா
யாய்வந் தருளர சூர்த்திருக் கோமுத்தி யப்பர்வெற்பில்
வாய்வந்த சொல்வதென் னேயென் றுன் வார்த்தை மறுத்ததுவே. ()

### தலைவி கையுறை யேற்றல்.

தழையெடுத் தாலலர் தாமெடுப் பார்தமர் தாங்கிலமேற்
றழையெடுத் தார்பின் மடலெடுப் பார்தையல் சாற்றுவன்னித்
தழையெடுக் குஞ்சடைச் செம்பொற் றியாகர் தடந்துறைசைத்
தழையெடுப் பாமென்னு முன்னேகை யேற்றிடத் தாவினவே.(௧௭௬)

(பி - ம்:) தாவியதே.

### இறைவி கையுறையேற்றமை பாங்கி இறைவற்குணர்த்தல்.

என்னா தியமெனுஞ் சொன்னத் தியாக ரெழிற்றுறைசை
யுன்னார்த் தழைதர யான்போய்க் கொடுத்தன ளொண்ணுதலாண்
மின்னார் வடமணி யாணையி லேற்றித்தன் மெய்ம்மறந்து
தன்னூரு முற்றும் வலம்வரச் செய்து தரித்தனளே. (கசஎ)

(பி - ம்:) ஊதியமென.

### பாங்கி தலைமகற்குக் குறியிடங்கூறல்.

இலங்கிய வாவடு தண்டுறைக் கோமுத்தி யிசர்வெற்பா
வலங்கிய வாரத்தி னீறிறப் பௌவத் தவிர்மதிபோற்
றுலங்கிய பாசடை யூடேசெந் தேனடை தோன்றுங்கண்டாய்
பலங்கொளும் யாங்கள் பகல்விளை யாடும் பசும்பொழிற்கே. (கசஅ)

(பி - ம்:) பசும்பொழிலே.

### பாங்கி குறியிடத்து இறைவியைக் கொண்டுசேறல்.

நந்தா வளத்தர சூர்மா சிலாமணி நாதர்வெற்பின்
முந்தாவி மூழ்கி மயிலாடல் பார்த்து முருகவிழ்ந்த
செந்தா தளர்குற்றுப் பொன்னூச லாடிச் சிலம்பெதிர்கூய்க்
கொந்தார் பொழில்விளை யாடுகம் வாவெங்கள் கோமளமே. (கசகூ)

### பாங்கி தலைவியைக் குறியிடத்துய்த்து நீங்கல்.

செழிக்குந் துறைசைக் கனகத் தியாகர் சிலம்பிலுன்னின்
மொழிக்குடைந் திட்ட விருற்றே னொழுகி முழுகியறை
வழுக்கிய தாற்றைய னீயிங்கு நிற்க மலர்களுநின்
விழிக்குடை காவியும் போய்க்கொய்து நானிங்கு மீள்குவனே. (கரு)

### இறையோனிடத்து எதிர்ப்படுதல்.

இன்பார் துறக்கமிப் பூதர மாக்கி யெனையுமொரு
நன்பாரி சாத மெனநினைந் தோபொன்னி நாடர்தொழு
மன்பா வடுதுறைச் செம்பொற் றியாக ரடுக்கலினென்
றன்பார்வை காண வொருகாம வல்லி தனிநின்றதே. (கருக)

### இயைதல்.

இருந்தா ரணிபுகழ் கோமுத்தி யூரில்வந் தேத்தினர்பின்
வருந்தா தருள்புரி செப்பொற் றியாகர் மணிவரைமேற்
றிருந்தா ரணங்கிவள் செவ்வாய்வற் றூறுந் தேஞ்சுனையா
மருந்தாகந் தீர வருந்திடு நானொ ரவாக்களிறே. (கருஉ)

(பி - ம்:) தேன்சுனை.

### புகழ்தல்.

துறைசையுண் மேவிய சொர்ணத் தியாகர்முன் றேணிபுரத்
திறையவ னூர்சொன்ன செந்தமிழ்க் காக வினிதளித்த
நிறையுல வாக்கிழிச் செம்பொற் றனமது நேரிழையாய்
குறையினு முன்பொற் றனமொரு நாளுங் குறைவிலதே. (கருங)

## ஆயத்துவிடுத்தல்.

மல்லார் மலைவில்லர் சொர்ணத் தியாகனை வாழ்த்தலர்நெஞ்
சல்லா யிருண்ட வணரார் குழலியுன் ளுயந்தன்னை
வில்லாரஞ் சேர்கரைக் காவிரி நாட்டினின் மேதகுசீ
ரெல்லா நகர்க்குமிக் காமர சூழொன்ன வெய்துகவே. (கருச)

(பி - ம்:) இருண்டமலர்க்குழலாயுனது.

## பாங்கி மெல்லியற்சார்ந்து கையுறைகாட்டல்.

வடியிட்ட தேன்மொழி யான்கொணர்ந் தேன்பிண்டி வண்டளிர்பார்
தொடியிட்ட நின்கைக் கிணைதோன் றிப் போதிவை சோதியுண்கண்
படியிட்ட வுற்பலப் போதிவை காண்டி படிவத்தில்வெண்
பொடியிட்ட கோகழிச் செம்பொற் றியாகர் பொருப்பினின்றே. ()

(பி - ம்:) இணைகாந்தள்.

## பாங்கி தலைவியைப் பாங்கிற்கூட்டல்.

செம்பாத பத்ம ரரசூர்த் திரவியத் தியாகர்வெற்பில்
வம்பான் மறைத்த வனமுலை யாய்பன் மலர்களுமுன்
னம்பா னிறைய வலங்கரித் தேனம தாயமின்னார்
தம்பால் விரைந்துசெல் வாமினி நாமிந்தத் தாவகன்றே. (கருசு)

## பாங்கி தலைவியைநீங்கித் தலைவற்கு ஓம்படைசாற்றல்.

சீரிய லாவடு தண்டுறைச் செம்பொற் றியாகர்வெற்பா
வீரிய மாயென்று நீயுன் னருள்பெற்ற மின்னிணையு
நேரிய லாக வருமொழி யோடு நிலைமொழிக்கோர்
சாரியை போனடு நின்றே னையுமெண்ணித் தாங்குகவே. (கருஎ)

(பி - ம்:) ஆரியை பாகர் துறைசையெங் கோமுத்தி யப்பர்வெற்பா.

## பாங்கி தலைமகனை உலகியன்மேம்பட விருந்துவிலக்கல்.

தேனுங் கிழங்குந் தினைப்போ னகமுஞ் செழித்தமறி
யூனு மருந்த விருந்திடு வேமவை யுண்டளகை
மானுந் துறைசைக் கனகத் தியாகர் வரையிலெம்மூர்க்
கூனு மிலைப்பெய் குடிற்றங்கி யேகுவிர் கோநகர்க்கே. (கருஅ)

## விருந்திறை விரும்பல்.

திண்மூ தரணர சூர்த்திருக் கோமுத்திச் செல்வர்வெற்பிற்
கொண்மூ வனைய குழன்மட வீருங்கள் கொவ்வைச்செவ்வாய்
வெண்மூரல் கண்டு விடாய்தணிந் தேனின்னு மென்றினைச்சூட்
டுண்மூ ரலுமற்று நீரளித் தாலும்ப ரூணெனக்கே. (கருகூ)

## பாங்கியிற்கூட்டம் முற்றிற்று.

## பகற்குறி.

### கிழவோன்பிரிந்துழிக் கிழத்தி மாலையம்பொழுதுகண்டிரங்கல்.

பாரோர்விண் ணோர்பணி கோமுத்தி நாதநம் பன்றுறைசை
யூரோது வார்வினை வீழ்ந்தென வாழியொன் றுள்ளதடந்
தேரோன் கருங்கடல் வீழ்ந்தொளித் தானன்பர் சேணகன்றார்
வாரோ டிசன்முலை யாய்பையுண் மாலை வளைந்திட்டதே. (௧௬0)

(பி - ம்:) சேய்த்தகன்றார்.

### பாங்கி புலம்பல்.

விடவாள் விழியன்பர் நீங்கவென் றின்றேர் விரைந்திழுத்துக்
குடவால் வளையொலி கூர்மாலை நண்ணக் குடகடல்விண்
கடவாவுற் றீர்துறை சைக்கோ கழியரற் கண்ணலர்போல்
வடவா நலத்தின் வெதுப்புறு வீர்பச்சை மாவினமே. (௧௬௧)

### தலைவனீடத் தலைவி வருந்தல்.

சொன்னலந் தாங்கிய சொர்ணத் தியாகர் துறைசையன்னார்
மன்னலங் கையுறை காணுமுன் காண வருகிலரா
லென்னலந் தாமைம் புலன்களு மார வினிதருந்தி
நென்னலம் போதந்தி வெய்யோ னுடன்சென்ற நெஞ்சினமே. (௧௬௨)

### இதுவுமது.

சூளா மணியெங்கள் சொர்ணத் தியாகர் துறைசையன்பர்
வாளார் மடற்கண்ட னீழல்வந் தென்னை மணந்தகன்றார்
மீளாரென் கண்ணுங் கடல்போ லுறங்கில மீன்படுக்குந்
தாளாண்மை யெம்மையர் திண்டிமின் மீளுமித் தண்டுறைக்கே. (௧௬௩)

### தலைவியைப் பாங்கி கழறல்.

கூத்தாட வல்லவர் செம்பொற் றியாகர் குவட்டிறைவர்
நீத்தா ரெனையென்று நீநைவ தேனிறை நெஞ்சினிற்கக்
காத்தார் துறைசை யரசொன்றல் லாது கயல்விழியாய்
பூத்தாங் கரசென்ப தெல்லாம் பிரிந்தெங்கும் போய்வருமே. (௧௬௪)

### தலைவி முன்னிலைப்புறமொழி மொழிதல்.

அப்பற்ற செய்யிற் பசுங்கூ ழெனநெஞ் சயர்வதொன்றே
யொப்பற்ற பன்ன ரொருவிலென் னுமுயர் வான்றுறைசை
யெப்பற்று மற்றவர் காண்பாசி லாமணி யீசர்வெற்பிற்
செப்பற்ற முற்றவர் போதுனைப் பாருள்ளந் தேர்கிலமே. (௧௬௫)

### தலைவி பாங்கியோடு பகர்தல்.

தனத்தோ டணையினும் புல்லாப் பொழுதினுந் தம்மடியார்
மனத்தோ மகற்றி யருண்மாசி லாமணி வள்ளல்கதி
ரினத்தோங் கிருகட் சுடர்தருந் தன்மையு மெய்துவிப்பார்
கனத்தோடொக் குங்குழ லாய்திருக் கோகழிக் காவலரே. (௧௬௬)

### தலைவியைப் பாங்கி அச்சுறுத்தல்.

மருவிய காதலர் பான்மனம் வைத்தென்னை மற்றிருவர்
தருவியுங் காணருஞ் சொர்ணத் தியாகர் துறைசைவெற்பி
லருவியஞ் சார விருவியுந் தோற்றின வல்லுமெல்லுங்
கருவியங் கைந்நமர் வேட்டந் திரிவர் கனங்குழையே. (௧௬௭)
(பி - ம்:) மேன்மனம்வைத்துமென்.

### நீங்கற்கருமை தலைவி நினைந்திரங்கல்.

சிலைமேரு வாக்கொண்ட செம்பொற் றியாகர் செழுந்துறைசை
மலைமேற் கணவர்ப் பிரிந்தார் தனித்து வருந்தமின்னார்
தலைமேற் கொழுந னெழுதுங் கரவினைத் தானறிந்தே
கலைமே யவளவன் வாய்த்தால் விடாளெந்தக் காலமுமே. (௧௬௮)
(பி - ம்:) வருந்துமின்னார்.

### தலைவிக்கு அவன்வரல் பாங்கிசாற்றல்.

வார்தங்கு கொங்கைநின் கண்ணீர் துடைத்தருள் வான்றுறைசைச்
சீர்தங்கு செம்பொற் றியாகேசர் பாதச் சிலம்பொலிபோ
லேர்தங்கு தார்மன்னர் தேர்மணி யோசை யிருசெவியும்
வேர்தங்கு மாறென வீழ்குந கேட்டருள் வெள்வளையே. (௧௬௯)

### தோழி சிறைப்புறமாகத் தலைமகட்குச் செறிப்பறிவுறுத்தல்.

மாட்சியென் சொல்லுவல் சொர்ணத் தியாகர் வளர்துறைசைக்
காட்சியின் மிக்க மடமான் கிளிக்கதர் காட்டியப்பான்
மீட்சியில் லாம னமக்குந் தினைக்கும் விடைகொடுத்திங்
காட்சிகொள் வேங்கை விடைதரும் போலும்பின் னுண்டகைக்கே. ( )

### தோழி முன்னிலைப்புறமொழிமொழிந்து இற்செறிப்புணர்த்தல்.

நாவியும் பூங்குழ லெம்பெரு மாட்டியை நந்தமக்கோ
ராவியன் னாளென்று சொன்னார் மறக்கினு மஞ்சுகங்காள்
வாவிய மானினங் காளெம்மை நீவிர் மறக்கப்பெறீர்
மேவிய பூந்துறை சைக்கோ கழியரன் வெற்பிடத்தே. (௧௭௧)
(பி - ம்:) மேவிய கோகழி மூத்தித் தியாகர்தம்.

### பாங்கி தலைமகன்முன்னின்று இற்செறிப்புணர்த்தல்.

மன்றேறி யாடிய செம்பொற் றியாகர் வளர்துறைசைக்
குன்றே றிருங்கணி யார்போது காட்டக் குறித்தெமர்க
ளொன்றேன லங்குர லொன்றேனு மின்றி யொருங்குகொய்தா
ரின்றே யொழிந்தனம் யாம்புனங் காவ லிறையவனே. (௧௭௨)

பாங்கி தலைமகன் முன்னின்று இற்செறிப்புணர்த்தி ஓம்படைசாற்றல்.

மையார் கருங்கண்டர் செம்பொற் றியாகர் மகிழ்ந்தெனையு
மெய்யாமற் காத்தருட் கைதரு மீச ரெழிற்றுறைசை
யுய்யானஞ் சேர்தரு நாடிவள் யாரொரு வேலியென்றும்
பொய்யா தொழுகும் புனற்பொன்னி நீமன்ன போற்றுகவே. (கஎ௩)

(பி - ம்:) சேர்திருநாடு.

தலைமகன் தஞ்சம்பெறாது நெஞ்சொடுகிளத்தல்.

தண்டா தகிபுனை செம்பொற் றியாகனைத் தண்வரைக்கோ
தண்டாமன் றூவெனப் போற்றன்பர் வாழ்துறை சைப்பொருப்பிற்
றண்டாம வேனலைக் காத்தபின் னார்தணந் தார்கள்வல்லி
தண்டா னலாதிங் கினியாரைக் காண்பமவந் தானெஞ்சமே. (கஎ௪)

பகற்குறி முற்றிற்று

பகற்குறி இடையீடு.

இறைவனைப் பாங்கி தறிவரல்விலக்கல்.

மருதாளு மூரொங் கோமுத்தி யீசர் வளர்துறைசை
விருதாள வல்ல விறன்மன்ன ரேமென் றினைக்குரல்கொய்
தொருதாளு மின்றி யுடங்குழ வாரொம ருப்புனத்தி
லிருதாளு நோவவந் தென்பல காலுமக் கென்சொல்வதே. (கஎ௫)

இறைவியைப் பாங்கி தறிவரல்விலக்கல்.

அம்பலம் புஞ்சடைச் செம்பொற் றியாக ரணியரசூர்க்
கொம்பலங் காரக் கொடியிடை யாயுட் குறிப்பறியேன்
வெம்பலங் குற்றன்னை வெய்துயிர்த் தாள்விளை யாடமுன்போல்
வம்பலர் மாதவிப் பந்தரின் வாயினி வாரற்கவே. (கஎ௬)

இறைமகள் ஆடிடநோக்கியழிதல்.

புள்ளிப் புலியதட் செம்பொற் றியாகர் புகழ்த்துறைசை
வெள்ளிப் பொருப்பு மருவிச் சுனையும் விளைப்புனமுந்
தெள்ளித் தரளத் திழைத்தவிச் சிற்றிலுஞ் சேர்ந்துபின்னர்த்
தள்ளிப் பிரிந்தவர் நெஞ்சிலுண் டோவொரு தண்ணளியே. (கஎஎ)

பாங்கி ஆடிடம்விடுத்துக்கொண்டு அகறல்.

நம்மனை யாந்துறை சைத்திருக் கோமுத்தி நாதர்வெற்பி
லம்மனை யானவ ளாணையி லைணி யார்மயில்கா
ளெம்மனைக் கேகுதும் யாமிப் பரணிடத் தெய்திவருஞ்
செம்மனை யாமலெஞ் சீறா ரிதுவென்று செப்புமினே, (கஎஅ)

பின்னாள் நெடுந்தகை குறிவயின் நீடுசென்றிரங்கல்.

நஞ்சமு தாக்கொண்ட செம்பொற் றியாகர் நறுந்துறைசை
யஞ்செழுத் தெங்குரு நாதன் றனதடி யார்க்கொழித்த
சஞ்சிதம் போலத் தினைமுற்று மாளத் தளர்வடைந்தீர்
மஞ்சிவர் பூம்புனங் காளென்கொ லோவந்த வாறுமக்கே. (க௭௯)

(பி - ம்.) என்குருநாதன்.

தலைமகன் வறுங்களநாடி மறுகல்.

தினைபோகத் தாள்வைத்துச் சென்றன ரோதென் றுறைசைவெற்பிற்
சுனைபோய் வருபம ரங்காண் மதனன் றுரகதங்கா
ளனைபோ லருள்புரி செம்பொற் றியாகருக் கன்புசெய்வார்
வினைபோல வெய்த்திட நானிங்கு வாழ்ந்த விரைக்கொம்பரே. (க௮0)

தலைமகன் தலைமகள் வாழும் ஊர்நோக்கி மதிமயங்கல்.

மதிவைத்த வார்சடைச் செம்பொற் றியாகர் வளர்துறைசைப்
பதிவைத்த தீபமன் னாளூ ரிதுசெயற் பாலதின்று
னிதிவைத்த விஞ்சிப் புரத்தோர் வறியனின் றேங்கியென்ன
விதிவைத்த வாறறி யாதென்ற னாவி மெலிகின்றதே. (க௮௧)

பகற்குறி இடையீடு முற்றிற்று.

---

# இ ர வு க் கு றி.

இறையோன் இருட்குறிவேண்டல்.

மாற்கந் தரணியிற் காணவொண் ணாதிருண் மண்டுகங்குற்
கூற்கந் தரம்பெயுஞ் சொர்ணத் தியாகர் துறைசைச்சங்கம்
போற்கந் தரமுடை யீரத னாலும் பொருப்பினில்வாழ்
வேற்கந் தரன்பன் விருந்தாய்வந் தேனுங் வியன்பதிக்கே. (க௮௨)

(பி - ம்:) உங்கண்மென்பதிக்கே.

பாங்கி நெறியினதருமைகூறல்.

பருங்கங்கு லாவுகைச் செம்பொற் றியாகர் பதியரசூர்
வருங்கங்கு லாங்கறை வேலண்ண லேகரி வாய்க்கவரி
பொருங்கங்கு லாவுஞ் சிலைமால்வெந் தீயி னுருமுருக்குங்
கருங்கங்கு லானதில் யார்வரு வாரெங் கடிநகர்க்கே. (க௮௩)

தலைவன் நெறியினது எளிமைகூறல்.

சித்துக் கியான்மிக வல்லனங் காயுங்கள் செல்விசிதம்
பத்துக் கிடைக்குக்கொங் கைக்குக் குழற்குப் பணிந்தபுயங்
கத்துக் கரிக்குக் கரிக்கந்த காரத்துக் கஞ்சலன்கோ
முத்திப் பதிக்குட் கனகத் தியாகர் முதுகுன்றிலே, (க௮௪)

### பாங்கி அவளுட்டணி இயல் வினாதல்.

பொன்னணி யாது புனையாடை யாது புதுமலரு
நன்னகிற் பூசுங் களபமும் யாது நறும்பொழில்யா
தின்னமு தேயன்ன சொர்ணத் தியாக ரெழிற்றுறைசை
மன்னவ ரேயுங்கள் காவிரி நாட்டுறை மங்கையர்க்கே. (க௮௫)

### தலைவன் அவளுட்டணி இயல் வினாதல்.

தொங்கலும் பான்மங்கை சொர்ணத் தியாகர் துறைசையைச்சூ
ழெங்கள்பொன் னூட்டி னணியியல் கூறியின் றென்பயன்கா
ணுங்கண்மன் னூட்டின் மடவார்க ளாடிட பொண்கலன்பூ
மங்களப் பூந்தழை சாந்தொடெல் லாஞ்சொல்லு வாயெனக்கே. ()

(பி - ம்:) உங்கண்மன்னூட்டின்.

### தலைமகற்குப் பாங்கி தன்னூட்டணி இயல் சாற்றல்.

சூட்டழற் கண்ணுதற் சொர்ணத் தியாகர் துறைசைவெற்பா
சேட்டிளங் காந்தளுஞ் சந்தனப் பூச்சுஞ்செம் மாந்தழையுங்
கோட்டுமுத் தோடு குருவிந்த மாலையுங் கொண்டணிந்தென்
னூட்டுறை மாதர் விளையாடுஞ் சோலைநன் னகங்களே. (க௮எ)

### பாங்கிதலைமகட்குத் தலைமகன் குறையறிவுறுத்தல்.

இறைவனை யாய்த்தென் றுறைசையெங் கோமுத்தி யீசர்வெற்பி
னறையடைந் தேறி யதிர்கருங் கொண்டலை யாங்குலவுங்
கறையடி தாமென்று கண்டீர வங்கள்கண் டீர்ந்ததிரு
நிறையிருட் கங்குலின் வாய்வரு வான்பன்னு நின்னிடத்தே. (க௮அ)

### நேராதிறைவி நெஞ்சொடுகிளத்தல்.

தனையவர் மாதரைப் பேதைய ரென்னுஞ்சொல் ச[illegible]நெஞ்சே
நினைசெறி வேங்கைகள் பாய்சிற் றதரி னெடுந்துறைசை
யனையத ளாடையர் செய்பொற் றியாகருக் கன்பிலர்போற்
புனையிருள் வாயன்பர் தாம்வர லொப்பினள் பூங்கொடியே. (க௮௯)

(பி - ம்:) வரவொப்பினள்.

### தலைமகள் நேர்ந்து பாங்கியோடுரைத்தல்.

நந்தலை வாவித் துறைசையெங் கோமுத்தி நாதர்வெற்பி
லைந்தலை நாக மகன்முழைக் கண்டஞ்சு மன்றுதங்கை
தந்தலை யேயென்றொர் மந்திரங் கூறித் தடுத்தளித்த
வெந்தலை வர்க்கினி நான்சொல்லு மாறென்கொ லேந்திழையே. ()

### தலைமகனேர்ந்தமை பாங்கி நேர்ந்தகைக்குணர்த்தல்.

வாமத்தி லோர்பெண்ணர் கோமுத்தி யீசர் வளர்துறைசை
நாமத்தை வேலண்ண லுன்பொருட் டாக நயப்பினிற்றை
யாமத்தென் பாவைக்குக் கற்றவெல் லாஞ்சொல்லி யானிரந்தேன்
தாமத்தைம் பாற்றலை சாய்க்கப்பெற் றேனற் றயாவினையே. (க௯க)

### பாங்கி தலைமகனைக் குறியிடத்துநிறுத்தித் தாய்துயிலறிதல்.

குயிலாய சொல்வல்லி செம்பொற் றியாகர்தங் கோமுத்தியூர்க்
கயிலாய வெற்பிற் பணிப்படங் கீண்டு கவண்களுக்கு
வெயிலார் மணிதந்த தோகைக டேக்கின் வியன்குடம்பைத்
துயிலாத வண்ணங் கனிறொன் றுரிஞ்சிச் சுலாய்வருமே. (௧௯௨)

### பாங்கி தலைமகட்குத் தலைமகன் வரவறிவுறுத்தல்.

எண்கோட்டு சாரல்வந் தின்புற் றகன்றவ ரின்றுதந்தி
வெண்கோட்டு வேலி மனைக்கேவந் தாரென்றன் வெவ்வினைநோய்த்
திண்கோட்டி தீர்த்த துறைசைத் திரவியத் தியாகர்வெற்பிற்
றண்கோட்டுச் சாந்தந் தருந்தழை தந்தவர் தாழ்குழலே. (௧௯௩)

(பி - ம்:) தழைதந்தனர்.

### பாங்கி தலைமகளைக் குறியிடத்துக்கொண்டுசேறல்.

கையாழி நன்மணித் தீபத்தில் வந்தனர் காதலர்போர்
செய்யாழி மாற்கருள் செம்பொற் றியாகர் திருத்துறைசை
யையாழி னின்மொழி வாவொல்லைப் போதுக மாதரவாய்
மையாழி நீருண்ட மஞ்சின் மயில்கள் வளர்பொழிற்கே. (௧௯௪)

(பி - ம்:) கண்வளர்.

### பாங்கி தலைமகளைக் குறியிடத்து உய்த்துநீங்கல்.

உரற்காற் கரிமருப் பார்முலை யாயுன்செவ் வாய்க்குடைந்த
வரக்காம்ப லீங்கிவை காணினி நானரு ளாகமநற்
சிரக்கார் துறைசைக் கனகத் தியாகர் சயிலத்துன்றுள்
பொரக்காட்டு மாம்பல் லவங்கொய்து வந்து புனைகுவனே. (௧௯௫)

### தலைமகன் தலைமகளைக் குறியிடத்து எதிர்ப்படுதல்.

இடையா வருக்குந் தெரியாய் மதியின் னெழின்முகத்துக்
குடையா வகன்றன ளேவத னாலுன் னுறையுள்சற்று
மடையா திருந்தது வோமாசி லாமணி யாரருள்போற்
றடையாது மின்றிவந் தாபர சூர்வரைத் தண்டலைக்கே. (௧௯௬)

### தலைமகள் ஆற்றினது அருமை நினைந்திரங்கல்.

பைஞ்சூரன் மண்டிய கான்யாறுந் தீய பரனெறியும்
வெஞ்சூர் வழங்கு மிசும்புங் கடந்திருள் வேலையிடைத்
துஞ்சூரொம் மில்லிடைச் சொர்ணத் தியாகர் துறைசைவளர்
மஞ்சூர் மலையன்ப நீவந்த வாறெங்ஙன் மாலறவே. (௧௯௭)

(பி - ம்:) கடந்திவ்விருளெவரும்.

### தலைமகன் தலைவியைத் தேற்றல்.

நீலார் முகின்மின் னுங் கைவேற் சுடருமுன் னீயெறிந்த
நாலாந்திக் குற்ற கவண்மணிக் காந்தியு நானிலத்து

மேலா வடுதுறைச் செம்பொற் றியாகர்தம் வெள்ளிவெற்பி
னூலான நுண்ணிடை யாயசந்த காரத்தை நுங்கியவே. (௧௯௮)
(பி - ம்:) நுங்கியதே.

புணர்ச்சியின் மகிழ்தல்.

சோகந் தவிர்த்தருள் சொர்ணத் தியாகர் துறைசையந்தேன்
பாகந் தருஞ்சொல் லிவளைப் புணர்தொறும் பண்டையிலுந்
தாகந் தவிர்சுக மேற்பட லாற்கொங்கை தன்னுளதி
போகந் தருநற் குளிகைவைத் தான்கொலப் போதயனே. (௧௯௯)

புகழ்தல்.

இகத்தினு மெய்தும் பரத்தினு மன்பர்க் கிருந்துறைசை
யகத்திருந் தின்பருள் செம்பொற் றியாக ரசலத்திந்து
முகத்தினல் லாயுன் மிடற்றெழில் கண்டபின் மூரிமுந்நீர்ச்
சகத்திடை யில்லை முகஞ்சுரி யாதநற் சங்கங்களே. (௨௦௦)

தலைமகனைத் தலைமகள் குறிவரல்விலக்கல்.

குவலையந் தாங்குங் குவலையத் தோளன்ப கோளரிபா
யவலையுந் தாண்டி வினையேன் பொருட்டர சூரன்பர்பா
சவலையைத் தீர்த்தருள் செம்பொற் றியாகர் சயிலத்தில்வேய்க்
கவலையி னூடு கவலையின் வாரலிக் கங்குலிங்கே. (௨௦௧)

தலைமகன் தலைமகளை இல்வயின்விடுத்தல்.

கற்பா ருமைபங்கர் செம்பொற் றியாகர் கலைமுழுதுங்
கற்பார் துறைசைக் கரும்பன்ன சொல்லிநின் கைத்தளிராற்
கற்பார் புகையுந் தளிருங்கொய் யாதுன் கமலவில்லிற்
கற்பா ரடிவைத்துச் சென்றுசெய்ம் மோவினிக் கண்படையே. (௨௦௨)

பாங்கி தலைமகளையெய்திக் கையுறைகாட்டல்.

முற்று முலைக்கு நகைக்குநின் வாய்க்கு முழுப்பகையாம்
பொற்று மனைமுல்லை சேதாம்ப லுங்கொய்து போந்தனன்காண்
மற்று ரணங்குநின் வார்குழற் காமெழு வான்பொழிற்கும்
பற்றுந் துறைசையெங் கோமுத்தி யீசர் பருப்பதத்தே. (௨௦௩)

பாங்கி தலைமகளை இற்கொண்டகறல்.

செங்கானி வாவித் துறைசைத் திரவியத் தியாகர்வெற்பி
லிங்கா ரிருளி லினபாங் குவளைகொய் தீரொன்றன்னை
யங்கா மனந்தற் குவளை விழித்தச் சுறுத்துமுன்போ
நங்கா யுனது திருமனைக் கொல்லை நடந்தருளே. (௨௦௪)

பாங்கி தலைமகனைப் பின்சென்று வரவுவிலக்கல்.

ஆட்டுகந் தாடுந் துறைசையெங் கோமுத்தி யப்பர்வெற்பர்
கோட்டிருஞ் சாந்து மகிலுங் குறவர் குறைத்தெரிவாய்

மாட்டும் புகையிற் றிகைதெரி யாவெல்லி வாரலிங்கே
பூட்டிடும் பொன்னுறை கோயிலுக் காயிரம் பொற்கதவே. (௨௦௫)

தலைமகன் மயங்கல்.

எண்ணும் புகழ்த்துறை சைத்திருக் கோமுத்தி யீசர்வெற்பிற்
கண்ணு மணியுமொத் தம்மானு நானுங் கலந்துநல
முண்ணும் பரிசை யுணர்ந்துநெல் லிக்கனி யூடுநஞ்ச
நண்ணுமெட் டிக்கனி யிட்டனை போலு நறுநுதலே. (௨௦௬)

தோழி தலைமகள் துயர்கிளந்து விடுத்தல்.

அறியாமை நீக்குந் துறைசையெங் கோமுத்தி யப்பர்வெற்பா
நெறியாது மின்றிக் கருங்கேழல் கீண்டிடு நீண்டவிருள்
செறியாம முன்னிரை வாளுய்ய நின்னகர்ச் சேர்ந்தபின்னர்க்
குறியாவெம் பாவைக் கறிவிக்க வேண்டுநின் கோட்டொலியே. (௨௦௭)

திருமகட்புணர்ந்தவன் சேறல்.

உருவார்வண் டின்பெயர் பெற்றன வொன்றற வொன்றடினும்
வெருவாதெம் மூர்செலற் கையமின் றேழையன் மெய்யடியார்
மருவா வடுதுறைச் செம்பொற் றியாகர் வரையின்மங்கை
திருவாய் நகைவெண் ணிலாவிருள் சீத்திடுஞ் சென்னெறிக்கே. ()

இரவுக்குறி முற்றிற்று.

## இரவுக்குறி இடையீடு.

இறைவிக்கு இதுளை இறைவரவுணர்த்தல்.

பிடிவள மென்னடை யாயேது வென்னைகொல் பேட்டுடனே
கடிவளர் புன்னையங் காவிற் றுறைசைக் கதிர்மகுட
முடிவள வன்றொழுஞ் செம்பொற் றியாகரை முன்னலர்போல்
விடிவள வுந்துயி லாதலம் வந்தன வெள்ளன்னமே. (௨௦௯)

தான் குறிமருண்டமை தலைவி பாங்கிக் குணர்த்தல்.

மாண்டகு பூங்குழல் வந்தே னயர்த்துமற் றோர்குறியை
யாண்டகை யின்குறி யாமென்று சென்றணி யார்துறைசைத்
தாண்டவ மாடிய சொர்ணத் தியாகர் சரணமலர்
காண்டலில் லாத கசடரைப் போலக் கருத்துடைந்தே. (௨௧௦)

பாங்கி தலைமகன் தீங்கெடுத்தியம்பல்.

எளியார்க் கிரங்குந் துறைசையெங் கோமுத்தி யீசரடிக்
களியார் மலரிட் டறியா தவரி னணங்குநின்கண்
டெளியாரத் தோள்வளை சோரநெஞ் சாரத் துணிந்திரவிற்
றெளியாக் குறியினைத் தீயோர் நமக்கின்று செய்தனரே. (௨௧௧)

### தலைமகன் புலந்துபோதல்.

என்புகல் வேனுன்னை யேழைநெஞ் சேநள் ளிருளிலென்னைத்
துன்புற மற்றவ ளைஞ்சுகின் போலெனச் சூழ்ந்தறியா
தின்புற வெண்ணித் துறைசையெங் கோமுத்தி யீசரடிக்
கன்புசெய் யாதவர் தீவினை போல வலைத்தனையே. (௨௧௨)

### புலர்ந்தபின் வறுங்களம் தலைவிகண்டிரங்கல்.

ஆர்ப்பர வஞ்செய் தடிதாழச் சங்க மலர்நகையாற்
கார்ப்பர வைத்துறை வாழ்புன்னை காள்கைதை காடுறைசை
யூர்ப்பரன் கோமுத்தி யீசற்கு நேசரி னெண்கழித்தண்
சேர்ப்பரன் போடெல்லி வந்தன ரோவுண்மை செப்புமினே. (௨௧௩)

### தலைமகள் பாங்கியோடுரைத்தல்.

கடப்பந் தொடையரிற் கைவே லொடுமன்பர் கானலிற்போந்
தடப்பம் பொழினின்று சொன்னவை யாவும்பொய் டாயினவாற்
கெடப்பந்த நீத்தருள் செம்பொற் றியாகர் கிளர்துறைசைத்
தடப்பங் கயமுகப் பாவாயுன் சிற்றிடைத் தன்மையொத்தே. (௨௧௪)

### தலைமகளவலம் பாங்கிதணித்தல்.

சென்னிக் கருள்செய்த சொன்னத் தியாகர் செழுந்துறைசைப்
பொன்னித்தெண் ணீத்தமு நம்மன்பர் வாய்ச்சொல்லும் பொய்ப்பதின்று
துன்னிக் குறிபிழைத் தாரென் றிரங்க லொளிவளையாய்
கன்னிப்புன் னைக்கருங் காவிச்செங் காவியைக் காவியதே. (௨௧௫)

### இறைவன்மேற் பாங்கி குறிபிழைப்பேற்றல்.

இங்கேத சாகரத் தெங்களை வீழ்வித்தங் கேகிச்சொன்ன
சங்கேதங் தப்ப விருந்தனை யேதண் டுறைசைமங்கை
பங்கேயுஞ் செம்பொற் றியாகர்வெற் பாவுன் பதிவினவி
யங்கே வரவெண்ணி னேம்பொன்னி யாற்றினுக் கஞ்சினமே. ()

### இறைவிமேல் இறைவன் குறிபிழைப்பேற்றல்.

விறப்பறி யாமையை நீக்கியென் றீவினை வேருடனே
யறப்பறித் தாண்ட துறைசையெங் கோமுத்தி யப்பர்வெற்பிற்
சிறப்பறி வுள்ள திருமா தயர்ப்பினுஞ் சேயிழையான்
மறப்பறி யேன்மண்ணி லின்னுமொர் சன்ம மருவினுமே. (௨௧௭)

### தலைமகள்குறிமருண்டமை தோழி தலைமகற்குணர்த்தல்.

செறிதேம் பொழிலிற் சுனைக்கெண்டை பாய்தொறுந் தெள்ளிருளிற்
பிறிதேது நின்குறி யேயென்று சென்று பெருங்கரத்தின்
மறிசேர் துறைசை யணைத்தெழுந் தாரருள் வாய்த்திலர்போல்
வெறிதேபின் மீண்டன ளானின்று பார்த்தன்ப மின்னிடையே. ()

### அவன்மொழிக்கொடுமை சென்று அவள் அவட்கியம்பல்.

வார்க்கும்ப மென்முலை சானுவெல் லாமெண்கு வண்குரும்பி
பேர்க்கு மிருள்வந் துறங்காது புள்ளினம் பேட்டொடட்ழிந்
தார்க்கும் படிசெய் தலம்வந்து கோமுத்தி யப்பரர
சூர்க்குப்பின் போயின மென்றுருன் ஞசை யுடையவரோ. (௨௧௯)

### என்பிழைப்பன்றென்றிறைவிநோதல்.

தேமாங் கனிதண் கயத்திடை வீழ்தொறுஞ் சிந்தித்தெண்ணி
யேமான் மனத்தொ டிருந்தனன் யானன் னிரவிலிங்கே
மாமா சிலாமணி யாரர சூரன்பர் வந்துகொன்னே
போமாறு செய்தன ரென்று லினியென் புகல்வதுவே. (௨௨௦)

### தாய்துஞ்சாமை.

வெள்ளிப் பிறையணி செம்பொற் றியாகர் வியன்றுறைசை
யுள்ளிப் பணிந்தறி யார்நெஞ் சமூக்கி னுலகடங்க
வள்ளிக்கொள் வன்ன நிறையிருள் யாமத்து மன்னேகண்க
ளெள்ளிற் பகவள வுந்துஞ்சி டாவஞ்சி யென்செய்வமே. (௨௨௧)

### நாய்துஞ்சாமை.

சீயாது செய்வனிப் பெண்ணென் பிறவிக்கென் செல்வர்வரத்
தூயார் துறைசைநஞ் சொர்ணத் தியாகர்க்குத் தொண்டுசெய்யாப்
பேயான வாதிகள் வாய்குரைத் தாங்கிப் பெருங்கங்குலு
யோயாதை யோகுரைத் தாய்துஞ்சி னுலு முறங்கிலவே. (௨௨௨)

### ஊர்துஞ்சாமை.

தொழக்கேத நீத்தருள் சொர்ணத் தியாகர் துறைசையுறூர்
சழக்கே யுரைத்துச் சிலைத்தலை மானத் தயங்குவெள்ளி
கிழக்கே யுதிக்கும் வரையுமிவ் வூரர் கெழுமிமத
வழக்கே யுரைத்துறங் கார்மறங் காலயின் மைக்கண்ணியே. (௨௨௩)

### காவலர் கடுத்தல்.

செப்பறை பூண்முலை செம்பொற் றியாகர் திருத்துறைசை
யொப்பறை வேன்மன்னர் தேரொலி கேட்கவொட் டாமணிதி
வைப்பறை காப்பவர் மானவிவ் வூர்வளை காவலர்தங்
கைப்பறை யோசைக் கடுங்கனல் வீழுநங் காதகத்தே. (௨௨௪)

### நிலவுவெளிப்படுதல்.

வெட்டும் படைக்கண்ணி கோமுத்தி யீசர் விரைமலர்த்தாள்
பெட்டும்பர் போற்றுந் துறைசைநம் வேந்தர்தம் பேரொலித்தேர்க்
கட்டும் பரிகள் கடந்தெங்ங னேவருங் கண்டதிக்கோ
ரெட்டுங் கதிர்வெண் ணிலாவலை வீசி யிருக்கின்றதே. (௨௨௫)

### கூகை குழறல்.

ஈகையர் வாழுந் துறைசையெங் கோமுத்தி யீசர்மெய்ந் நூ
லோகையிற் றேரப் பெருமத்தர் பித்துறை யொத்துமின்னே
வாகையி லேறிநம் முள்ளந் திடுக்கிட மல்கிருள்வாய்க்
கூகையெல் லாங்குழ றுகிற்கு மானற் குறியல்லவே. (௨௨௬)

### கோழி குரற்காட்டுதல்.

சேவார் பதாகைத் துறைசைத் திரவியத் தியாகர்வெற்பர்
பூவா ரயிலொளி கண்டே பொழுது புலர்ந்ததென்றோ
வாவா வதிசயம் பானு விரவி லகனகனாக்
கூவா வெழுப்புஞ்செஞ் சூட்டுமுட் டாள்வன் குருகுகளே. (௨௨௭)

## இரவுக்குறி இடையீடு முற்றிற்று.

## வரைதல் வேட்கை.

### தலைமகளைப் பாங்கி பருவரல்வினுதல்.

தடுத்துறை யாதநல் லாயத்துண் டோசெய் தவ றுநெஞ்சங்
கடுத்தன ளோவன்னை சொர்ணத் தியாகர் கவின் றுறைசைத்
தொடுத்தவெண் முல்லை யிலம்பகஞ் சூட றுறந்தனைநெஞ்
சடுத்ததிங் கேது விடுத்தருள் வாய்பெண் ணரசெனக்கே. (௨௨௮)

### தலைமகள் அருமறைசெவிலி அறிந்தமைகூறல்.

நீதித் துறைசைநங் காதலர் தம்மை நினைந்து நினைந்
தாதித் தனைக்கண்ட வம்புலி போல வயர்ந்துமுகம்
பேதித் திருத்தலிற் கோமுத்தி யீசர் பிறங்கலன்னை
சோதித் தறிந்தவள் போலறிந் தாணந் தொடக்கினையே. (௨௨௯)

### தலைமகள் தலைமகன்வருந்தொழிற்கருமைசாற்றல்.

சொரிந்தசொல் வாயன்னை ஞாளியிவ் வூர்விழி துஞ்சினுமூர்த்
திரிந்தவெங் காவலர் சீறுவர் கான்றிடுந் திங்கணிலா
வரிந்தமென் கொங்கை குடிஞையுங் கோழியும் வாயடையா
பிரிந்தனங் கோமுத்தி யீசன் றுறைசையெம் பெட்பனையே. (௨௩0)

### தலைவி தலைமகனூர்க்குச்செல்ல ஒருப்படுதல்.

அருங்கடி யாயி னெடுங்காவ னீவிநம் மாசைதள்ள
நெருங்கடி யார்தண் டுறைசையெங் கோமுத்தி நித்தர்வெற்பின்
மருங்கடி யார நடந்துவந் தென்னை மணந்தவரூர்க்
கிருங்கடி யார்குழ லாய்செல்வு மோவுட னெய்துதற்கே. (௨௩௧)

### பாங்கி இறைவனைப் பழித்தல்.

கடுக்கண்ட னையனங் கோமுத்தி யீசன் கவின்றுறைசை
வடுக்கண் டனைய விழிமொழி யாய்மற வார்மறந்தே
யிடுக்கண் டனைவிளைத் தாரினி யாரரு ளெவ்வழி
நடுக்கண் டனையறி யாதெய்தி நாமங்கு நண்ணுவதே. (உ௩உ)

### தலைமகள் இயற்படமொழிதல்.

துறந்தன ரேயென் றினையன்மின் னேகண் சொரிமழையு
நிறந்தபு மேனியு நீங்கா விருளு நினைத்தலின்றிச்
சிறந்ததென் றுவடு தண்டுறைச் செப்பொற் றியாகர்வெற்பர்
மறந்தது வேறில்லை யாற்றொல்லை நாஞ்செய்த வல்வினையே. (உ௩௩)

### தலைமகள் கனவுநலிவுரைத்தல்.

அரிதாந் துயிலொன் றதிசய மாய்வர வங்ஙனம்யான்
பெரிதாய் வருந்தப் பிரிந்தார்வந் தோன்றவும் பெற்றின்புறு
தெரிதாங்கு கையர் துறைசையெங் கோமுத்தி யீசர்வெற்பிற்
சரிதாங்கு கைகொ டமளிதை வந்தனன் றாழ்குழலே. (உ௩௪)

### கவினழிபுரைத்தல்.

தவத்தின்மிக் காமென் றலைவருண் ணுமற் றடுத்திடையே
பவத்தின்மிக் காமென் னலத்தையெல் லாமிப் பசலையுண்டே
சிவத்தர சூர்வளர் செம்பொற் றியாகரைச் சேர்ந்திறைஞ்சா
வவத்தரைத் தேய்க்கு மருவினை போல வரிக்கின்றதே. (உ௩௫)

### தலைமகள் தன்றுயர் தலைவற்குணர்த்தல்வேண்டல்.

ஆரத் தலர்முலை யாயிழை யூரற் கலம்புபொன்னித்
தீரத் தலர்தென் றுறைசைத் திரவியத் தியாகர்வெற்பிற்
பீரத் தலர்சில கொண்டின்ன ளாயினள் பெண்கொடியென்
றீரத் தறைகுநர் தாமுள ரேலுய்யு மென்னுயிரே. (உ௩௬)

### துன்புறுபாங்கி சொல்லெனச்சொல்லல்.

நெறிவூர் குழலி திருவா வடுதுறை நேசரென்னை
முறிவாங்கி யாட்கொண்ட செம்பொற் றியாகர்நம் முத்தர்வெற்பர்
பிறிவாரி னீங்கியென் னுள்ளே யொளித்தென் பிணியையெல்லா
மறிவா ரவர்க்கென்கொல் யான்புதி தாவின் றறிவிப்பதே. (உ௩௭)

### தலைமகள் அலர்பார்த்துற்ற அச்சக்கிளவி.

செய்யலர் வாசத் துறைசைத் திரவியத் தியாகர்வெற்பின்
மையலர் வீழு மதர்விழி யாயடன் மாமதனுந்
தையல ருங்கையின் வாயிற் றொடுத்திடுந் தையலர்க்குக்
கையலர் வண்டுக மைகிழித் தோடுமென் கட்புனலே. (உ௩௮)

(பி - ம்:) 'வண்டுதமைக்கழித் தோடும்,

### ஆறுபார்த்துற்ற அச்சக்கிளவி.

ஆருச் சினத்தரி யார்க்கின்ற சாரலி லாடருவி
யாறு யிரங்கடந் தன்பர்வந் தேகி லணங்கரூ
ராறுறுக் கப்புற மாய்நின்ற கோமுத்தி யப்பர்வெற்பி
லாறு ரிருட்டுணை யாவர்கொல் லோவென வஞ்சுதுமே. (உ௩௯)

### காமமிக்க கழிபடர்கிளவி.

பானலம் போற்கண்டர் செம்பொற் றியாகர் பதியரசூர்க்
கானலம் போதினங் காள்வண்டு காள்கண்டல் காளெணையின்
றேனலம் போக வழுதியென் னீர்நன் றிருந்துறைவன்
றானலம் போதக் கனைவரு நாளென்று சாற்றுமினே. (உ௪0)

### தன்னுட் கையாறெய்திடுகிளவி.

சத்தாமெங் கோமுத்தி யீசன் றுறைசைத் தடந்துறைவாய்க்
கொத்தார்பைஞ் ஞாழல் கரியாப் புளினத்திற் கூடிநம்மை
யெத்தாற் பிரிந்தவர் வாரா விடிலிங் கினிநெஞ்சமே
தொத்தா ரழற்றளி ராவதல் லாது சுகமுளதே. (உ௪க)

### தலைமகள் நெறிவிலக்குவித்தல்.

தோட்டார் கதுப்பிளந் தோகாய்பொற் பாதந் தொழுதுபொன்னி
நாட்டா வடுதுறைச் செம்பொற் றியாகர் நடநவிலுங்
காட்டார் கழுது மியங்கா விழுதிருட் கங்குலின்வாய்
வாட்டானை வேந்தர் வருமா றெழிநம் மனையகத்தே. (உ௪உ)

### தலைமகள் குறிவிலக்குவித்தல்.

அளைவா யரவும் பிறையுஞ் சடைக்கணிந் தன்பர்துன்பத்
தளைவாங்கு கோமுத்தி யீசன் றுறைசைச் சயிலத்தன்னை
விளைவாந் தினையின்னுங் காக்கச்செல் கென்றனண் மெல்லியலா
யுளைவா யனையிருள் வாரன்மி னென்றன்பர்க் கோதுகவே. (உ௪௩)

### வெறிவிலக்குவித்தல்.

உயருந் தவத்தினர் சொர்ணத் தியாக ரொராயிரநற்
பெயரும் பரசுந் துறைசைநன் னாடன் பெரிதருளாற்
றயரும் படிசெய்த நோயறி யாதன்னை சூழ்வெறியாட்
டயரு மணங்கணங் கிற்றன் றெனவுரை யாயிழையே. (உ௪௪)

### பிறர்விலக்குவித்தல்.

முத்தலை வேலர் துறைசையெங் கோமுத்தி முத்தர்வெற்பிற்
பைத்தலை நாகந் தருமணிப் பேழை பலவுங்கொண்டே
யத்தலை வந்தன ரேதில ரென்ன வழற்பகழி
தைத்தலை மானுமென் காதா டினவண்டு தாழ்குழலே. (உ௪ரு)

### தூரவரை வரைவெதிர்கோள்ளுவித்தல்.

நிந்தை யுறுமனங் கற்பா நிமித்தமு நீருகற்குத்
தந்தைநங் கோமுத்தி யீசன் றுறைசைத் தடஞ்சிலம்பி
லெந்தையும் யாயு மறிவா னுரைத்தி யிபம்பலேயேற்
சிந்தைவெந் நோயிற் பழியுயிர்க் கேதமுஞ் சேருமின்னே. (உசசு)

### வரைதல்வேட்கை முற்றிற்று.

## வரைவுகடாதல்.

### வினவியசெவிலிக்கு மறைத்தமை விளம்பல்.

அறைவாயி லன்னைமின் னேயயர் வேதென்ன வாரணங்க
ளறைவான் றுறைசைக் கனகத் தியாகர்வெற் பார்பளிங்கி
னறைவாய் மிதித்து விளையாடத் தாள்கொப்பு ளாயிற்றென்று
ளறைவார் கழலண்ண லேபின்னை யென்செயு மாரணங்கே. (உசஎ)

### அலரறிவுறுத்தல்.

காரொன்று காலனைக் காய்ந்தருள் கோமுத்திக் கத்தர்பைஞ்சூற்
காரொன்று சோலைத் துறைசைவெற் பாவெங்கள் காரிகைக்கு
நாரொன்று கொண்டலர் நீதொடுத் தீந்தவந் நல்லருளா
லூரொன்றி லாம லலர்தொடுப் பாரிந் நகரவரே. (உசஅ)

### தாயறிவுறுத்தல்.

கிளியா கமங்கள் கிளத்திடப் பூவைகள் கேட்டுருகு
மளியா வடுதுறைப் புத்ரத் தியாகர்வெற் பாவளித்த
வெளியார் பருதி யிளங்கதிர் நாணவில் வீசுமணி
யொளியாற் களவையெல் லாமுணர்ந் தாளன்னை யுப்பொழுதே. ()

### வெறியச்சுறுத்தல்.

மணிப்பாந்த ளாரத்தர் சொர்ணத் தியாகர் மலைத்தலையைத்
துணிப்பார் துறைசைவெற் பாமுன்பு நீதந்த சூழ்மயக்கைப்
பிணிப்பால வென்று பெருஞ்சங்கை பூண்டெம் பிராட்டிமெய்ந்நோய்
தணிப்பான் றொடங்கின ரால்வெறி யாடலைத் தாயர்களே. (உ௫0)

### பிறர்வரைவுணர்த்தல்.

வயலாம்பல் புன்கலர் வண்டொலி தீப்பொரி மந்திரமா
வியலா யனமணஞ் செய்பொன்னி நாட வெழிற்றுறைசைக்
கயலாய கண்ணிக்குச் சொர்ணத் தியாகரிற் காணநல்க
வயலார் கருதுகின் றூர்முயல் வாயுன்னி னுவதின்றே. (உ௫க)

### வரைவெதிர்வுணர்த்தல்.

இழிவழி நாடி யிளைத்தேனை யாண்டவெங் கோன்றுறைசை
வழிவழி மாலயன் றேண்டுசெய் கோமுத்தி வள்ளல்வெற்பா
பிழிவழி தாழ்மறை யோருட னீதுன்னிற் பின்னருன்றன்
மொழிவழி நிற்பளொங் கேளிசொல் லாரு முகமலர்ந்தே. (௨௫௨)

### வரையுநாளுரைத்தல்.

ஆராயு நாண்மற்றென் வேங்கைகள் வேங்கை யளித்தனவேல்
வீரா துறைசையிற் செம்பொற் றியாகர்தம் வெண்குழையை
வாரார் சடைக்கொன்றை மாலைமுன் னன் று வளைந்தொப்ப
வேரார்வெண் டிங்களு மூர்கோ ளடுத்துவந் தெய்தியதே. (௨௫௩)

### தலைமகளறிவு தலைமகற்கு அறிவுறுத்தல்.

பண்ணையம் பார்க்குந் துறைசைப் பரமர்நற் பாண்டரங்கம்
பண்ணையர் கோமுத்தி யீசர்வெற் பாவுன் பழியையன்னை
பண்ணையின் னொன வேயறி யாவகை பார்த்தெனையும்
பண்ணையுந் தேமொழி நாணு மறைத்தனள் பாங்குறவே. (௨௫௪)

### குறிபெயர்த்திடுதல்.

கோன்மாறி டாவில்லர் செம்பொற் றியாகர்தென் கூடன்மன்றிற்
கான்மாறி யாடிமுன் காத்தார் துறைசைகண் ணார்வினைகள்
போன்மாறி மாறி வருவார் சிலருண்டிப் பூம்பொழினீ
தான்மாறி வேறோர் பொதும்பர்சென் றுடத் தயவுசெய்யே. (௨௫௫)

### பகல்வருவானை இரவுவருகென்றல்.

முன்னந் தடவரை விற்கொண்ட கோமுத்தி மூர்த்தியெங்கோன்
பொன்னந் தடந்துறை சைக்கா விரிப்புனல் போர்த்தநெய்தற்
பன்னந் தடப்படி முத்தின முட்டை பலமறைய
வன்னந் தடவுந் துறைவா பகல்வரி னும்பழியே. (௨௫௬)

### இரவுவருவானைப் பகல்வருகென்றல்.

சிலவங்க மாலையர் செம்பொற் றியாகர் திருத்துறைசைப்
பலவங்க மாருங் கடற்றுறை வாவின்னும் பைந்தளிர்போற்
குலவங்க மாதின் மொழிக்கிடை கிள்ளைக் குழாம்பயிலு
மிலவங்க வெற்பிற் றினைகாத்து நீவந் தெமக்கருளே. (௨௫௭)

### பகலினும் இரவினும் பயின்றுவருகென்றல்.

புகலுந் துதிக்கருள் செம்பொற் றியாகர்தம் பூந்துறைசை
யகலும் பராரைத் தடஞ்சிலம் பாமைக்க ணாலிசிந்த
விகலுங் கரும்பன் பெரும்போர்க் கிளைக்கு மிவள்பொருட்டாற்
பகலு மிரவும் பயின்றுவந் தின்னருள் பாலிப்பையே. (௨௫௮)

## வரைவுகடாதல்.

### பகலினும் இரவினும் அகலிவனென்றல்.

பொற்பயன் மால்பணி புத்ரத் தியாகர் புகழ்த்துறைசை
வெற்பய னீவரல் வேந்தே பகலெங்கும் வீணலரா
மிற்பய நீக்கிடுங் காவலர் கொட்புற் றிராத்துயிலார்
நற்பய னேதுமின் றூலிரு போதினு நந்தமக்கே. (௨௫௯)

### உரவோனுடும் ஊரும் குலனும் மரபும் புகழும் வாய்மையும் கூறல்.

இருமைக்கு மின்பருள் செம்பொற் றியாக ரெழிற்றுறைசை
யொருமைக் குணத்தர் மருவுநின் னூட்டிற்கு மூர்க்குமுங்க
ளருமைக் குலத்திற்கு மாமர பிற்கு மளவில்புகழ்ப்
பெருமைக்கும் வாய்மைக்கு மேலாது நீகொண்ட பெற்றிமையே. ()

### ஆறுபார்த்துற்ற அச்சங்கூறல்.

கீதாடும் வெண்குழைச் செம்பொற் றியாகர்பைங் காத்துறைசைச்
சீதாரி வாசஞ் செறிவெற்ப நீயெல்லி சிற்றதரிற்
பாதாள மட்டவற் கான்யாறு நீந்தியெம் பால்வரலா
லேதாம் பழிகொலென் றெண்ணு தனவெண்ணு மிட்டிடையே. ()

### ஆற்றத்தன்மை ஆற்றக்கூறல்.

தயங்கும் பிரசத் திரூன்மான் குளம்பினிற் றூய்த்துவைத்திட்
டியங்கும் பொருப்ப துறைசைத் தியாகனை யேத்தலர்போ
லுயங்கும் படிவெய் துயிர்க்கும் விழுமெழு முள்ளுருகு
மயங்குந் தெளியும் வளைசோரச் சோரு மலர்க்கொடியே. (௨௬௨)

### காவன்மிகவுரைத்தல்.

திக்காடை யாக்கொண்ட கோகழிச் செம்பொற் றியாகர்வெற்பா
வக்கார மென்மொழி யாள்பொருட் டாவரி யேறதிர்ந்து
மைக்கா ரிருள்வல்சி தேர்வேரற் றூறதர் வாரறுடிக்
கைக்கா வலர்துஞ்சி னூலுந்துஞ் சாளன்னை கண்முகிழ்த்தே. (௨௬௩)

(பி - ம்:) இக்காலை யோசைத் துறைசையெங் கோமுத்தி யீசர்வெற்பா.

### காமமிகவுரைத்தல்.

நன்மா னிடம்வைத்த செம்பொற் றியாகர் நறுந்துறைசைப்
பொன்மா மணித்துறை வாவுன தன்பின் புனன்மடுத்து
நின்மார்ப வெற்பண்ண வெண்ணும்வெங் காம நெடுங்கனலான்
மென்மாந் தளிர்வண்ணம் வெண்கொண்ட லாகி மெலிபவளே. (௨௬௪)

(பி - ம்:) என்மா லொழித்தருள் சொர்ணத் தியாக ரெழிற்றுறைசை.

### கனவுநலிவுரைத்தல்.

சிரத்தார் தரித்த துறைசைத் திரவியத் தியாகர்தந்த
வரத்தா லுதித்தென்ன வந்தவட் கோர்துயில் வந்திடநீ
கரத்தா லணைக்கமுன் கண்டன ளாய்ப்பின்னைக் கண்டிலளாய்
மரத்தா லியன்றதொர் பாவையொத் தேங்கினள் மன்னவனே. ()

### கவினழிபுரைத்தல்.

தவமேரு வார்தொண்டர் வாழ்திரு வாவடு தண்டுறையிற்
சிவமே தருமெங்கள் செம்பொற் றியாகர்தென் னஞ்சிலம்பா
நவமே கலைமங்கை கொங்கைபுல் லாமையி னுருக்குநா
ளவமே தொலைகின்ற தாற்பசும் பீருண் டணிநலமே. (உசுசு)

### வரைவுகடாதல் முற்றிற்று.

—•—

## ஒருவழித் தணத்தல்.

### தன்பதிக்ககற்சி தலைவன்சாற்றல்.

ஒற்றைப் பொருவிடைப் புத்ரத் தியாக ருறைதுறைசைக்
கிற்றைத் தினஞ்சென்று காவிரி யாடி யிரவுதங்கி
மற்றைப் பகலிங்கி யான்வரு கேன்வரு மட்டுமின்னே
கற்றைக் குழலி கலங்காம லாற்றுங் கடனுனக்கே. (உசுஎ)

### பாங்கிவிலக்கல்.

உன்னருஞ் சொர்ணத் தியாகேசர் கோமுத்தி யூர்மயிலு
மன்னமு மன்னவ ளல்குற் பெருங்கட லாடலன்றி
யின்னமும் மூர்வயின் வேறுசென் றாடு மிடமுளதேற்
றன்னமும் யாங்க டவிர்க்கறி யேஞ்செல்லுந் தாழ்வின்றியே.(உசுயு)

### தலைவன் நீங்கல்வேண்டல்.

இடர்கெடுத் தாளுந் துறைசையெங் கோமுத்தி யீசர்வெற்பிற்
சுடர்விளக் கன்ன மடந்தைநல் லாயொரு தொல்வினையேன்
பிடர்பிடித் துந்தலி னெம்மூ ரகஞ்சென்று பின்னருச்சி
யடர்கதி ரோன்வரு முன்வரு வேன்மனத் தையுறலே. (உசுசு)

### தலைவனைப் பாங்கிவிடுத்தல்.

அழுந்தவிங் கேதுமக் கியான்சொல்லு மாறென்று மாருணீர்
செழுந்தளிர் வல்லிக்குப் பெய்கொண்ட னீரிது தேறிகிலாக்
கொழுந்தணி வேணியர் கோமுத்தி யீசர் குளிர்துறைசைக்
கெழுந்தருள் வீரன்ப ரேயெம்மை நெஞ்சி லெழுதிக்கொண்டே. ()

### பாங்கி தலைவிக்கு அவன்செலவுணர்த்தல்.

வாளொன்று கண்மட மாதேயொன் றுட்கொண்டு மன்னர்நம்மை
நாளொன் றிடைவிட் டகலவும் வேண்டினர் நந்தலில்லாத்
தாளொன்று கஞ்சத் தயன்மால்புத் தேளிர் தடமுடிப்பொற்
றாளொன்று பாதத்தர் சொர்ணத் தியாகர் துறைசையிலே. (உஎக)

### தலைவி நெஞ்சொடுபுலத்தல்.

தொண்டா னமைக்கொண்ட சொர்ணத் தியாகர் துறைசைவெற்பிற்
கண்டாரொன் றுயென் முலைத்தட மூழ்கியென் காமநல
முண்டா ரளித்தஞ்ச லென்றுரொன் னெஞ்ச முறுகவலை
விண்டாரிப் போதொளித் தாரென்கொ லோவிளை யாட்டவர்க்கே. ()

### சென்றேனிடலிற் காமமிக்க கழிபடர்கிளவி.

கூற்றுண்மை மாற்றிய கோமுத்தி யீசரைக் கோதிலன்பர்
போற்று வடுதுறைப் பொன்னித் துறைவர்க்குப் பொற்பசலை
யேற்று ளுடம்பெங்கு நீத்தா டுயிலிடை யெல்லியிவ
ளாற்று ளினித்துய ரென்றுரை யீர்துஞ்ச மஞ்சங்களே. (௨௭௩.)

### தலைவியைப் பாங்கி ஆற்றுவித்தல்.

வேண்டும் பதந்தருஞ் சொர்ணத் தியாகர் விரைமலர்த்தா
ளீண்டும்பர் போற்றுந் துறைசை யுறுரி னினையலிவ்வான்
றீண்டு நெடுமணற் குன்றேறி நாமன்பர் தேர்வரவு
காண்டுங் கனங்குழை வாவவர் தார்வம்புங் கந்தித்ததே. (௨௭௪)

### பாங்கி தலைமகட்குத் தலைமகன்வந்தமையுணர்த்தல்.

தங்குவந் தாரணி மேலுயிர் தாங்கித் தரித்தினிநா
மங்குவந் தாரிய நாடுசென் றுர்மயி லாடுபொழிற்
கொங்குவந் தார்தென் றுறைசையெங் கோமுத்திக் கூத்தர்வெற்பி
லிங்குவந் தாருன் பசலையு நோயு மிரிந்திடவே. (௨௭௫)

### வந்தோன்றன்னொடு பாங்கி நொந்துவினாதல்.

மழுவல னேந்திய செம்பொற் றியாகர் மருவியபொற்
கொழுவலஞ் சேர்வயற் கோமுத்தி யூர்க்கொண்க கோல்வளையை
யுழுவலன் போடு மணப்பாயெவ் வாறங் கொழிந்திருந்தாய்
தழுவல ரோதிகண் முத்தந் துடைத்துத் தணந்தபின்னே. (௨௭௬)

### தலைவன் பாங்கியொடு நொந்துவினாதல்.

திருவீற் றிருந்த துறைசைத் திரவியத் தியாகர்கஞ்ச
மருவீரத் தாளை வணங்காரின் பாதர்கள் வாயிடத்திற்
பெருவீரை நஞ்சம் பிறந்தென்னத் தோன்றிடும் பேரலரோ
டிருவீரு மெம்மைவிட் டெவ்வண்ண மாற்றி யிருந்தனிரே. (௨௭௭)

### பாங்கி தலைவியை ஆற்றுவித்திருந்த அருமை தலைமகற்குச் சொல்லல்.

ஏணித் தடங்கையர் கோமுத்தி யீச ரெழிற்றுறைசை
வாணித் திலங்க ளெறிபொன்னி நாடநின் வாய்மொழியைப்
பேணித் தனியிளங் கொம்பினை நீயுன் பெரும்பதியிற்
பாணித் திருந்தமட் டும்பாது காத்தனன் பாலிருந்தே. (௨௭௮)

### ஒருவழித்தணத்தல் முற்றிற்று.

## வரைவிடைவைத்துப் பொருள்வயிற்பிரிதல்.

### என்பொருட்பிரிவுணர்த்து ஏந்திழைக்கென்றல்.

மாவேரிக் கொன்றையர் செம்பொற் றியாகர் வளர்துறைசைப்
பூவேரி நாட்டகம் போயுமர் வேண்டும் பொருள்கவர்ந்து
தூவே ரிலங்கிழை யாய்பொன் முகந்து சுமந்துவருங்
காவேரி போல்வரு வேனிது கூறவள் காதினுக்கே. (உளகூ)

### பாங்கி நின்பொருட்பிரிவுரை நீயவட்கென்றல்.

துள்ளும்பொன் மான்கையர் செம்பொற் றியாகர் துறைசைவெற்பா
வுள்ளு மெவையுநின் மேலனை வாநஞ்ச மொத்தவெண்ணங்
தெள்ளு மமிழ்திற் கனிந்தசொற் பாவை திருவுளத்திற்
கொள்ளும் படிவல்லை யேற்சொல்லி யேகு குறித்ததற்கே. (உஅ0)

### நீடேனென்றவன் நீங்கல்.

தோடேறு கன்னத்தர் சொன்னத் தியாகர் துறைசைப்பொன்னி
நாடேயொப் பாய்பரித் தேர்பண்ணி யின்று நடுச்சுரம்போய்
மாடே யிருநிதி யீட்டிநுங் கேளிர் வழுத்தநம்மூ
ரூடே வருகுவல் யான்மாலை யம்பொழு துண்மையிதே. (உஅக)

### பாங்கி தலைமகட்குத் தலைமகன் செலவுணர்த்தல்.

மெல்லத ரத்தங் கனையேயுன் கொங்கை விலைக்குநிதி
பல்லத ரத்தங்கள் செம்பொற் றியாகர் பதியரசூர்ச்
செல்லத ரத்தம் பொலிதழல் வெப்பஞ்சிச் சேர்ந்தறியாக்
கல்லத ரத்தங் கடந்தார் துணிந்துநங் காதலரே. (உஅஉ)

ஆடுமென் றேகை யனையாய் துறைசை யரசிடத்தி
னீடுமென் செம்பொற் றியாகேசர் வெற்பினென் னேசமுகங்
கோடுமென் றேசொல்லிற் கூடவந் தென்னுயிர் கொன்னெறிக்கண்
வாடுமென் றேவன்பர் வாளா கடந்தனர் வன்சுரமே. (உஅங)

(பி - ம்:) ஆடும் பணிக ளணிமாசி லாமணி யார்துறைசை, நீடுங் தடத் துறை செங்கயற் கண்ணி.

### பாங்கி கொடுஞ்சொற் சொல்லல்.

உலம்பும் பருமணித் தேரேறி யன்பரின் றுன்பொருட்டுச்
சிலம்புஞ் சிலம்படிச் செம்பொற் றியாகர் திருத்துறைசை
யுலம்பும் பருமதல் லாயகன் றாரதற் கஞ்சிமிகப்
புலம்பும் பரிசென் வறிதேயிவ் வூரலர் பொங்கையிலே. (உஅச)

### தலைவி கொடுஞ்சொற் சொல்லல்.

வண்டார் செருந்தி தியாகேசர் நல்குல வாக்கிழிபோற்
றண்டா தவிழ்பொன் றருமர சூரர் தணந்திவளை
யிண்டார் கடங்கடந் தாரென்கி லார்மற் றெனைப்பசப்புக்
கொண்டாரென் பாரன்றி யான்படு நோயைக் குறித்திலரே. (உ௮௫)

(பி - ம்:) வண்டார்பொற் கொன்றை வனைமார்சி லாமணி யார்துறை சைத், தண்டா தருவி சொரிவெற்ப ரின்று தணந்து.

### வருதுவர் மீண்டெனப் பாங்கி வலித்தல்.

எட்டாந் திருவுருச் செம்பொற் றியாக ரெயிற்குலங்க
ளட்டார் துறைசை யணங்கய ரேல்செவ் வரக்குருக்கி
விட்டா லனநெறி வெஞ்சுரத் தன்றில்விள் ளாமுயக்க
முட்டாது காண்குவர் மீள்வர்கண் டாய்நம் முதன்மையரே. (உ௮௬)

### பருவங்கண்டு பெருமகள் புலம்பல்.

மருக்கொண் டிடக்கொன்றை வண்டொத் துயிர்த்ததன் மாமலர்போ
லுருக்கொண் டிடவென் முலைமயி லோகையுற் றாங்ககவத்
திருக்கொண்ட கோகழிச் செம்பொற் றியாகர் சிலம்பிற்கொண்மூக்
கருக்கொண்டு வந்ததின் னம்வந்தி லார்நமைக் காப்பவரே. (உ௮௭)

### இதுவன் றென்றல்.

ஐவனம் வித்திய செவ்வேட் பராய்நம ரார்த்திடநீ
ரைவன மேகஞ் சொரிந்தது கோமுத்தி யப்பர்வைகு
மைவன மாடத் துறைசையொப பாயணங் கேலதுகண்
டைவனஞ் சேர்மயி லெல்லாஞ் சிறைவிரித் தாடினவே. (உ௮௮)

### இறைமகள் மறுத்தல்.

அங்கோ கழிநகர்ச் செம்பொற் றியாக ரசலத்துவர்ச்
செங்கோட லுற்கையென் றார்கோப மாங்கதன் றீப்பொறியென்
றங்கோ லிடக்கரை மீதேறு மோதமுள் வாங்கக்கண்டு
மெங்கோதை யோதிவம் பென்றுய்சென் றார்சொல்லி னீதுமொன்றே.

### அவர்தூதாகிவந்தடைந்தது இப்பொழுதேனத் துணைவி சாற்றல்.

நகிற்கொடி வாமத்தர் கோமுத்தி நாதீர் நறுந்துறைசை
யகிற்புகை நாறுங் குழலாய் வெருவ லன்பரின்னே
துகிற்கொடித் தேரின் வருவ ரவர்தூ துரைப்பமுன்னே
முகிற்குலம் வந்தன காண்மின்ன லோடு முழக்கங்கொண்டே. (உ௯0)

### தலைமகள் ஆற்றல்.

ஒன்று மிருதலைப் புள்ளி னிருவர்க்கு மோருயிரே
யென்றுசொன் னார்நம் வினையாற் பிரிந்தன ரின்பதுன்ப
நன்று மவர்க்கு முளவாமிக் காரிடை நண்ணுவராற்
றென்றுதொட் டாட்கொளுஞ் சொர்ணத் தியாகர் துறைசையிலே. ()

அவன் அவட்புலம்பல்.

காரொத்த வார்குழல் சோரக்கண் ணீர்குடங் கைவழியே
வாரத் தனித்து வழிதேயப் பார்த்து மறுகியர
சூரத்தர் சொர்ணத் தியாகர்த் தொழாரிற் றுவளுமின்னே
யாரத் தருணத்தி லஞ்சே லெனவெடுத் தாற்றுவரே. (உசுஉ)

மீண்டுவருகின்றகாலத்துத் தலையகன் பாகனொடு சொல்லல்.

சுத்தருக் கின்பருள் செம்பொற் றியாகர் துறைசையில்வாழ்
சித்தர்தம் விஞ்சையின் வாசியைத் தூண்டினித் தேர்வலவா
வெத்தனை யோவுண்மை சொல்லிவந் தேன்முன்ன மென்னுயிருக்
கத்தனை சொல்லும்பொய் யாகாமற் செய்வதுன் னங்கைகளே. ()

தலைமகன் மேகத்தொடு சொல்லல்.

இரவியந் தேரெழு மாவிறு மாப்பற வீர்த்திடுமெம்
புரவியந் தேரின்முன் போமுகில் காள்பொற் கிழியளித்த
திரவியத் தியாகர் திருவா வடுதுறை சேர்ந்துநின்றென்
வரவியம் பும்பசும் பீர்பூத்த மேனி மயிலைக்கண்டே. (உசுச)

பாங்கி வலம்புரிகேட்டு அவன் வரவறிவுறுத்தல்.

சலம்புரி செஞ்சடை மேல்வைத்த கோமுத்திச் சங்கரன்வாழ்
பொலம்புரி சைத்துறை சைப்பான்மின் னேயுன் பொருமலற
நலம்புரி யன்பர் வருகின் றனரென்று நன்மைசொல்லும்
வலம்புரி யோசை யமிர்தஞ் செவியில் வழிகின்றதே. (உசுரு)

வலம்புரிகிழத்தி வாழ்த்தல்.

மூலாக மங்கண் முழங்குந் துறைசையின் முக்கணனார்
நாலார ணஞ்சொன்ன சொர்ணத் தியாகர்நல் லூர்தியெனும்
பாலாய சேக்கைப் பதத்தினில் வாழும் பணிலத்தினு
மேலா யவர்மெய் யருள்போல் விளங்குக வெண்சங்கமே. (உசுசு)

தலைமகன்வந்துழிப் பாங்கி தம்மை நினைத்தமைவினுதல்.

நந்தித் தனிவிடைச் செம்பொற் றியாகர் நறுந்துறைசை
வந்தித்துன் னுதவர் செல்லுங் கொடிய வனங்கடந்து
சந்தித்த வவ்வய னுட்டுழி வாகையந் தார்புனைவீர்
சிந்தித்து நெஞ்சி லறிதிர்கொல் லோவெங்கள் செல்வியையே. (உசுஎ)

தலைமகன் நினைந்தமைசெப்பல்.

சுவையா ரமிர்தன்ன சொர்ணத் தியாகர் துறைசைவெற்பி
னவையாது மின்றி வளர்கொம்ப னீருமை நான்பிரிந்து
கவையார் மனத்தொடு மந்நாட்டிற் சென்றுழிக் கண்டகண்ட
வுவையா வையுநின் மடந்தையு நீயு மலாதில்லையே. (உசுஅ)

தலைமகனை ஆற்றுவித்திருந்த அருமை பாங்கிகூறல்.

ஈட்டும் வினைதவிர்த் தன்பர்க் கருளொனு மின்னமிர்த
மூட்டிடுஞ் செம்பொற் றியாகேசர் கோமுத்தி யூரவெங்கண்
மாட்டுற வேறொன்றுங் கண்டில முன்றன் வடிவெழுதிக்
காட்டிடு மென்பணி யும்பொன்ன னுள்கண்ணிற் காண்பதுமே. ()

வரைவிடைவைத்துப் பொருள்வயிற்பிரிதல் முற்றிற்று.

## வ ரை வு ம லி வு.

காதலன் முலைவிலைவிடுத்தமை பாங்கி காதலிக்குணர்த்தல்.

முடியாறு கொண்ட துறைசையெங் கோமுத்தி முத்தர்வெற்பர்
முடியா மெனுநின் முலைவிலை யாகநம் முன்கடைக்கண்
முடியா நிதிய மளந்து சொரிந்தனர் முல்லையந்தார்
முடியா ரளகத்து மின்னிடை யாகுக முன்வண்ணமே. (௩௦௦)

காதலி நற்றயுள்ளமகிழ்ச்சியுள்ளல்.

மாமன்றற் கைதையங் கன்னிதன் மொக்குள் வனமுலைமேற்
பூமன்றற் புன்னை யரும்புமுத் தேந்திடும் பூந்துறைவர்
சோமன் றலைக்கணி சொர்ணத் தியாகர் துறைசைவரி
னுமன்ற னல்லணி கண்டின் புறுநம்மி னன்னையுமே. (௩௦௧)

பாங்கி தமர்வரைவெதிர்ந்தமை தலைமகட்குணர்த்தல்.

பரசம் புயமலர்ப் பாவாய் பவளம் படரடம்பின்
பிரச மலர்மண மாறுந் துறைவர்க்குப் பேதமில்லா
தரசமர் கோமுத்தி யம்மான் றுறைசை யணிநகரின்
முரசறைந் தார்நம ருள்ளங் களிப்புற முன்னெதிர்ந்தே. (௩௦௨)

தலைமகள் உவகையாற்றது உளத்தொடுகிளத்தல்.

இன்றுள வுஞ்சொன்ன விவ்வூ ரலருமற் றேதுக்களும்
பொன்றநின் பாலுள சிந்தையெல் லாங்குடி போகநெஞ்சே
நன்றருள் கோமுத்தி நாதன் றுறைசைநங் கண்ணனையார்
மன்றன் மணமுர சார்க்கின்ற தானம் மணிநகர்க்கே. (௩௦௩)

(பி - ம்:) இன்றளவூரவர்தூற்றலர்வாட.

தலைவனைப் பாங்கி வாழ்த்தல்.

மைப்போ தனமிடற் றார்மாசி லாமணி யார்துறைசை
யொப்போது தையலுக் கப்போ தலர்புனை யுன்கைநலங்
கைப்போதில் வேலனும் வள்ளியும் போலுற்ற காட்சியினு
லிப்போ தறிந்தன மாலென்றும் வாழி யிறையவனே. (௩௦௪)

தலைவி மணம்பொருட்டாக அணங்கைப் பராநிலை பாங்கி தலைமகற்குக் காட்டல்.

சுராதிபர் போற்றிய சொர்ணத் தியாகர் துறைசைவெற்பி
லராவன்ன வல்குனல் லாளுன் பொருட்டுமெய் யன்புடனே
மராவுங் குராவும் வளர்கின்ற சாரலில் வாழணங்கைப்
பராய்வரம் வேண்டுதல் பார்த்தருள் வாயெங்கள் பார்த்திபனே. ()

அணங்கைப் பராநிலைகண்டதலைமகன் மகிழ்தல்.

முதுக்குறை விங்கிவட் கெவ்வண்ண முற்றது மூதரசூர்
விதுக்குறை சூடிய செம்பொற் றியாகர்தம் வெள்ளிவெற்பிற்
பொதுக்குறை தீர்நம் மணம்பொருட் டாகப் புரிகுழலாண்
மதுக்குறை யாமலர் தூஉய்த்தெய்வம் வாழ்த்தி வணங்குதற்கே. ()

வரைவுமலிவு முற்றிற்று.

## அறத்தொடுநிற்றல்.

கையறுதோழி கண்ணீர்துடைத்தல்.

நல்லோர் பரசுந் துறைசையெங் கோமுத்தி நாதர்வெற்பி
லில்லோர் செயிர்த்திடு மேதுவொன் றில்லை யிழைத்தவண்டல்
கல்லோலம் வந்து கரைத்தன வோகண் கரைவதென்னே
மெல்லோ திமநடை யாயுள்ள வாறு விளம்பெனக்கே. (௩௦௭)

(பி - ம்:) நடையாய்வந்தகாரணம் விள்ளெனக்கே.

தலைவி கலுழ்தற்காரணங்கூறல்.

சதுவேதர் செம்பொற் றியாகேச ராவடு தண்டுறையின்
மதுவே யலங்கற் சுடர்வேல் வயங்கிட வந்தொருவர்
புதுவேங்கை நீழற் றனித்துழி யென்னைப் புணர்ந்தொளித்தா
ரிதுவே கலுழ்கின்ற காரணங் காணென் னிளங்கொடியே. (௩௦௮)

தலைவன் தெய்வங்காட்டித் தெளிப்பத் தெளிந்தமை எய்தக்கூறல்.

மெய்வரந் தந்தருள் செம்பொற் றியாகர் வியன்றுறைசை
நெய்வழி வேற்கொண்கர் தோய்ந்தவஞ் ஞான்றுமுந் நீர்த்துறைவாய்த்
தெய்வமுங் காட்டித் தெளிப்பத் தெளிந்தனன் சிற்றறிவேன்
பொய்வரு மென்றறி யேனவர் சொல்லினும் பூங்கொடியே. (௩௦௯)

தலைவி தலைமகன் இகந்தமை இயம்பல்.

சுகந்தாவி லாத்தமிழ் வேதங்க ளோதுந் துறைசைநக
ருகந்தாளுஞ் செம்பொற் றியாகேசர் காவிரி யொண்டுறைவா
யகந்தாங் கரிநமக் கென்றே வருட்டி யருள்புரிந்தா
ரிகந்தா ரினியணங் கேயவர் போலில்லை யேதிலரே. (௩௧௦)

### பாங்கி இயற்பழித்துரைத்தல்.

சேயழ லேந்திய செம்பொற் றியாகர் திருத்துறைசை
வாயழ காரு மரசினை நோக்கி மறைமொழிபோற்
காயழல் வேலன்பர் யானக லேனென்று கட்டுரைத்து
நீயழச் சென்றன ரேநன்று நன்றவர் நீதியதே. (௩௧௧)

### தலைமகள் இயற்பட மொழிதல்.

அடிகளெங் கோமுத்தி யீசன்முன் போதி யருள்பெறுவா
னெடியவ னின்றென நிற்குந் துறைசைநெய் தற்புலம்பர்
கொடியவ ராயினு மாகமுந் நீரிக் குவலயத்திற்
கடிகம ழோதி யவரே யெனதுயிர்க் காவலரே. (௩௧௨)

(பி - ம்:) உயிர்க்காதலரே.

### தெய்வம்பொறைகொளச் செல்துவமென்றல்.

மூவா முதல்வரெங் கோமுத்தி யீசர் முருகலர்ந்த
காவா வடுதுறைக் காவலர் தாஞ்செய்த கைதவத்தா
லோவா வெகுளிகொள் ளேலெனத் தெய்வமு னொண்பலிதூஉய்
நீவா ழியவென வேத்துவம் வாசென்று நேரிழையே. (௩௧௩)

(பி - ம்:) முருக்கலர்ந்த.

### இல்வயிற்செறித்தமை சொல்லல்.

நீருண்ட வார்சடைச் செம்பொற் றியாகர் நெடுந்துறைசைக்
காருண்ட வேலைக் கரைமணற் கொப்புறுங் கங்குலிலோர்
தேருண் டெனவிளை யாடற் கினிப்புறஞ் செல்லலென்றாள்
வாருண்ட கொங்கைநல் லாயன்னை நின்னுரு மாசுகண்டே. (௩௧௪)

### செவிலி கனையிருளவன்வரக் கண்டமை கூறல்.

தொடைத்தே னருமுடிச் சொர்ணத் தியாகர் துறைசைப்பண்ணை
மடைத்தேங் குவளைக்கண் ணாய்நென்ன லந்திமன் னூழையினோர்
புடைத்தே மலங்கலந் தோளா னொருவன் புகுந்திடக்கண்
டடைத்தேன் கதவென் றெனக்குரைத் தாளன்னை யையமுற்றே. ()

### செவிலி தலைமகள்வேற்றுமைகண்டு பாங்கியை வினுதல்.

குறிதாம் பிறைமுடிக் கோமுத்தி யீசர் குளிர்துறைசைக்
கறிதாவும் வெற்பிலென் காரிகை யாயிரு கண்ணுமெய்யும்
பிறிதாய்க் கரியுண்ட வெள்ளிற் கனியெனப் பெண்ணமிர்தம்
வறிதா யிருக்கின்ற தென்னோ வறிகிலன் வந்துற்றதே. (௩௧௬)

### வெறிவிலக்கல்.

ஒருகேள்வி கேட்ப லிவருடை யாவியை யுண்ணுதற்கோ
வருகே தரும்பலி யாலிவள் பண்டைய ளாம்படிக்கோ

குருகேறும் வாவித் துறைசைக் கனகக் கொடையர்வெற்பின்
முருகே யெளியர் மனைவந்த வாறு மொழிந்தருளே. (௩கஎ)

(பி - ம்:) கேட்கலுற் றேனுன்னை யிம்மை யுயிருண்ணவோ.

வெறிவிலக்கியவழிச் செவிலி தோழியைவினுதல்.

பஞ்சூட்டு மெல்லடிப் பாவாயென் சென்னியிற் பங்கயப்பா
தஞ்சூட்டுங் கோகழிச் செம்பொற் றியாகர் தடங்கிரிமே
லஞ்சூட்டி யன்னகண் மாதர்முன் சூர னடுங்கக்கொன்ற
செஞ்சூட்டு வாரணத் தான்வந்த தேதென்ற சித்தமென்னே. (௩கஅ)

தோழி பூத்தருபுணர்ச்சியால் அறத்தோடுநிற்றல்.

நீடுநின் கண்ணுக்கு நேரிது பாரென்று நின்மகட்கு
நாடுமொ ராடவன் வந்தீறில் காவிரி நல்கினுற்
றேடுறு நீள்செவிச் சொர்ணத் தியாகர் துறைசையுள்ளா
ராடுமவ் வாற்றின் றலையெழுத் தாடுநின் றுடிடத்தே. (௩கக)

புனறருபுணர்ச்சியால் அறத்தோடுநிற்றல்.

மாணூர் கடும்புன லாடமின் னொருடன் மங்கைகொங்கை
காணுக் குமிழி யுடையத்தண் ணீர்பகை காட்டிடுங்காற்
சோணுடர் சூழ்கழற் சொர்ணத் தியாகர் துறைசையின்கட்
பூணுக மாரத் தழீஇயெடுத் தானொரு புண்ணியனே. (௩உo)

களிறுதருபுணர்ச்சியால் அறத்தோடுநிற்றல்.

கருப்பாசந் தீர்க்குந் துறைசையெங் கோமுத்திக் கத்தர்வெற்பிற்
றிருப்பாவை கொங்கைக்குத் தன்கோடு தோற்றவத் தெவ்வைமதப்
பொருப்பா வயினொன்று தீர்ப்பா னெதிர்வரும் போதிவளை
யொருப்பா டுடனணைத் தத்தோல் பொருத வொருவருண்டே. ()

தலைமகள்வேற்றுமைகண்டு நற்றாய் செவிலியைவினுதல்.

சீறு டரவர் துறைசைத் திரவியத் தியாகர்வெற்பில்
வேறான சிந்தைய ளாயின ளென்மகண் மெய்யுங்கண்ணு
மாறு யினமுன்னை வண்ணமன் றுற்கண் மணியனையாய்
நூறு யிரமெண்ணு மென்னெஞ் சடங்க நுவலுகவே. (௩உஉ)

செவிலி நற்றாய்க்கு முன்னிலைமொழியான் அறத்தோடுநிற்றல்.

திருநா ணரவர் துறைசைத் திரவியத் தியாகர்வெற்பில்
வருநாண் மதிநுத லாய்களி றேடொரு மான்வினவிக்
குருநாண் மலர்ப்பொழில் வந்துநம் மாணிக்கக் கொம்பின்முலை
யொருநாண் முயங்கின ரால்விதி கூட்ட வொருசெல்வரே. (௩உ௩)

அறத்தோடுநிற்றல் முற்றிற்று.

## உடன்போக்கு.

### பாங்கி தலைவற்கு உடன்போக்குணர்த்தல்.

ஆயிர மெண்ணமென் மின்னொ ளுடனர சூர்க்கையனீ
யாயிரங் குன்றுங் கடந்தே குகசண்மை யாண்டகைக்கோ
ராயிரம் பொன்னருள் சொர்ணத் தியாக ரருளினம்பொ
னாயிர நல்கினுங் கொள்ளார் முலைவிலை யாவெமரே. (௩௨௪)

### தலைவன் உடன்போக்குமறுத்தல்.

கூற்றமு மஞ்சும்வெங் கானமு முன்னிற் குடிகெடுந்தொண்
ணூற்றறு காதத்துக் கப்புற மென்னகர் நுண்ணிடையாய்
போற்றர சூர்வளர் செம்பொற் றியாகரைப் புந்திசெய்யா
மாற்றறு கண்ணரின் யாரே நடப்பரிம் மாதுடனே. (௩௨௫)

### பாங்கி தலைமகனை உடன்படுத்தல்.

பரம்பு மலர்க்கொண்டை கொங்கையுந் தாங்கிப் பரற்பயம்பு
முரம்பு மிதித்துச் சுரம்போதும் போதின் முறையுங்கற்பு
வரம்புமுள் ளாளுக் கரசூரெங் கோமுத்தி வள்ளல்வெற்பா
நிரம்பு முனதரு ளேநிழ லாவெங்கு நின்றிடுமே. (௩௨௬)

### தலைவன் போக்கு உடன்படுதல்.

வெப்பார் வடவைக்கும் வித்தாந் தழலத்த மெல்லச்செல்ல
விப்பாவி நெஞ்ச மியைந்தன்று கோமுத்தி யீசர்க்கென்று
மொப்பாந் துறைசையு ளன்னத்தின் றாவி யுறினும்பொன்னஞ்
செப்பார் முலையா ரடிகூ சுதல்கண்டுஞ் சில்வளையே. (௩௨௭)

### பாங்கி தலைவிக்கு உடன்போக்கு உணர்த்தல்.

அணைமலர்க் கஞ்சிய செஞ்சீ றடிகல் லழல்வழிச்சென்
றிணையிலெம் மூர்நல் லரசினைச் சூழுங்கொ லென்றனர்பெண்
டுணையுட னீடிய சொர்ணத் தியாகர் துறைசைவெற்பிற்
பணைமுலைப் பாவை யறியே னவர்மனப் பாவனையே. (௩௨௮)

### தலைவி நாணழிபிரங்கல்.

வருமந்த மாதி யிலாமா சிகாமணி வள்ளற்பிரான்
பொருமந்த காரி துறைசை யுறுத புறத்தனைப்போ
லருமந்த நாணந் துறப்பது வேண்டலி லப்பிறப்பிற்
றருமந்த வஞ்செய் திலேன்பெண் ணெனும்பவந் தள்ளுதற்கே. ()

### கற்புமேம்பாடு பாங்கிகூறல்.

உயிரிற் சிறந்தன்று நாண்மட வார்களுக் கோததனிற்
செயிரற்ற கற்புச் சிறந்தன்று காண்செந்நெல் செங்கருப்பம்
பயிரிற் சிறந்த துறைசையெங் கோமுத்திப் பண்ணவனூர்
வயிரத் தடவரை மேலெழு தாத மணிவிளக்கே. (௩௩௦)

### தலைவி ஒருப்பட்டெழுதல்.

வன்புடன் சுட்டு விரன்மூக்கி னுச்சியில் வைத்துப்பெண்டிர்
கொன்பழி தூற்றப் பயந்தார் சினத்தீக் குளித்துநின்றே
னென்பர வம்புனை செம்பொற் றியாக ரெழிற்றுறைசைக்
கன்பரொ டியான்செல்வ னிவ்வூ ரொழிக வலர்சுமந்தே. (௩௩௧)

### பாங்கி சுரத்தியலுரைத்துழித் தலைமகள்சொல்லல்.

வெங்காள நஞ்சுண்ட செம்பொற் றியாகர் வியன்றுறைசைக்
கங்காளர் காவிரி நாடனை யாயிது கண்டிலை நீ
பொங்காவிவ் வூரவர் நாவாற் சுடப்பட்ட புண்ணுடையேற்
கங்கா ரழற்சுரங் கங்கா சலமென வாயிடுமே. (௩௩௨)

### பாங்கி தலைமகளைத் தலைமகற்குக் கையடைகொடுத்தல்.

ஒருதிருக் கோமுத்தி யூர்மா சிலாமணி யுத்தமனார்
சுருதியின் வாய்மைய னீயென் றிவளைத் தொழுதளித்தேன்
குருதிகொள் வேலண்ண லுன்னருண் மாறவுங் கூடியதேற்
பருதியுந் திங்களுங் காணப் பெறாதிந்தப் பாரிடமே. (௩௩௩)

### பாங்கி வைகிருள்விடுத்தல்.

புயலாய் மிளிர்கண்டர் புத்ரத் தியாகர்தம் பூந்துறைசை
வயலாம்பல் வாய்ச்சியிவ் வைகிரு ணீங்கண் மகிழ்ந்துசெல்லு
மியலான தாரிவந் தெய்துவல் யான்கிளைக் கேற்பவுரைத்
தயலாற் பழிசொல்லு மவ்வவர் வாயை யடக்குவித்தே. (௩௩௪)

### தலைவியைத் தலைவன்சுரத்துய்த்தல்.

நிதிவளர் கோகழிச் செம்பொற் றியாகர்மெய்ந் நீற்றொளிபோ
லதிசய மாவொளிர் வெண்மணல் யாறு மவர்சடைநீர்க்
கதிர்வெண் டுளியிற் குளிர்கூ ரிளமரக் காவுமுதிர்
வெதிர்முத்த முங்கண்டு நீமெல்ல மெல்லச்சென் மெல்லியலே. ( )

### தலைமகன் தலைமகளசைவறிந்திருத்தல்.

அக்குர கம்புனை செம்பொற் றியாக ரடிவணங்கித்
தொக்குர வோர்மன் றுறைசையன் னாய்நின் றுணையடிப்பூ
மிக்குர மானகல் வேல்போலத் தைக்க வெதும்பியதா
லிக்குர வந்தருக் கீழிருப் பாஞ்சற் றிளைப்பறவே. (௩௩௬)

### தலைமகன் தலைமகளை உவந்தலர்சூட்டி உண்மகிழ்ந்துரைத்தல்.

நிவந்த மராமர நீழலிற் கோமுத்தி நித்தரொன்றாய்
நவந்தரு பேதமு மானார் துறைசைநல் லூரனையாள்
சிவந்தபொற் காலு நுதல்வேர்வு நீவிச் செறிந்தவைம்பாற்
குவந்தலர் சூட்டவும் யான்செய்த மாதவ மொன்றல்லவே. (௩௩௭)

### கண்டோரயிர்த்தல்.

அகளனெங் கோமுத்தி யம்மான் றுறைசை யரோவரிக
ளுகளுமிக் கானிற்செல் வாரிவர் யாவர்கொ லும்பர்பிரான்
மகளெனி னீங்கிவள் கற்பகஞ் சூடிலள் வள்ளலவன்
றுகளின் மருகனென் றுன்மார்பி னீபத் தொடையில்லையே. (௩௩௮)

### கண்டோர் காதலின்விலக்கல்.

பூமாரன் றேவியும் போல்வரு வீரினன் புக்கொளித்தான்
மாமா சிலாமணி யார்பூந் துறைசையை வாழ்த்திலர்போம்
பேமா ரணிய மினிச்செல் லொணாது பெருமரைப்பால்
வாமான் றசையுண் டிராத்தங்கு வீரெம் மனையிடத்தே. (௩௩௯)

### கண்டோர் தம் பதியணிமைசாற்றல்.

தென்றுஞ்சு பூங்குழற் செல்வியு நீயுந் தெரியும்வெற்பு
மூன்றுங் கடந்துசென் றுற்குளிர் காவு முழுமதியூர்
வான்றுங்க வண்ண மதிலுங் கிடங்கும் வளைந்தெதிரே
தோன்றுங் கனகத் தியாக ராசந் துறைசையுமே. (௩௪0)

### தலைவன் தன்பதியடைந்தமை தலைவிக்குணர்த்தல்.

வேர்சூழ்ந்த கானந் தொலைத்துவந் தெய்தின மெல்லியலாய்
சீர்சூழ்ந்த பொன்னியு மெய்ஞ்ஞானச் செல்வர் திருமடமு
மோர்சூழ்ந்த செய்குன்று மாடமுஞ் சூழ்ந்தொளி ரிப்பதியே
தார்சூழ்ந்த செம்பொற் றியாகேச ராவடு தண்டுறையே. (௩௪௧)

உடன்போக்கு முற்றிற்று.

## கற்பொடுபுணர்ந்த கவ்வை.

### செவிலி பாங்கியைவினதல்.

கொங்குற்ற கூந்தலென் பிள்ளை மதிநுதற் கோகிலமின்
றெங்குற் றதுதனி யேயொப் பிலாமுலை யேந்திழையோர்
பங்குற்ற கோமுத்தி யீசன் றுறைசை பணிந்திலர்போற்
சங்குற்ற செங்கைகல லாயென்கொல் வாடித் தளர்கின்றதே. (௩௪௨)

### பாங்கி செவிலிக்குணர்த்தல்.

தாளையன் பர்க்கருள் செம்பொற் றியாகர் சமரமத
வேளைமுன் காய்ந்தவர் கோமுத்தி யூர்விரும் பாரினன்னே
வாளையர் கேளிர் மறுத்தார் மணமென்று வள்ளிவேற்
காளைபின் பாலைக் கடங்கடந் தாளுன் கனிமொழியே. (௩௪௩)

(பி - ம்:) மணமென்று மங்கையங்கோர், காளைபின் மாலைகைக் கொண்
டுசென் றுளக் கஞ்சுரமே.

### பாங்கியினுணர்ந்தசெவிலி தேற்றுவார்க்கு எதிரழிந்து மொழிதல்.

மஞ்சன மாட்டி முலையமிர் தூட்டி மணிவிழிகட்
கஞ்சனந் தீட்டி யறிவே கொளுத்தி யளித்ததற்கோ
வெஞ்சல மாற்றுந் துறைசையெங் கோமுத்தி யீசர்வெற்பீர்
நஞ்சினனென் றுவெனைக் கண்டே கினளென் னறுநுதலே. (௩௪௪)

### செவிலி தன்னறிவின்மைதன்னை நொந்துரைத்தல்.

வேலைநஞ் சுண்டருள் செம்பொற் றியாகர் வியன்றுறைசைச்
சோலையம் பூங்குழ ளையன் னேகுளிர் தோயமுறுப்
பாலைவன் னிக்கு விடுவாயென் றுளென்னைப் பார்த்துநெஞ்னன்
மாலையில் யானச்சொ லோர்ந்திலன் பேதையன் வஞ்சமென்றே. ()

### செவிலி தெய்வம்வாழ்த்தல்.

பற்றேது மின்றி யலமரு வேனுய்யப் பையவஞ்சங்
கற்றே திலன்பின் னடந்தாளை மீட்டின்று காட்டுதியாற்
பெற்றேறு கோமுத்தி யீசன் றுறைசைப் பெருவரைமேற்
குற்றேவல் கொண்டென்று மெங்களைக் காக்குங் குலதெய்வமே. ()

### செவிலி நற்றாய்க்கு அறத்தொடுநிற்றல்.

அந்நாள் வருங்களி றட்டுயிர் காத்த வவனிருக்க
விந்நாட் பிறர்கைப் பொருளேற்று நல்க விசைந்தனமென்
றன்னாக் கனகத் தியாகேசர் கோமுத்தி யூரன்னநின்
பொன்னு னவன்சுரத் தூடே விடலைபின் போயினளே. (௩௪௭)

### நற்றாய் பாங்கிதன்னொடுபுலம்பல்.

அன்றுமென் பூத்தந் தவற்குரி யேனென் றணங்குரைத்தா
ளென்றுமன் மையையியம் பாமலன் றோசுரத் தேகவிட்டாய்
நன்றுநன் றுசமதி கோமுத்தி நாதர் துறைசைநல்லா
யொன்று நினைக்கமற் றென்றாய் முடிந்ததென் னூழ்வினையே. ()

### நற்றாய் பாங்கியர்தம்மொடுபுலம்பல்.

கல்லா லுகந்தவர் செம்பொற் றியாகர் கவின்றுறைசைத்
தொல்லாய முற்று மிரங்கவெங் கானிற் சுடர்நெடுவேல்
வல்லா னொருவன்றன் வாய்மொழித் தெய்வ மதிமயக்க
நில்லா தகன்றன ளோநங்கை மீரென் னிரைவளையே. (௩௪௯)

### நற்றாய் அயலார்தம்மொடுபுலம்பல்.

தெற்றிய வார்சடைச் செம்பொற் றியாகர் திருத்துறைசை
யுற்றிடு மாதவர் போலத் தவஞ்செய் தொருமகள்யான்
பெற்றிருந் தேனவ ளோர்காளை பின்பெருங் கள்ளியும்பால்
வற்றிய பாலையிற் சென்றாண் மறுகவிம் மாநகரே. (௩௫௦)

## இதுவுமது.

அரங்கவை யேகொண்ட புத்ரத் தியாக ரரசடிக்கீழ்
வரங்கிடந் தேழை யுயிர்த்தே னொருமகண் மற்றவடோ
ளுரங்கெழு காளைபி னுள்ளினு முள்ளஞ் சுடுங்கொடுந்தீச்
சுரங்கடந் தாளம்ம வந்தியென் பார்க்கித் துயரில்லையே. (௩ருக)

## நற்றாய் தலைமகள்பயிலிடந்தம்மோடுபுலம்பல்.

நடமே செயவல்ல செம்பொற் றியாகரை நல்லரசூர்
வடமேரு வில்லரை வாழ்த்தாரி னென்னைவைத் தாளெழுதும்
படமே படம்வைத்த சிற்றில்ல மேநொச்சிப் பந்தர்களே
தடமே யுமதிட மேபாடு மோவின்னுந் தையல்வந்தே. (௩ருஉ)

## நிமித்தம்போற்றல்.

பணிக்கட கம்புனை செம்பொற் றியாகர்பைம் போதிவனத்
தெணிக்கட மான்பைந் நிணப்பலி யென்று மிடுவல்பசிப்
பிணிக்கொடி யாதுண்ண லாமிரு கண்ணும் பிறழுமொரு
மணிக்கொடி யேயென் மடக்கொடி தன்னை வரக்கரையே. (௩ருங)

## நற்றாய் சுரந்தணிவித்தல்.

நளியற்ற வெஞ்சுர நாடுதண் காவிரி நாடெனலாய்த்
தெளியுற்ற நீர்த்தண் டுறைசைத் தியாக திருவருளா
லொளியுற்ற நின்வலப் பார்வையி னுயங் காதவண்ணங்
குளிருற் றிடச்செய்க மாகொடி யேன்பெற்ற கொம்பினுக்கே. ()

## நற்றாய் தன்மகள்மென்மைத்தன்மைக்கிரங்கல்.

சிரமாலை பூண்ட துறைசைத் திரவியத் தியாகர்முன்னாட்
புரமாயக் கொண்ட குறுநகை போலழல் பொங்குவெங்காட்
டரமாய கற்றிரட் காற்றின வோபொன்னி னம்மனைசேர்
விரன்மானின் பஞ்சிக்கு மஞ்சிப்பின் வாங்கிய மெல்லடியே. (௩ருரு)

## நற்றாய் தன்மகள் இளமைத்தன்மைக்கு உளமெலிந்திரங்கல்.

ஆடவ ரீர்குர வம்பாவை காளென் றழைத்துமுத்தஞ்
சூடவ ரீரென்னு மென்னிளம் பாவை துறைசைமன்று
ளாடக மாடிய செம்பொற் றியாகர்நன் னாட்டவன்பாற்
பாடக மான தொடர்புற வெங்ஙன் பழகினளே. (௩ருசு)

## நற்றாய் தன்மகள் அச்சத்தன்மைக்கு அச்சமுற்றிரங்கல்.

வில்லிலங் கும்புரு வத்தா ணடக்குமவ் வெஞ்சுரத்திற்
கொல்விலங் கொல்லென் றதிர்குரல் கேட்டொறுங் கோட்டிமலத்
தொல்விலங் கைத்தெறுஞ் சொர்ணத் தியாகர் துறைசையன்னாள்
பல்விலங் கற்கண் வெரூஉமென்றென் னெஞ்சம் பதைக்கின்றதே. ()

### கண்டோரிரக்கம்.

காந்திகொள் பூண்முலைப் பாங்கிய ரேங்கிக் கவலைவெள்ள
நீந்தறி யாரெமை நீத்தகன் றாளென நீர்ச்சடில
வேந்தனெங் கோமுத்தி யீசன் றுறைசை விளக்கனையா
ளேந்திளம் பாவையைக் கண்டுயிர் சோர்ந்திடு மீன்றவளே. (௩௫௮)

### செவிலி ஆற்றத்தாயைத் தேற்றல்.

ஒள்ளொளி மன்றத் தலர்தூற்று மாதர்முன் னோங்கரசூர்
வெள்ளொளி நீற்றுருச் செம்பொற் றியாகர்தம் வெள்ளிவெற்பின்
றெள்ளொளி பாய்ந்த திகந்தமும் போய்நனி தேர்ந்துகண்டியா
னள்ளொளி மேகலை யாளைத் தருவ லணங்கலன்னே. (௩௫௯)

### ஆற்றிடை முக்கோற்பகவரை வினாதல்.

செப்பநன் மாளிகைக் கோகழிச் செம்பொற் றியாகர்வெற்பின்
மைப்படி நோக்கிளங் கொம்பொரு காளைபின் வஞ்சுரத்தே
வெப்பழ லாற்றெதிர் சென்றன ளேகுடை மேற்கவித்து
முப்பகை யுங்கெட முக்கோல் பிடித்த முனிவர்களே. (௩௬௦)

### மீக்கோர் ஏதுக்காட்டல்.

வருணத்திற் போதுந் தருத்தரும் போது மலர்ந்தவந்தத்
தருணத்திற் சூடுநர்க் கல்லா தவைக்கவை தாமென்செயுங்
கருணைத் திரவியத் தியாகேசர் கோகழிக் காரிகையா
யருணத் திலவித ழாருமங் நீர்மைய ரன்பினர்க்கே. (௩௬௧)

### செவிலி எயிற்றியோடு புலம்பல்.

அயிற்றிரி சூற்படை யார்மா சிலாமணி யார்துறைசை
வெயிற்றனி வேலொர் விடலையொ டென்மகள் வேட்கையென்னுங்
கயிற்றினிற் கட்டுண்டிக் கான்போகக் கண்டனை யேபுலியி
னெயிற்றிருந் தாலிக் கழுத்தி னெயிற்றி யெனுமகளே. (௩௬௨)

### செவிலி குரவோடுபுலம்பல்.

விழிகாட்டு நெற்றியர் கோமுத்தி யீசர் விளங்குபொன்னிச்
சுழிகாட்டு முந்தியெந் தோகையொர் தோன்றல்பின் றோல்குடிக்கோர்
பழிகாட்டி யிந்தச் சுடுபாலை நீந்திப் படர்ந்தவந்த
வழிகாட் டிடாய்பல பாவைக ளோடிங்கு வாழ்குரவே. (௩௬௩)

### செவிலி சுவடுகண்டிரங்கல்.

கவையே யழற்கண் ணெயினரி னஞ்சுங் களிற்றடிக
ளவையேயெங் கோமுத்தி யீசன் றுறைசையக் கள்வனடி
யுவையேசெம் பாரிடைப் பொற்று மரையி னுதித்திருந்த
விவையே யிணையே னெடுத்தமின் பொன்னடி யின்சுவடே. (௩௬௪)

### செவிலி கலந்துடன்வருவோர்க் கண்டுகேட்டல்.

எம்போ லினங்களு மீன்றாளுந் தேடி யிடரழுந்த
நும்போல் வனப்பெய்தி யிச்சுரம் போயினர் நோக்கினிரோ
வெம்போர் மழுப்படைச் செம்பொற் றியாகர் வியன்றுறைசைக்
கம்போ கழுகோ வெனுங்கழுத் தாளுமொர் காளையுமே. (௩௬௫)

### கலந்துடன்வருவோர் புலம்பறேற்றல்.

அதரெதிர் யான்கண்ட சிங்கமன் னானு மழகியவென்
மதர்விழி மான்கண்ட மானனை யாளு மதிக்கிலன்னே
கதழெரிக் கான்சென்ற வெப்பாறச் சீதளக் காவிரிதோய்ந்
திதழுறக் கோமுத்தி யீசன் றுறைசையை யெய்துவரே. (௩௬௬)

### செவிலி புதல்வியைக்காணாது கவலைகூர்தல்.

தூண்டற் கருஞ்சுடர் சொர்ணத் தியாகர் துறைசையுறாத்
தாண்டற் கரும்வினை யோரிற் பிரிந்து சலித்தவெங்கா
லீண்டற் புடன்கலந் தேகுநர்ப் பார்த்துக்கண் ணீடிழந்த
காண்டற் கரிதரி தான்மட மானையிக் கானகத்தே. (௩௬௭)

கற்பொடுபுணர்ந்த கவ்வை முற்றிற்று.

## மீட்சி.

### தலைவி சேணகன்றமை செவிலி தாய்க்குணர்த்தல்.

தண்டுறை சைத்திருக் கோமுத்தி யீசர் தமைப்பணியாப்
பண்டுசெய் தீவினை யோர்குடி வாழும் பழுவத்துப்போய்
வண்டுறை பூங்குழன் மாதைத் துரீஇயன்னை வாடிவந்தேன்
கொண்டுசென் றானெண் டிசையுங் கடந்தொரு கொற்றவனே. (௩௬௮)

### தலைவன் தம்மூர்சார்ந்தமை சாற்றல்.

காம்பார் வரையின்முன் னீதோய் சிவமது கங்கையிது
பூம்பா திரிமலர் கொய்யும் பொழிலுவை பொன்னியிதே
யாம்பாடுங் கோமுத்தி யீசன் றுறைசையை யேத்தலர்போற்
றேம்பா தெழுந்தருள் சேல்விழி யாய்நந் திருநகர்க்கே. (௩௬௯)

### தலைவி முன்சேல்வோர்தம்மோடு தம்வரல் பாங்கியர்க்கு உணர்த்திவிடுத்தல்.

ஒருவது வைக்கிசை யானைத் தணந்துசென் றுற்றரசந்
தருவது சேர்திருக் கோமுத்தி யீசர் தமிழ்த்துறைசைத்
திருவது லன்னுமற் றியானுமிக் கானகந் தீர்ந்தினிதா
வருவது கூறுமுன் செல்வீரென் னைய மடந்தையர்க்கே. (௩௭௦)

### முன்சென்றோர் பாங்கியர்க்கு உணர்த்தல்.

முன்வரக் கண்டறி யாதவொ ரோகையின் மூழ்குவிராற்
பொன்வரக் கண்டன பூங்குழ லாளொர் புரவலன்றன்
பின்வரக் கண்டனஞ் செம்பொற் றியாகர் பெருந்துறைசை
மின்வரக் கண்டபொற் பூண்முலை யீர்நல் விருந்தென்னவே. (௩௭௧)

### பாங்கியர்கேட்டு நற்றாய்க்குணர்த்தல்.

சரியோ மறுகிடை யென்றிருந் தேமச் சமழ்ப்பறவே
யுரியோ னொருவன்பி னுன்மகள் கானிகந் தொண்பொழில்சூ
ழுரியோசை நம்பதிக் கம்பொற் றியாக ரணியரசூர்ப்
பெரியோர் வருமென்று சொற்றனர் கேட்டின்பு பெற்றனமே (௩௭௨)

### நற்றாய் தலைமகனுளங்கொள் வேலனைவினாதல்.

மணந்தரு கோகழிச் செம்பொற் றியாகர் வரையிலெல்லா
முணர்ந்தருள் வேல சுரம்போகி மீளு மொருவனின்னே
கொணர்ந்திடு மோவென் மனைக்கேயென் மாதைக் குறைவில்வளந்
தணந்தறி யாத்தன் மனையுய்க்கு மோவொன்று சாற்றுகவே. (௩௭௩)

மீட்சி முற்றிற்று.

## தன்மனை வரைதல்.

### பணிமொழி நற்றாய் மணமனையர்வேட்கையிற் செவிலியை வினாதல்.

காதரந் தீர்த்தருள் செம்பொற் றியாகர்கண் ணூர்துறைசைப்
பூதர மேலன்பர் தாமாக மேவினும் பூங்குழையாய்
மாதர்நல் லாளைநம் மாமனைக் கேவந்து மன்றல்செய்வா
ரூதர வாயவர் தாயருக் கோதிலெ னங்கணைந்தே. (௩௭௪)

### செவிலிக்கு இதனை வரைந்தமை யுணர்த்தல்.

நற்றாய்க் கினியன்னை யென்னென் றியம்புவ நாந்துறைசைப்
புற்றா டரவணி புத்ரத் தியாகர் பொருப்பின்மன்ன
ருற்றார்க ளோடின்று நம்மட மாதை யுவந்துநன்றாட்
பற்றா வரைந்துகொண் டாரென்று தூதர் பகர்ந்தனரே. (௩௭௫)

### வரைந்தமை செவிலி நற்றாய்க்குணர்த்தல்.

ஆன்றவர் வந்துநின் றூற்ற மணநல மங்கணைத்தித்
தோன்றல்பின் னாகநஞ் சொர்ணத் தியாகர் துறைசையன்னா
ளீன்றவட் காணிய விம்மனைக் கேவரு மென்று நல்லா
யூன்றரு வாட்சில வொற்றர்முன் னேவந் துரைத்தனரே. (௩௭௬)

தலைவன் பாங்கிக்கு யான்வரைந்தமை நுமர்க்கியம்புகென்றல்.

பெருந்தவர்க் கின்பருள் செம்பொற் றியாகப் பிரான்றுறைசைத்
திருந்தெதம தூரகம் போய்மீண்டு வன்னிமுன் செவ்விளநீர்
பொருந்தன பாரங்கொண் மங்கைக்குப் பொன்னாண் புனைந்ததிறங்
கருந்தடங் கண்ணிநின் கேளிர்க்கெல் லாஞ்சென்று கட்டுரையே. ()

பாங்கி தான் அது முன்னேசாற்றியதுரைத்தல்.

செங்கைத் தினத்தர் துறைசைத் திரவியத் தியாகர்வெற்பா
மங்கைப் பருவ மயிலைக்கொண் டேகிநின் மாமனைவா
யங்கைத் தலம்பற்றி நுங்கேண்முன் னீபொன் னணிந்ததுநான்
சங்கைப் படாதறிந் தன்றே யுரைத்தனன் றமருக்கே. (௩௭௮)

தன்மனைவரைதல் முற்றிற்று.

## உடன்போக்கிடையீடு.

நீங்குங்கிழத்தி பாங்கியர்தமக்குத் தன்செல வுணர்த்திவிடுத்தல்.

என்போ டணியுந் துறைசையெங் கோமுத்தி யீசர்வெற்பில்
வன்போ தகந்திரி கானங் கடந்தொர் வனைகழலான்
பின்போ யினளென்று சொல்வீரெம் மூர்ச்செலும் பேரந்தணிர்
துன்போ டிரங்கித் தெருமந் திடுமென் றுணைவியர்க்கே. (௩௭௯)

தலைமகள் தன்செலவு ஈன்றாட்குணர்த்திவிடுத்தல்.

கையார நும்மைத் தொழுதிரந் தோதுவல் காமரம்பு
தையாத மாதவத் தாழ்சடை யீர்சென்று சாற்றுமின்யான்
மெய்யாகக் கோமுத்தி நாதன் றுறைசையொர் வீரனொடே
யையாறு தேர்மிசைச் செல்வதென் னீன்ற வவடனக்கே. (௩௮௦)

நற்றாய்க்கு அந்தணர்மொழிதல்.

பரிவேமருவி வரிசிலை யேந்துவைப் பார்த்திபன்பின்
பிரிவே கருதிப் புலிவழங் கத்தநின் பேதைசென்று
ளரிவேதன் போற்றர சூர்மாசி லாமணி யாரையுன்னித்
திரிவேது மின்றி யனையே யிருந்திடு தேற்றமுற்றே. (௩௮௧)

நற்றாய் அறத்தொடுநிற்றலின், தமர் பின்சேறலைத் தலைவற்குணர்த்தல்.

தேனக்க பூங்கொன்றைக் கோமுத்தி யீசனைத் தென்றுறைசை
யானைப் பரசு மரசவிவ் வாரணி யத்திறவா
தூனக்க வாண்மின் னுடன்பற் கடித்திடித் தொண்பகழிச்
சோனைப் படைமுகில் பொற்றேர்ப் பருதியைச் சூழ்கின்றதே. ()

### தலைவியைத் தலைவன் விடுத்தகறல்.

கமரேயிக் கான்வருங் கானவ ராமைக் கடலையென்கைச்
சமரோய் கணைத்தெய்வ மொன்றே குடித்திடுந் தையனல்லாய்
குமரேச ரத்தர் துறைசையெங் கோமுத்திக் கூத்தர்வெற்பி
னுமரேற் கொலைக்கஞ்சு வேன்செல்க நீயிது நோக்கின்றே. (௩௮௩)

### தமருடன்செல்பவள் அவன்புறநோக்கிக் கவன்றரற்றல்.

ஏதத் துடனஞ்சு மெற்புறங் காத்தவி னேத்தரசூர்ப்
பூதத் திரட்படைக் கோமுத்தி யீசர் புவியெங்குமூர்
வேதத் துரகத்தின் வாழிய வெம்மையர் வில்வளையாத்
தீதத்தந் தோன்றிட வென்றந்த வீரன்றிண் டேர்ப்பரியே. (௩௮௪)

உடன்போக்கிடையீடு முற்றிற்று.

---

## வ ரை த ல்.

---

### சென்றோன் மீண்டுவந்து அந்தணரையும் சான்றோரையும் முன்னிட்டு வரைந்து கொண்டுழிக் கண்டோர் மகிழ்ந்துகூறல்.

ஆனார் துவச னணைத்தெழு நாயக னுத்திமுடி
யானு தாவுறுந் தென்னு வடுதுறை யாண்டகைபோ
லானுத காதலின் யார்மணம் வேட்டன ராழிவைப்பி
லானு னிவர்திரு மாலாயி னுண்மங்கை யச்செல்வியே. (௩௮௫)

வரைதல் முற்றிற்று.

---

## இ ல் வா ழ் க் கை.

---

### தலைவன் தலைவிழன் பாங்கியைப்புகழ்தல்.

பேதாதி பேதங்கொள் சோபான நீத்துப் பிறழ்வரிதாம்
ஆதார முற்று மலாத்தவி சேறினம் யாமரசூர்
நாதாந்தர் செம்பொற் றியாகேசர் வெற்பிலங் நாண்முதலா
நீதா னெடுத்த வுழப்பினிவ் வாறு நிலைபெற்றதே. (௩௮௬)

### தலைவனைப் பாங்கிவாழ்த்தல்.

முன்னுண் மறையென்ன நீசொன்ன வஞ்சின முற்றுவித்தே
யிந்நாட் கதிரவ னெங்கெழி லென்னெனு மின்புகந்தாய்
பொன்னூர் துறைசை யணைத்தெழு நாயகர் போற்பிரியா
தெந்நாளு மெம்பெரு மான்வாழி வாழி யிவளுடனே. (௩௮௭)

# இல்வாழ்க்கை.

வரையு நாளளவும் வருந்தாதிருந்தமை பாங்கி தலைவியை வினுதல்.

வரையும்பொற் றாணும் பொருபுய னுன்னை வரையுமிந்நாள்
வரையுமெவ் வாறிட ராற்றியிருந்தனை மாதர்தொய்யில்
வரையுந் தனத்தி துறைசையெங் கோமுத்தி வள்ளல்வெற்பில்
வரையுமிக் கும்புரை தோளியர் தூற்றலர் வாளிகொண்டே. (௩அஅ)

தலைவி வருந்தாதிருத்தற்குக் காரணங்கூறல்.

ஏயும் விரக விடத்தையெல் லாங்கொக் கிறகறுகு
வேயுந் துறைசைக் கனகத் தியாகர்தம் வெற்பர்தந்த
பாயுங் கதிர்மணி யாலவர் சொன்ன பதமனுவால்
நீயும் மொருமருந் தாயுற லான்மெல்ல நீத்தனனே. (௩அகூ)

பாங்கி தலைமகனை வரையுநாளளவும் நிலைபெறவாற்றிய நிலைமை வினுதல்.

புரைவிடை யப்பகை வென்றூர்க் கருடரும் பூந்துறைசை
நரைவிடை யம்பொற் றியாகேசர் வெற்பிலிந் நாருளநீ
வரைவிடை வைத்தக ணும்முத லாகவிம் மாதினைவாத்
திரைவிடை கொண்டதெங் கேநின்ற தெங்குன் றிருவுளமே. (௩கூ0)

பாங்கி மணமனைச்சென்றுசெவிலிக்கு இருவரன்பு முரைத்தல்.

தலைவனெங் கோமுத்தி யீசன் றுறைசைநந் தண்கொடிமென்
முலைமுகை காட்டி முகமலர்ந் தார்வ முருகுபொங்கத்
தொலைவரு செவ்விதழ்த் தேன்றர லாலன்னை தோய்ந்தன்பர்தா
மலைவில் வண் டாயுண் டகமகிழ் கூரு மனுதினமே. (௩கூக)

பாங்கி இல்வாழ்க்கைநன்றென்று செவிலிக்குரைத்தல்.

ஆலடி யார்தென் னரசூரர் கோமுத்தி யங்கணனூர்
வாலடி யார்க்கன மிட்டில் லறத்தியல் வாய்ந்துகஞ்சம்
போலடி நின்மக டன்கேள் வனையென்றும் பொற்கலத்திற்
பாலடி சின்மிசை வித்துடல் பூரிக்கும் பான்மையளே. (௩கூஉ)

மணமனைச்சென்றுவந்தசெவிலி பொற்றொடிகற்பியல் நற்றாய்க் குணர்த்தல்.

சிரமங்கை யாண்டவர் செம்பொற் றியாகர் திருத்துறைசை
வரமங்கை யாள்கற்பை யென்சொல்லு கேன்மனை வாழ்க்கையிற்கந்
தரமும் பொழிகவென் றூற்றுரை கான்றிடுஞ் சாய்ந்துபட்ட
மரமுந் தழைகவென் றூன்மலர் பூத்து மணந்தருமே. (௩கூ௩)

செவிலி நற்றாய்க்கு மனைவாழ்க்கைத்தன்மையுணர்த்தல்.

வானும்ப ரன்புற்ற செம்பொற் றியாகர் வயல்வளைமுத்
தீனுந் துறைசையி னீயுநின் கேள்வனு மேவல்செயும்
யானு மிருப்பதின் மிக்காமில் வாழ்க்கையி னின்மகடே.த்
தானுந்த னன்பனுந் தன்னைப் புணிகின்ற தையலுமே. (௩கூச)

### செவிலி நற்றாய்க்கு இருவர்காதலும் அறிவித்தல்.

பல்கிய சீரர சூரொப்பி லாமுலை பாகர்வெற்பி
லொல்கிடை யாளும் பிறிதொரு தெய்வ முளத்துமெண்ணாள்
மல்கிசை யார்கடல் போல்வருந் தெம்முனை மாட்டுறினு
மல்கி வரலறி யாதண்ண றேர்மற்றொ ரல்கலுமே. (௩௯௫)

இல்வாழ்க்கை முற்றிற்று.

---

## பரத்தையிற்பிரிவு.

---

### காதலன்பிரிவுழிக் கண்டோர் புலவிக்கு ஏதுவிதாமிவ் விறைவிக்கென்றல்.

விடைக்கண் ணெழுந்தருள் செம்பொற் றியாகர் வியன்றுறைசை
யிடைக்கண் ணகல்வய லூரன் பவனி யினிதுவரப்
படைக்கண் வலையிற் பகற்சூறை யாடிடும் பாவையர்க்குக்
கடைக்கண் ணருள்செய்த லாலாகு மாதயர் காரணமே. (௩௯௬)

### தனித்துழியிறைவி துனித்தழுதிரங்கல்.

உமையா ளொனுமொப்பி லாமுலை நாயக ரோங்கரசூ
ரமையாத காத லுரியோன் பிரிய வரியவெப்பாற்
கமையாது கண்மழை யாலணை மூழ்கிடக் கங்குலெல்லா
மிமையா தழுங்குநர் யாரெனைப் போற்சில ரேழையரே. (௩௯௭)

### ஈங்கிதுவென்னெனப் பாங்கிவினுதல்.

எம்பர மானந்தர் செம்பொற் றியாக ரிடங்கொடிசை
யம்பர நாதர் துறைசைநல் லூர னனுதினமுங்
கம்பமி லாமற் கவசம தாயுனைக் காக்கவுநீ
கொம்பரி லாத கொடிபோற் றவிப்பதென் கோமளமே. (௩௯௮)

### இறைமகன்புறத்தொழுக்கு இறைமகளுணர்த்தல்.

கிள்ளையஞ் சொல்லிநஞ் சொர்ணத் தியாகர் கிளர்துறைசை
புள்ளல ரிற்கொடி யேனையப் பொன்மார் புவந்தளித்தான்
பள்ள வயற்செந்நெல் வீழ்த்தேகி மேதிப் பகடருகே
வள்ளை குதட்டி யருந்தூரன் சேரி மடந்தையர்க்கே. (௩௯௯)

### தலைவியைப் பாங்கிகழறல்.

உவருந்தி நீருண் டுலாவிய மேக முவந்துதன்பால்
நவரும் படிவரிற் பாற்கட லானது காய்ந்திடுமோ
துவருந்து வாய்மங்கை சொர்ணத் தியாகர் துறைசையன்ப
ரவரின்ன ரென்பது கற்பினிற் பாருக் கழகல்லவே. (௪௦௦)

### செவ்வணியணிந்து சேடியைவிடுத்துழி அவ்வணி உழையர்கண்டு அழுங்கிக்கூறல்.

கலரா லறிதற் கரியவெங் கோமுத்திக் கண்ணுதலார்
சலராசி யன்ன கிடங்கெயில் சூழ்தண் டுறைசையன்னீர்
மலராய் மணந்தரு நுங்குல முல்லையில் வந்தவம்மா
னலராம் பெரிய சரந்தொடுப் பார்க்கெங் ககப்பட்டதே. (௪0௧)

### பரத்தையர்கண்டு பழித்தல்.

இருங்கல னேடுகொள் செய்பொற் றியாக ரெழிற்றுறைசை
நெருங்கலங் காரநல் லூரனில் லத்துறை நேரிழையா
ரருங்கல னாகிய நாண்போக்கிச் சேரிவந் தாய்தொடியீ
ரொருங்கலர் பூத்த முருக்கிளங் கொம்பி னுதித்தனரே. (௪0௨)

### பரத்தையர் உலகியனோக்கிவிடுத்தலின், தலைவன்வரவுகண்டுவந்து வாயில்கண்மொழிதல்.

ஒண்ணந்தி கோமுத்தி யீசன் றுறைசை யுழூர்களின்மண்
விண்ணந் தினுமழி யாதகற் பாட்டி விடநடந்த
வண்ணந் திகழுருச் சேடியைச் சேரி மனையிற்கண்டு
தண்ணந் திரைப்புன லூரன்வந் தானிது தக்கதுவே. (௪0௩)

### தலைமகன்வரவு பாங்கி தலைவிக்குணர்த்தல்.

சதிர்கொண்ட வர்க்குமொர் தாழ்வுள தாந்தணந் தாரெனினு
மதிர்கொண்டல் சூழர சூர்மாசி லாமணி யார்க்கன்பர்போற்
கதிர்கொண்ட வேலன்பர் தேர்மீது வந்துன் கடையினின்று
ரெதிர்கொண்டு போற்றவர் குற்றங்கொ ளாதினி யேந்திழையே. ()

### தலைவனைத் தலைவி எதிர்கொண்டுபணிதல்.

கலந்தார் பெருநலங் கூறுந் தரமன்று காதலர்தாங்
கிலந்தான் பிரியிற் பசப்புமற் றேயின் கிளிமொழியா
யலந்தாரைக் காக்கு மரசூரர் கோமுத்தி யப்பர்வெற்பிற்
புலந்தாவ தெங்ஙன்முன் பொன்பூத்த கொங்கை புளகித்ததே.

### புணர்ச்சியின்மகிழ்தல்.

துடியிடை யாள்கொங்கைக் கோடுக ளென்செங்கைத் தோணியதா
மடிவறு மோதத் திரையென்ன முத்து வடநுடங்கக்
கொடிமதிற் கோகழிச் செம்பொற் றியாகரைக் கூடியசீ
ரடியவர் போலவின் றானந்த மாக்கட லாடினமே. (௪0௬)

### வெள்ளணியணிந்துவிடுத்தல்.

விரையார்ந்த மல்லிகைத் தாருமுத் தாரமும் வேய்ந்துபொன்னி
றுரையா மெனும்வெள் ளுடுக்கை யுடீஇயன்பர் நோற்குநல்லா
திரையானெங் கோமுத்தி யீசன் றுறைசையிற் சேயுதைய
முரையாட மாதர்முன் னேடின ரோகைகொண் டோனுக்கே. (௪0௭)

### வெள்ளணியணிந்துவிடுத்துழித் தலைமகன் வாயில்வேண்டல்.

இலவிதழ் மாதர்நல் லாருட னீசென் றிறைஞ்சியென்பாற்
பலவித மாக்குறை யெண்ணி மறுத படியரசூர்
நிலவிய கோமுத்தி யெம்மான்கைம் மானை நிகர்விழியாள்
புலவியை யாற்றுதி கூற்றுதிக் தன்னகட் பூங்கொடியே. (௪௦௮)

### தலைவி நெய்யாடியது இதனை சாற்றல்.

ஐயா னனைத்தையர் செம்பொற் றியாக ரருட்டுறைசைப்
பையா டரவல்குல் பாலற் பயந்து பரிமளங்கூர்
நெய்யா டினளவண் மெய்யாற வேண்டு நிகழ்துனியுஞ்
சையா சலம்பொரு மார்பா தணியவும் வேண்டுமின்றே. (௪௦௯)

### தலைவன் தன்மனத்து உவகைகூர்தல்.

பாராட்டு நல்ல தவஞ்செய்த நானவள் பச்சுடம்புஞ்
சீராட்டு செங்கையிற் பாலனும் பான்முலைச் செப்பழகுந்
தாராட்டு மார்பர் கனகத் தியாகர் தடந்துறைசை
யேராட்டி நெய்யிட்ட கோலமுங் காண்குவ னின்றுசென்றே. (௪௧௦)

### தலைவிக்கு அவன்வரல் பாங்கி சாற்றல்.

தென்கோ கழிநகர்ச் செம்பொற் றியாகர் சிலம்பில்வெள்ளை
யென்கோலங் கண்டனர் சொல்லுமுன் னேகடை யெய்திநின்று
ருண்கோலக் கையுங் குழவியுங் காணநம் மூரர்நல்லாய்
வண்கோடை யார்வெப்ப மோதட்ப மோவுன் மனத்துற்றதே. (௪௧௧)

### தலைவியுணர்ந்து தலைவனொடுபுலத்தல்.

முறுவற் படையிற் புரமாய்த்த கோமுத்தி மூர்த்தியெங்கோ
னுறுவர்க் கருளர சூரி ருமக்குரி யாரிடைப்போஞ்
சிறுவற் பயந்தவென் மேனியி னையவித் தேய்வைபடின்
மறுவற்ற வும்முடை மார்பணி வீணை மறுப்படுமே. (௪௧௨)

### பாணனைமறுத்தல்.

மடக்கொடி பாகன் றுறைசையெங் கோமுத்தி வள்ளல்வெற்பர்
தடுக்கரு மன்புநின் பாலுள ரென்பதென் றண்ணறும்பூத்
தொடுக்குந் துறையிற் றொடாக்கள்ளி வீவிற்கத் தோன்றினையோ
விடக்குநின் னிப்புலை யாபோக வேறொரு வீடறிந்தே. (௪௧௩)

### வாயின்மறுக்கப்பட்ட பாணன் கூறல்.

அறிந்தில னொன்னக் கொதித்துப் புகையுயிர்த் தம்மவென்மே
லெறிந்தகற் போது மினிக்கல் லெல்டேலெம் பிராட்டிபந்தம்
பறிந்திடச் செய்தருள் கோமுத்தி யீசர் பதியரசூர்ச்
செறிந்தவர் போனுன தாள்பணி வேண்கதந் தீர்ந்தருளே. (௪௧௪)

### விறலி வாயின்மறை.

மூளா வழலினுள் ளங்கனல் வேன்கண்கண் மூடுதுயி
லாளாவன் றேயர சூர்மா சிலாமணி யார்புகழைக்
கேளார் செவியிற் குணம்போன தென்செவி கேழுலம்போற்
றோளார்க் குகந்தவர் பாற்பாடு பாடினி தோடியையே. (௪௧௫)

### கூத்தன் வாயின்மறை.

வீரிய மாக வெனைப்பணி கூத்திதென் வெவ்விருட்கோர்
சூரிய னாகிய கோமுத்தி யீசன் றுறைசையென்னும்
பேரிய லூரர்முன் சேரிப் பரத்தையர் பின்றொடர
வாரிய நீயுன் னவினயக் கூத்தையங் காடுகவே. (௪௧௬)

### பாங்கி வாயின்மறை.

தண்ணார் சிறுபறை கொட்டி யுலாமித் தனிமகவைக்
கண்ணாகப் பெற்றபின் செம்பொற் றியாகர் கவின்றுறைசை
யொண்ணா ரியர்முனின் றவ்வோசை கேட்டுநம் மூரர்வந்தார்
புண்ணான நெஞ்சுடை யேன்பெற்ற பேறிது பொற்றொடியே. (௪௧௭)

### விருந்தொடுவந்துழிப் பொறுத்தல்கண்டு தலைமகன் மகிழ்தல்.

போர்க்குஞ் சரவுரிப் புத்ரத் தியாகர்தம் பூந்துறைசை
யீர்க்கு நடுநுழை யாமுலை யாளிடத் தெய்துதுனி
தீர்க்கும் படியவள் செங்கனி வாயிற் சிறுமுறுவல்
பார்க்கும் படிவிருந் தாய்வந்த தாலென்பண் டைத்தவமே. (௪௧௮)

### விருந்துகண்டொளித்தவூடல் பள்ளியிடத்துவெளிப்படத் தலைமகனோக்கிச் சீறேலென்றவள்சீறடிதொழுதல்.

ஏறேறு கோமுத்தி யீசன் றுறைசையி லெங்கடவுட்
பேறே யெனவரு பேராட்டி யின்றென் பிழையையெண்ணிச்
சீறேலுன் சீறடி பற்றினன் யான்சிறி யோர்பிழையோர்
நூறே செயினும் பொறுப்பரன் றேயரு ளோக்கினரே. (௪௧௯)

### ஈது எங்கையர்காணின் நன்றன்றென்றல்.

கங்கையஞ் செஞ்சடைச் செம்பொற் றியாகர் கவின்றுறைசை
மங்கைய ராட மணங்கூர்பொன் னித்துறை வாவெனது
கொங்கை முயங்க வணங்கிச் சிரத்திற்கை கூப்பிநிற்ப
தெங்கையர் செங்கழு நீர்க்கண்கள் காணி னினிதல்லவே. (௪௨௦)

### நின்னலது அங்கவர்யாரையும் அறியேனென்றல்.

ஆவியொன் றேயிவ் வுடலிரண் டார்வ மறப்புலந்தாற்
பாவியென் னேசெய்வன் பைந்தொடி யேபடி யேயெழுதா
வோவிய மேதிருக் கோமுத்தி யீச ருறைதுறைசைக்
காவிரி தோய்ந்துவப் பார்தோய்வ ரோசிறு காற்புனலே. (௪௨௧)

### காமக்கிழத்தியைக் கண்டமைபகர்தல்.

பொன்மரு கோடித் தனிவிளை யாடும் புதல்வற்புல்ல
வுன்மக னேயிவ னையுற னீயு முவனன்னையே
நின்மனை யேயிது வாவென நாணி நிலங்கிளையாச்
சொன்மறந் தேகினள் சொர்ணத் தியாகர் துறைசைமின்னே.(௪௨௨)

### தலைவியைப் பாங்கிபுலவிதணித்தல்.

ஆடிச் சிவந்தருஞ் செம்பொற் றியாகருக் கன்பருன்றாள்
சூடிச் சிவப்பொழி யென்னவும் பாராய் துறைசைநல்லாய்
சேடிச் சிறுமியர் சூழ்தெய்வ குஞ்சரி தேங்கடம்பன்
வேடிச்சி கொங்கை தழீஇவந்த போதும் வெறுத்திலளே. (௪௨௩)

### தலைவி புலவிதணியாளாகத் தலைமகனூடல்.

கருங்காலற் செற்ற துறைசையெங் கோமுத்திக் கத்தர்வெற்பிற்
பெருங்காதல் பூண்டயர் பேதைநெஞ் சேவஞ்சம் பெற்றவிவ
ளொருங்காய நீத்தன் றுயிர்த்துணை யாநம் முடன்கலவா
வருங்கான கத்தி லடிநோவ வந்த வமிர்தல்லளே. (௪௨௪)

### பாங்கி அன்பிலைகொடியையென்று இணர்த்தார்மார்பனையிகழ்தல்.

பாம்பார்த்த கோமுத்தி யீசன் றுறைசைப் பனிவரைமேற்
றேம்பார்த் தமிழ்தென்ன வந்நா ளருந்தினிர் தேரிலிந்நாள்
வேம்பா யுவர்த்தனி ரெங்கள்பொன் னூமென் கோவியர்கைத்
தாம்பா லடியுண்ட மாயனைப் பீருப்ப தன்மைநன்றே. (௪௨௫)

### பாங்கி தலைவற்கு மகப்பொறைகூர்ந்தவண்ணமுரைத்தல்.

நவ்வியங் கையரொங் கோமுத்தி யையர்நன் னீர்த்துறைசைக்
கொவ்வையஞ் செங்கனி வாயாண் மகப்பொறை கூர்ந்தவந்தச்
செவ்வியிற் றத்தநற் செல்வியைப் பெற்றன செவ்விலவு
மைவிரி காவியு மாயோ னமளியும் வான்மின்னுமே. (௪௨௬)

### தலைவன் புதல்வனைக்கண்டல்.

ஆடுந் திரவியத் தியாகேசர் கோகழி யந்தணர்க்கு
மாடுங்கற் றூவு மளித்திமை யோர்க்கு மலர்களும்விண்
மூடும் புகையும்பெய் தெல்லோரும் வாழ்த்தச்செய் முற்றவத்தாற்
கூடும் புதல்வனைக் கோவுங்கைக் கொண்டுகொண் டாடினனே.(௪௨௭)

### தலைவன் பள்ளியிடத்து அழுங்கல்.

சுரும்புறங் காத்தொடைச் சொர்ணத் தியாகர் துறைசைநன்னாட்
டிருப்புற வப்பதி யொப்பாய்செப் பான விருதனமுங்
கரும்புறழ் தோளு மணையா ரணையக் கவினெழுதற்
கரும்புற மானமெய் யோவினை யேனுக் கருளியதே. (௪௨௮)

### காமக்கிழத்தி வாயில்வேண்டல்.

மாரனை நீறு படக்கண்ட கண்ணர் வளர்துறைசை
யாரனை யாதருள் கோமுத்தி யீச ரவர்க்குரிய
பேரனை யாயுன் னகத்தே கறுப்புப் பிறத்தறகா
தூரனை யாதுவப் பாயெங்க ணீர்மைகொ ளுன்னருளே. (சஉகூ)

### மகனும் ஆற்றமையும் வாயிலாகத் தலைமகன்வந்துழித் தலைமகள் எதிர்கோடல்.

சூழ்ந்தார் கலியிற் பெருவேட்கை யோங்கினுந் துப்புரவோர்
தாழ்ந்தா ரிடைமனந் தாழ்ப்பர்கொல் லோசன்ம சாகரத்தில்
வீழ்ந்தாரை யேற்றுமெங் கோமுத்தி யீசர் விரும்பரசூர்
வாழ்ந்தாரும் வாழ்த்து வயலூரர் காம மதிப்பதன்றே. (சங௦)

### தலைமகன்புணர்ந்துநீங்கியபின் வந்தபாங்கியோடு தன்மகனைப் புகழ்தல்.

உம்மைப் பிறவிக்கொன் னேபோய வேழ்பவத் தொன்றுபின்பு
மிம்மைப் பிறவியி லெய்தவந் தான்மைந்த னேந்திழையாய்
சும்மைப் புனற்சடைச் சொர்ணத் தியாகர் துறைசையொப்பாய்
மும்மைப் புவியும் புகழுரன் மீண்டு முயங்கிடவே. (சஙக)

### தலைவி தலைவனைப் புகழ்தல்.

செந்நாப் புலவர் துதிக்குந் திரவியத் தியாகரென்று
மன்னு வடுதுறை மன்னு கியநம் மகிழ்நர்நம்பா
லந்நாளுண் டாயநட் பிந்நாளு போவில ராதலினு
னன்னுளிற் கொண்டவன் போலொரு கேளிரு நாடிலின்றே. (சஙஉ)

### பாங்கி தலைவியைப் புகழ்தல்.

புனலுற்ற பூம்பொய்கை யூரன் கொடுமை புரிந்தவெல்லா
மனமுற் றிடாமன் மறந்தெம் பிராட்டி வணங்குதலாற்
றுனகற்ற சிந்தையர் சூழ்திரு வாவடு தண்டுறைவாழ்
கனகத் தியாகர்தஞ் சீரரு ளேயன்ன காட்சியளே. (சஙஙு)

பரத்தையிற்பிரிவு முற்றிற்று.

---

## ஓதற்பிரிவு.

### கல்வியிற்பிரிவு பாங்கிக்குத் தலைவன் அறிவுறுத்தல்.

பொருவொன் றிலாதது புண்ணியக் கல்வி புகன்றிடினோர்
திருவு மமிர்துந் தருங்கடல் போலுந் தெரியிழையா
யருவு முருவுமுள் ளார்மாசி லாமணி யார்துறைசை
மருவுந் தவத்தினர் போல்வள ராகிற்பர் வாய்த்தவரே. (சஙச)

தலைவிக்குப் பாங்கி அறிவுறுத்தல்.

சேதாம்பல் வாவித் துறைசைத் திரவியத் தியாகர்செய்ய
பாதாம் புயத்தைப் பரவப்பெற் றார்பெறும் பாக்கியமின்
றேதா தவர்க்கில்லை யென்றுரைத் தேகின ரொள்ளமுற்சான்
வேதா ரணியமன் னுயுன்றன் மேல்வைத்த மெய்யன்பரே. (சாஙரு)

கார்ப்பருவங்கண்டு தலைவிவருந்தல்.

கத்திகைக் கூந்தனல் லாயென்செய் கோவினிக் காத்துறைசைப்
புத்திர த்யாகரைப் போற்றார் மனத்திருள் போலக்கொண்ட
லெத்திசைக் கண்ணுமுற் றென்னு ருபிருண்ண வெய்தியதான்
முத்திறக் கல்விக் கடனீந்தப் போனவர் முன்னிலரே. (சாஙசு)

தலைவியைத் தோழி ஆற்றுவித்தல்.

மகரக் கருங்கட லூடன் றெழுந்து வருவிடமே
நிகரக் குயின்வந்த தேதுவென் றேநினை நீவடபொற்
சிகரப் பொருப்புவிற் செய்பொற் றியாகர் திருத்துறைசைத்
தகரக் குழலணங் கேயன்பர் தேரின்று தான்வரற்கே. (சாஙஎ)

ஓதற்பிரிவு முற்றிற்று.

## காவற்பிரிவு.

காவற்பிரிவு தலைவன் பாங்கிக்குஅறிவுறுத்தல்.

தேக்கந் தருவெள்ள மார்சடைச் செய்பொற் றியாகரரு
ளாக்கந் தழைத்த துறைசையன் னாய்நல் லறப்புறங்கள்
காக்கவு மல்லவை நீக்கவுஞ் செல்வது கட்டளையா
மூக்கம் படைத்தினி தாநாடு காவ லுரியவர்க்கே. (சாஙஅ)

தலைவிக்குப் பாங்கி அறிவுறுத்தல்.

மலங்கா வகையுயிர் யாவையுங் காத்து வளர்துறைசைத்
தலங்காவல் கொண்டருள் செய்பொற் றியாகர் தமதருளா
னிலங்காவல் கொள்ள நினைவின ராயினர் நீலமழைக்
குலங்காவல் கொண்டவைம் பாலெம் பிராட்டிநங் கொற்றவரே. ()

தலைவி கூதிர்ப்பருவங்கண்டு வருந்தல்.

கறைகொண்ட கண்டர் கனகத் தியாகர் கவின்றுறைசை
யிறைகொண்ட கோல்வளை மால்பொழிந் திட்டபி னெஞ்சிநின்ற
வுறைகொண்டு வாடை யலைக்குமிந் நாள்சற் றுணர்ந்திலர்கொ
றிறைகொண்டு கோல்செலுத் தாநாடு காத்திடுஞ் சிந்தையரே. (சசா0)

### தலைவியைத் தோழி ஆற்றுவித்தல்.

சொல்லும் பெரும்புகழ்ச் சொர்ணத் தியாகர் துறைசையர்போ
லல்லுந் தியமலர்க் கோதாய் தழைக வடியுறையா
வொல்லுநர் வைத்தவு மொல்லார் விருத மொருங்குகொண்டு
வெல்லும் படைமுர சோடன்பர் தேர்மிசை மீண்டனரே. (சசக)

காவற்பிரிவு முற்றிற்று.

## தூ தி ற் பி ரி வு.

### தூதிற்பிரிவு தலைவன் பாங்கிக்கு அறிவுறுத்தல்.

நீந்தா நெடும்பகை கூர்ந்திரு வேந்தர்க ணோர்ந்தமரின்
மாந்தா வகைசென்று மாற்றுதற் கேகி வருமளவுஞ்
சாந்தார் வனமுலை செம்பொற் றியாகர் தடந்துறைசைத்
தேந்தா மரைமுகத் தாள்கவ லாவகை தேற்றுகவே. (சசஉ)

### தலைவிக்குப் பாங்கி அறிவுறுத்தல்.

போதார் புரிகுழற் பொன்னேவன் றொண்டர்க்குப் பொங்கிரவிற்
றூதாய் நடந்தவர் சொர்ணத் தியாகர் துறைசைநமர்
கோதார் மிகைதணி யாவிரு கோக்கள் குறித்தசமர்த்
தீதாம் பகைதணித் தற்கேக லுற்றனர் சித்தம்வைத்தே. (சசங)

### தலைவி முன்பனிப்பருவங்கண்டு வருந்தல்.

சுடுங்கார் விடமுண்ட சொர்ணத் தியாகர் துறைசையொப்பாய்
கடுங்கா வலர்பகை நீக்கப் பிரிந்தவர் கண்டிலரோ
வொடுங்கா ரொடுங்கத்தென் றிக்கோட மேக முருக்கமலம்
படுங்கால மென்னைக் கருகப் பெருகும் பனியினையே. (சசச)

### தலைமகளைத் தோழி ஆற்றுவித்தல்.

அங்குங் குமமுலை மாதேவங் தூற்றன ராழிவைய
மெங்கும் பொழிந்திடு முன்பனி நாளென் னிருதயத்திற்
றங்குந் துறைசைத் தியாகேசர் தாணிணை யார்வினைபோற்
பொங்கும் பகைமன்னர் போர்தணிப் பானன்று போனவரே. ()

தூதிற்பிரிவு முற்றிற்று.

## துணைவயிற்பிரிவு.

### துணைவயிற்பிரிவு தலைவன் பாங்கிக்கு அறிவுறுத்தல்.

இருந்துணை யாய்மன்னர் போர்முனை மேற்சென் றினிதினிங்கே
வருந்துணை யுங்கயற் கண்ணாய் துறைசையில் வாழ்ந்துயிர்கட்
கருந்துணை யாய்நின்ற கோமுத்தி யீச ரருளெனக்கை
தருந்துணை யாய்த்தைய லாள்வருந் தாவகை தாங்குகவே. (சசசு)

### தோழி அதற்கு உடம்படாமல் மறுத்தல்.

சேந்தற்கு மாமன் மகனார் செருவிற் றிகைக்குமெங்கள்
சாந்தத் தனத்திக் குதவிசெய் தாலென்ன தாழ்வுமைக்கண்
றேந்தத்தன் கோமுத்தி யீசன் றுறைசையெண் ணாரின்வெம்போர்
வேந்தர்க் குதவிசெய் வான்பிரிந் தேகுமின் வேலண்ணலே. (சசஎ)

### தலைவிக்குப் பாங்கி அறிவுறுத்தல்.

தீவாய வெஃகம் வலந்திரித் தேமன்னர் தெய்முனைமேற்
கோவாத முத்தனை யாய்படர்ந் தார்நமர் கொண்டலுலாஞ்
சோவா வடுதுறைச் சொர்ணத் தியாகரைச் சூழ்கிலர்போன்
மேவா ரிடுநொச்சி யாதுகொ லாக விளைகின்றதே. (சசஅ)

### தலைவி பின்பனிப்பருவங்கண்டு வருந்தல்.

குனித்தருள் கோமுத்தி நாதன் றுறைசைக் குரீஇக்குலமுந்
தொனித்திடுந் தம்பெடை யோடினங் கூடிடு துஞ்சிருட்கூர்
பனித்திர ளெங்கவென் கண்ணுறங் காமற் பனித்திரங்கித்
தனித்திருந் தேங்குக வென்றுயிர்த் தாலனைத் தாய்சுமந்தே. (சசகூ)

### தலைவியைத் தோழி ஆற்றுவித்தல்.

என்பனி யென்முதி ராமுலை கோமுத்தி யீசனன்பர்க்
கன்பனி மாசலை கேள்வன் றுறைசையை யாதரியா
வன்பனி யாயவரைப் போலே நடுக்கஞ்செய் வாடைமிகும்
பின்பனி நாளின்வந் தார்முன்பு நம்மைப் பிரிந்தவரே. (சரு௦)

துணைவயிற்பிரிவு முற்றிற்று.

---

## பொருள்வயிற்பிரிவு.

### பொருள்வயிற்பிரிவு தலைவன் பாங்கிக்கு அறிவுறுத்தல்.

இந்நா னிலத்தில்லை யேமத்தின் மேம்பட்ட தீட்டிலது
தன்னா லெவருஞ் சிறப்பின்மிக் காவர் தடந்துறைசை
நன்னா வியங்குழ லாயொப் பிலாமுலை நாயகரும்
பொன்னாலன் றேபுகழ்ப் பேர்படைத் தாண்டனர் பொற்பரசே. ()

### பாங்கி மறுத்தல்.

நிரைக்கும் பகிரண்ட கோடியர் கோமுத்தி நின்மலனூர்
திரைக்கு மரிவளர் தென்னர சூர் சிறையளிசூழ்ந்
திரைக்குங் குழலி யுரையாத் தனக்குன் றிரண்டுபெற்று
முரைக்குந் தனத்துக் கருஞ்சுரம் போக வுரைப்பதென்னே. (௪௱௨)

### தலைவிக்குப் பாங்கி அறிவுறுத்தல்.

தழலத்த மேந்திய செம்பொற் றியாகர் தமிழரசூர்
நிழலத்த மன்ன கபோலத்தி சேரத்த நேடிக்கொள்ளார்
விழலத்த மன்னரென் றெண்ணிமென் டேனைமெய் மான்புனலென்
றழலத்த நீந்தலுற் றருணை யேபொன்னென் றேகினரே. (௪௱௩)

### தலைவி இளவேனிற்பருவங்கண்டு வருந்தல்.

தைக்கின்ற வேற்கண்ணி தென்னர சூர்த்தம தன்பணைத்தாள்
வைக்கின்ற கோமுத்தி யீசர்த் தொழாத வரினமக்கோர்
திக்கின்று வேறினி யங்தோ தளிர்த்துச் சிறைநிறைந்த
கொக்கின் றலையிற் குயிலின மேறுபு கூவினவே. (௪௱௪)

### தலைவியைத் தோழி ஆற்றுவித்தல்.

தொம்மென வாட்டயர் சொர்ணத் தியாகர் துறைசைநல்லாய்
நம்மனங் கன்வசந் தத்திரு நாளிது நாட்டெவரும்
வம்மினென் றங்கவன் காகள மார்ப்பது வார்செவிகேட்
டிம்மெனு முன்னணைந் தார்பொருட் கேகி யிருந்தவரே. (௪௱௫)

### தலைமகளைக்கலந்திருந்ததலைமகன் முகிலோடு மகிழ்ந்துகூறல்.

மருவளர் கோதை மயிலனை யாள்கொங்கை வண்டரளக்
குருவள ராக முயங்கினம் யாந்திருக் கோமுத்தியூ
ரொருவன் றிரவியத் தியாகேசன் பல்லுயிர்க் குஞ்சுரக்குந்
திருவருள் போல வினிப்பொழி வாழி செழுங்கொண்டலே. (௪௱௬)

பொருள்வயிற்பிரிவு முற்றிற்று.

---

வாழி திருவர சூரெரப் பிலொமுலை வாழிபொன்னி
வாழி திரவியத் தியாகேசர் பொன்னருள் வாழியன்பர்
வாழிய வெங்கள்பஞ் சாக்கர தேசிகன் மாமரபு
வாழி துறைசைத் திருக்கோவை வாழிய வாழியவே. (௪௱௭)

---

## திருவாவடுதுறைக்கோவை முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

# அரும்பதவுரை.

### விநாயக வணக்கம்.

க. கோவையன்ன - கொவ்வைக் கனியையொத்த. கோவை அக்கு - கோக்கப்படுதலையுடைய அக்குமணிகள். மன அறைக் கோ - மணமாகிய அறையிலெழுந்தருளிய சிவபெருமான்.

உ. துறைசை - திருவாவடுதுறை. கோ - பசு. அழகிய நற்குஞ்சரம் - அழகிய விநாயகர்.

## நூல்.

உ. அமோகத்தவரும் மயலாதலுறும். கோமுத்தி - திருவாவடுதுறை.

௩. போதும்போதும்போதுமென எண்ணும்மை விரிக்க. இல் - இல்லை.

௪. பொன்னாழி-திருப்பாற்கடல். மின்னார்கடல் - தலைவியின்கண்கள். இரண்டு - விடமும் அமுதமும்.

௫. வம்பிற்புதைக்குந் தனங்கள்-சிலேடை.

௬. இறவு - இறுமீன்.

அ. கொல்லியம்பாவை - கொல்லிமலையில் அமைந்துள்ள பாவை. மேகம் - கூந்தல். மின் - இடை.

௯. நூல் - நூல்போன்ற இடையும் படித்தற்குரிய நூல்களும். இருள் - கூந்தல். கண்ணி - மாலையும் வலையும்.

க௦. கள் தார். கட்டா - கட்டி.

கக. கோகழி - திருவாவடுதுறை. கண்டீரவம் - சிங்கம். பிற - அசை. உகம் - யுகம். இடைதல் - பின்னிடல்.

க௩. கால்விழுந்த செல்லார் - காலிறங்கிய மேகம், வணங்கிய பகைவர். அசோகம் - சோகமின்மை, ஒருமரம். போர்க்குணம் - கற்பு.

க௪. வனம் - நீர், காடு. அத்தம் - கை. கோ-கண்கள், பசு. சிவபெருமான் அம்பிகையின் பசுவடிவத்தை நீக்கியருளியகதையை இக்கவியில் அமைத்துக்கூறிய அழகு மிக வியக்கற்பாலது.

க௫. வைத்திருக்குமுழுவதும் - கூரிய கண்கள்முழுவதையும், வைத்திருக்கும் எல்லாப் பொருள்களையும். உமதாகமுன்றந்தத்தை - உம்முடைய மார்பினிடத்தேயுள்ள யானைக்கொம்பு போன்ற தனங்களை. உமக்கே யுரித்தாகக் கொடுத்தபொருளை.

க௬. புத்திமான் - புத்தியாகிய மான், அறிவுடையவன் (தன்மை). கண்வலை - கண்களாகிய வலை, கண்களையுடைய வலை. ஒட்டந்தர - ஓட. ஒட்டம் - உதடு. எப்போது உண்பது.

க௭. ஆணர் - அன்புடையவர். மகனார் - மன்மதன்.

உ௦. மருங்கு அண்ணி. கொம்மைக்கோட்டை - கொங்கைகளாகிய கொம்பினை, வட்டமாகிய கோட்டையை. கை - கையும் சேனையும்.

உக. மட்டு - கள், அளவு.

உஉ. சக்கரவாகம் - கொங்கைக்கு உவமமான ஒரு பறவை.

உ௩. புனைய வாய்த்ததென்க.

உ௪. சிற்றிடை - விளி.

உ௬. பால் - நல்வினை.

உ௭. என்னுக்கு - யாதினுக்கு. சுடர் - தீபம்.

உஅ. பறவாக்குளவி - மலைமல்லிகை, அல்லது மலைப்பச்சை. வண்டோடு - வண்டுகளோடு, வளவிய தோடு. பணித்திட வருவலென்க.

உ௯. நஞ்சிக்கு-நமது சிக்கை. கொடியிடை - விளி.

௩௦. தேப் பானலங்கண்ணி - தேனையுடைய கருங்குவளை மலர்போலுங் கண்களையுடையாய்.

௩௧. தேற்றுவித்திட்டு - தெளிவித்து, தேற்றாங் கொட்டையால். உரைக்க - சொல்ல, தேய்க்க. நீர் - குணம், புனல்.

௩௨. நத்து - சங்கு. மின் அத்தர்- உமையை இடபபாதியிலுடையார்.

௪௨. வாசம் - மணம், தங்குதல். பொறி - யந்திரம்.

௪௪. சித்தசன்றேர் - தென்றல்.

௪௫. கூந்தல் -விளி. இருநான்கு கண்ணன் - பிரமன். பன்னிருதோளன் - முருகக்கடவுள்

௪௭. திருத்த[illegible]ணிய தீர்த்தம். மருத்துப்பயோ[illegible]-அமுதத்தை யுடைய கொங்கை, காற்றோடு கூடிய மேகம். அநங்காங்கி - காமத்தீ.

௪௮. வடித்தோ - ஆராய்ந்தோ.

௪௯. பேரெழிலி - பேரழகை யுடையாள், பெரியமேகம்.

௫0. நிலவரசு - படர்ந்த அரச மரம் அல்லது கொடியரசு. அம் சைவலம் - அழகியபாசி.

௫௧. கோகனகை - திருமகள்.

௫௨. கன்னி - ஓரிராசி. தேசிகப் பொன் - ஒருபொருட் பன்மொழி. ஊசிவை - ஊசியின்கூர்மை.

௫௩. குற்றும் - பறிக்கப்படும். கோ- கண்கள். கலன் - கப்பல்.

௫௪. சூல் - சூலம். அரசு - அரச மரம், தலைவன். மின்மால் - மின்னலையுடைய மேகம், தலைவியாலுண்டாகிய காம மயக்கம்.

௫௫. குளம் - வெல்லம்.

௫௬. போதி - அரசு. ஒறுக்கும் போதில். கொடுமரம் - வில், மேரு. கோல் - அம்பு, திருமால். அம்போதி - கடல். வம்போதி - மணத்தை யுடைய கூந்தல்.

௫௮. பளிக்கறை - பளிங்குப் பாறை. வாழ்வான் - வாழும்பொருட்டு. என்ன நிற்றி.

௬௧. பதி - அரசன்.

௬௨. தடம் - மலை, வழி.

௬௩. நோய்கள் பலவற்றுள்ளும் சிறந்த நோயாவது காமம். ஐவாயில்- ஐம்பொறி.

௬௪. பக்கம் குறையாத சோமன்- தலைவனுக்கும்சந்திரனுக்கும்சிலேடை.

௬௫. தென் - அழகு, தென்னை.

௬௬. இதழி - இதழையுடையாள். சோரும் உயிர் புரக்கும் சஞ்சீவினி - மிருதசஞ்சீவினியென்னும் ஔஷதி.

௬௮. செங்கிடையார் - செங்கோட்டி.

௬௯. ஆல் - ஆலமரம். நேமியான்- திருமால்.

௭0. புடை - பருத்தல்.

௭௧. அவ்வெழுத்தின்-அகரத்தோடு. அவைக்கு-அவ்வெழுத்துக்களுக்கு.

௭௨. கா விரி - சோலைகளில் விரிந்த. இருக்கு ஆலும் - வேதங்கள் முழங்கும்.

௭௩. மழை - கூந்தல். கந்தம் - மணம். எழுவகைத் தன்மை - மழை தருங்கந்தம் முதலியன.

௭௪. கோடு - பன்றிக்கொம்பு.

௭௫. முக்கோ - மூன்றுகண்கள். சொக்கு - பேரழகு.

௭௬. முத்தம் - கீழுதடு. இக்கோவை - இக்கண்களை. அக்கோவை யதா - அந்தக் கொவ்வைக்கனியாக.

௭௮. முருக்கின்பூ - கீழ்உதடு.

௭௯. நடக்குமொருவரை - யானை. கொம்பாற் குத்திற்று.

௮0. சித்திர தீபம் - தலைவி.

௮௩. மாராயம் - மகிழ்ச்சி.

௮௪. பத ஆரணம் - பதங்களை யுடைய வேதம். இத வார் அணவும் - இன்பத்தைச் செய்யும் கச்சைப்பொருந்திய. ஈடு - வலி. சிதவாரணம் - வெள்ளிய சங்கம். கையான் - திருமால். மத வாரணம் - மதயானை.

௮௫. சே யானம் - இடபமாகிய ஊர்தி. புனத்தால் - புனத்தின்கண். பாயாத வேங்கை - வேங்கைமரம்.

௮௭. பொன் ஒதி - பொன்மலை; மேரு. வில் அத்தர். வன்றி - பன்றி.

௮௮. ஒற்று இடை ஆரும் அதி - அத்தி=யானை.

௮௯. வரை ஆரங்கள் -மூங்கிலிற் றோன்றிய முத்தங்கள்.

௯0. முதுமை யானை.

௯௧. முறி - தளிர்.

கூஉ. வள்ளிக்கொடி - வள்ளியம்மை. தெய்வப்பிடி - தெய்வயானை.

கூங. கைம்மலை - யானை.

கூச. காயத்திருஞ்சிறை - தேகபந்தம். சிதாகாயம் - ஞானகாயம், நாகம் - மலை. காய் அத்தி - காய்த்த அத்திமரம், கோபிக்கப்பட்ட யானை.

கூரு. ஆம்பல் - யானை.

கூசா. ஒற்று - ஒற்றியெடுத்தவை.

கூஎ. தாராகணத்தைக் கழற்சிக் காயாகவும் திங்களைக் கண்ணாடியாகவும் கடைந்து கொடுக்க வல்லேன்.

கூஅ. துள்ளாடும் - துள்ளும்.

கூகூ. திருமகள் - தெய்வயானை.

க00. மங்கையார்.

க0ரு. வல்லார் - வல்லமையுள்ளார், வல்லமையில்லார்.

க0அ. சரி - ஒப்பு.

க0கூ. வெப்பம் நீங்கரிது.

ககக. ஆதரவு கருதலொப்பாம்.

ககங. சஞ்சீவனி - மிருதசஞ்சீவினியென்னும் ஒஷதி; (மோனை.)

கஉ0. வெண்சாந்தம் - திருநீறு.

கஉங. வெள்ளாங்குருகு - நெய்தனிலத்துக்கு உரியதோர் பறவை.

கஉச. வேழத்தன் - மன்மதன். காகளவீ - குயிற்பறவை. கொடி - காக்கை. புல்லார் - புறக்காழையுடையபனை, புன்மையை யுடையார்.

கஉரு. முல்லைப் பெண்ணை - கற்பையுடைய தலைவியை. பெண்ணை - பனை. மதி - முன்னிலையசை.

கஙக. உள்ளீடு - அறிவு.

கஙங. பன்னி - பத்தினி. தரும் வெற்பு - இமயம்.

கஙச. காழிமன்னர் - திருஞானசம்பந்த மூர்த்தி.

கஙஎ. உத்தியானம் - சோலை.

கசக. இன்னம் ஆய்.

கசங. வஞ்சிக்கு அரசு ஆரம்-பனை.

கசசா. அலர் - பலரறிந்து கூறும் பழிமொழி. வன்னித்தழை - வன்னி மரத்தின் இலை.

கசஎ. ஊரு - தொடை, ஊர்.

கசஅ. தேனிறாலுக்கு மதி உவமம்.

கருங. தோணிபுரம் - சீகாழி.

கருரு, படி - ஒப்பு.

கருகூ. மூரல் - பல், சோறு.

கசாக. என்றின் தேர் - சூரியனுடைய தேர்.

கசாஉ. ஆர - நிறைய. வெய்யோன் - சூரியன், கொடியோன்.

கசாங. எம் ஐயர் - எனது தமையன்மார். திமில் - மீன்பிடிக்கும் படகு.

கசாச. பூந்தாங்கு அரசு-பூமியைத் தாங்கும் அரசன், மலர்களைத் தாங்கும் அரசென்பது மற்றோர் பொருள்.

கசாசா. சுட்சுடர் - சந்திர சூரியர். தருந்தன்மை - தட்பமும் வெப்பமும்.

கசாஅ. தால் - நா.

கஎ0. வேங்கை - வேங்கைமரம். இது பூத்தால் தினைக்கதிர் கொய்வர்.

கஎஉ. கணியார் - வேங்கைமரம், சோதிட நூல் வல்லார். போது - மலர், காலம். குரல் - கதிர்.

கஎச. தண் தாதகி - தண்ணிய திருவாத்திப்பூ. வரைக்கோதண்டா - மலையை வில்லாக வுடையாய். தண்டாமல் - தணியாமல், வல் இதண் அலாது - வலிய பரணை யல்லாமல்.

கஎரு. மருது ஆளும் ஊர் - திருவிடைமருதூர். தாள் - அடி.

கஎஅ. செம்மல் நையாமல் - தலைவன் வருந்தாத வண்ணம்.

கஎகூ. அஞ்செழுத் தெங்குருநாதன் - ஸ்ரீபஞ்சாக்கர தேசிகர்.

கஅ0. பமரம் - வண்டு. மதனனுடையதுரகதம் - கிளி.

கஅக இஞ்சி - மதில்.

கஅஉ. கந்தரம் - கழுத்து. கந்தருடைய அன்பன்.

கஅங. பரு கம் - பருத்த தலை. கங்கு (பருந்து) உலாவும் கறைவேல். அரி - சிங்கம். ஒருங்கு அங்கு உலாவும். மால் - மேகம்.

கஅச. இடை இரண்டடிகளும் நிரல் நிறை. முதுகுன்று - விருத்தாசலம்.

கஅஎ. நாகம் - சுரபுன்னை.

கஅஅ. அறை - பாறை. கண்டீர்ந்து - தாட்சணியமொழிந்து.

ககூ0. கைதந்து அலையேலென்று.

கககரு. எண்கு - கரடி. கோடு - தந்தம், கிளை. கோட்டி - கூட்டம், துன்பம். தந்தவர் வந்தார்.

ககச. ஆழி - மோதிரம், சக்கரம், கடல். ஐ யாழின் இன் மொழி - அழகிய யாழோசை போலும் இனிய சொல்லாய். பொழிற்குப் போதுகம்.

ககரு. பல்லவம் - தளிர்.

ககஎ. சூரல் - பிரம்பு. பரல் - பருக்கைக்கல். சூர். தெய்வப்பெண். இசும்பு - வழுக்குநிலம்; ஏற்றிழிவை யுடைய நிலமுமாம்.

ககக. குளிகை - சித்தகுளிகை; அது மாத்திரை வடிவாக வுள்ளது.

உ0க. குவலயம் - பூமி, குவளைப்பூ. அவல் - பள்ளம். பாசமாகிய வலையை. கவலை - கவர்த்த வழி, துன்பம்.

உ0உ. கற்பு ஆர் உமை. கற்பார் - படிப்பவர்கள். கற்பு - முல்லைக்கொடி. கல் பார் - கல்லையுடைய பூமி.

உ0ந. முதலிரண்டடி நிரனிறை.

உ0ச. அனந்தற்குவளை - துயிலுதலையுடையகண்ணுய குவளை; உருவகம்.

உ0ரு. திசை - திசை.

உ0எ. கோட்டொலி - கொம்பின் ஓசை.

உ0அ. வண்டின்பெயர் - தும்பி, அரியென்பன. பெற்றவைகள் முறையே யானையும் சிங்கமும்.

உ0க. வளவன் - கோச்செங்கட் சோழநாயனார்.

உகந. சங்கம் அடிதாழ.

உகச. கடப்பந் தொடையர் - முருகக்கடவுள்.

உகரு. கருங்கா - கரிய சோலை. செங்காவி - செங்கழுநீர். காவியது - சுமந்தது.

உகஎ. விறப்பு - நெருக்கம். அறம்- அறும்படி.

உகக. சானு - மலைப்பக்கம். குரும்பி - புற்றாம்பழஞ்சோறு.

உஉ0. எண்ணியே மாலுகின்ற மனத்தொடு.

உஉக. வெள்ளி - வெள்ளை.

உஉஉ. சீ - இகழ்ச்சிக்குறிப்பு.

உஉந. சழக்கு - வழக்குக்கு மாறுபட்டது. சிலைத்தல் - முழங்குதல். வெள்ளி - சுக்கிரன்.

உஉஎ. கூவா - கூவி. முன்தாள் வன்குருகுகள் - கோழிகள்.

உஉஅ. கடுத்தனளோ - ஐயமுற்றாளோ. முல்லை இலம்பகம் - முல்லை மலராலாகிய நெற்றிமாலை.

உந0. திங்கள் நிலாக் கான்றிடும். வரிந்த - கோலஞ்செய்த. கொங்கை- விளி. குடிஞை - கோட்டான். பெட்பன் - விருப்பமுடைய தலைவன்.

உநக. அருங்கடி - அரியகாவல். அடியார் நெருங்கு. மருங்கு - இடம், பக்கம்.

உநஉ. கடுக் கண்டன் ஐயன். வடுவைப்போன்ற விழியையும், கண்டைப்போன்ற மொழியையுமுடையாய். இடுக்கண் தனை - துன்பத்தை. நடுக்கண் தனை - நடுவிடத்தை. அங்கெய்தி நாம் நண்ணுவது யாருள்.

உநச. சரி - கைவளை. தைவந்தனன் - தடவினேன்.

உநரு, சிவம் - நன்மை, மங்களம். அவத்தர் - பொய்யர், வீணர்.

உநசு. பீரத்தலர் - பீர்க்கம்பூ; இது பசலைக்குவமம்.

உநஎ. முறி - அடிமையோலை. பிறிவாரின்-பிரிவார்போல; (எதுகை.)

உநஅ. செய் - வயல். மையலர் வீழும் - கருங்குவளை மலரையொக்கும். மதன்கையாற் றொடுத்திடும் மலர்ப்பாணம்; தையலர் (மகளிர்) வாயாற் றொடுத்திடும் பழிமொழி; தையலர் - தைக்கும் மலரம்பு, தங்கும் பழிமொழி. வண்டு - வளையல்.

உநக. ஆறாறுக்கு - முப்பத்தாறு தத்துவத்திற்கு. அரசூர் நின்ற. ஆறு - வழி. இருட்டுணையாவர் ஆர்.

உச0. பானல் - கருங்குவளை மலர். கானல் - கடற்கரைச் சோலை. நலம்போக என் அழுதி. துறைவன் றான் அலம்பு ஓதக்கரை.

உசக. ஞாழல் - புலிநகக்கொன்றை. எத்தால் - ஏய்ப்பால்.

உசஉ. கழுது-பேய். இழுது-நெய்.

௨௪௩. அளை - புற்று. தளைவாக்கு - பந்தத்தை நீக்குகின்ற. உளைவாய் - வருத்தமுடையராய்.

௨௪௪. ஆயிரம்பெயரையும் தவத்தினர் பரசும். அணங்கு அணங்கிற்றன்று - தெய்வம் வருத்தவில்லை.

௨௪௫. மூன்றுதலைவேல் - சூலம். மணிப்பேழை - மாணிக்கப்பெட்டி.

௨௪௬. நிமித்தமும் நீ உரைத்தி.

௨௪௭. அறைவாயில் - அறையின் வாயில். அறை வாய் - பாறையின்கண். அறை - ஒலிக்கின்ற.

௨௪௮. நார் - மலர் தொடுக்கும் நார், அன்பு. அலர் - பூ, பழிமொழி.

௨௫௧. ஆம்பல் தீயாக, அலர் பொரியாக, ஒலி மந்திரமாக. காணம் - பொற்காசு.

௨௫௩. வேங்கை - ஒருமரம், பொன்.

௨௫௪. பண்ணை அம்பு ஆர்க்கும் - வயல்களில் நீர் முழங்கும். பண் ஐயர் பண்ணை - கூட்டம். பண் நையும் - இசை வருந்தும்.

௨௫௬. பல் நந்து அடம்பு அடி - பலசங்குகள் அடப்பமரத்தினடியில்.

௨௫௭. மொழிக்கு இடை - சொல்லுக்குத் தோற்ற. காத்தும் - காப்பேம்.

௨௬௧. சீதாரி - ஒருவாசனை மரம். அவல் - பள்ளம்.

௨௬௨. தாவிக் குளம்பினில் இருலைத் துவைத்திட்டு மான் இயங்கும் பொருப்பு.

௨௬௫. ஆர் தரித்த - ஆத்திப்பூவை யணிந்த.

௨௬௬. பீர் - பசலை.

௨௭௩. இடை எல்லி - பாதியிரா.

௨௭௪. இனையல் - வருந்தாதே. கந்தித்தது - மணம் வீசியது.

௨௭௫. ஆரியநாடு - வடக்குள்ள தோர் தேயம்.

௨௭௬. கொழு அலம் - கொழுவையுடைய கலப்பை.

௨௭௮. எணி - மான். பாணித்து - தாமதித்து.

௨௮௨. மெல் அதரத்து அங்கனையே. பல்லதர - பலவற்றைக் கொணர. செல்லது - மேகமானது; அது - பகுதிப்பொருள்விகுதி. அரத்தம் - செம்மை. கல் அதர் அத்தம் - கற்கள் செறிந்த வழியையுடைய காடு.

௨௮௪. உலம்பும் - முழங்கும்.

௨௮௫. செருந்தி - ஒருமரம். இண்டு - ஒருவகை முட்கொடி.

௨௮௮. ஐவனம் - மலைநெல். பராய் - வழிபட்டு. நீணா அழகியமேகம் சொரிந்தது. ஐவனமாடம் - அழகிய எழுத்துக்களையுடைய மாடம். ஐ வனம் - ஐந்து நிறம்.

௨௯௩. விஞ்சை - வித்தை.

௨௯௬. சேகை பதத்தினில் - இடபத்தின் சையிடத்தில். 'சேக்கைப் பதுமத்தில்' என்றும் பாடம்.

௩௦௦. முடி ஆறு கொண்ட - திருமுடியில் ஆகாய கங்கையை யணிந்த. முடி-கிரீடம். முடியா-அழியாத. முடி ஆர் அளகம் - முடித்தலையுடைய அரிய கூந்தல்.

௩௦௪. மைப்போது - கருங்குவளைமலர்.

௩௦௬. விதுக்குறை - சந்திரகலை.

௩௦௭. கல்லோலம் - அலை.

௩௧௦. சுகம் - கிளி.

௩௧௫. நூழை - சிறுவாயில்.

௩௧௬. கறி - மிளகுகொடி. கரி - யானை யென்னும் பெயரினதொரு நோய்.

௩௧௭. இவ் வருடை ஆவியை - இந்த ஆட்டினுயிரை.

௩௧௮. பாதம் சூட்டும்.

௩௧௯. ஈறில் காவிரி - காவி; அது கருங்குவளை, அவ்வாறு காவி[illegible]யென்பது; தலையெழுத்து - கா=சோலை.

௩௨௧. மதப் பொருப்பு - யானை. தெவ்வைத்தீர்ப்பான் - பகையை ஒழிக்கும் பொருட்டு. ஒருப்பாடு - ஒருமைப்பாடு.

௩௨௬. ப[illegible]ம்பு - பள்ளம். முரம்பு - பருக்கை[illegible]களாலாகிய மேடு.

௩௩௨. [illegible]ம் - கருமை.

௩௩௪. தாரி - வழி.

௩௩௬. தொக்கு-கூடி. உரவோர் - அறிவுடையோர். உரமான - வலியை

யுடைய. பூ வெதும்பியது. குரவந் தரு - குராமரம்.

ஙஙஅ. தரோ - ஓசை.

ஙஙக. மாரனும்தேவியும். பேம் - அச்சம்.

ஙசஉ. சங்கு - வளையல்.

ஙசங. வாள் ஐயர் - வாட்படையையுடைய தமையன்மார்.

ஙசரு தோயமுறுப் பாலை வன்னிக்கு விடுவாய் - நீர் கலவாத பாலினைக் கிளிக்கு விடுவாய்; நீரில்லாத பாலை நிலத்தின் தீவெப்பத்தில் என்னைச் செல்லவிடுவாய் என்பது மற்றொருபொருள்.

ஙசசு. பெற்று - இடபம்.

ஙசஎ. விடலை - பாலைநிலத்தலைவன்.

ஙசக. வாய்மொழித்தெய்வம் - மந்திரம்; சிலப். நாடு - க00.

ஙரு0. காளை-பாலைநிலத்தலைவன்.

ஙருங. எணி - எண்ணி. ஒடியாது - மெலியாமல். ஒருமணிக்கொடி - ஒரு கண்மணியையுடைய காக்கை.

ஙருச. வலப்பார்வை - சூரியன்.

ஙருசு. குராமரத்தின் பூவைப் பாவையென்றல் மரபு. (ஙசுங)

ஙசு0. செப்பம்-செம்மை. முப்பகை - காமவெகுளிமயக்கம்.

ஙசுக. வருணம் - நீர்.

ஙசுங. தோன்றல் - பாலைநிலத்தலைவன்.

ஙசுச. கள்வனென்றது தலைவனை.

ஙசுக. சிவமதுகங்கை - ஒருதீர்த்தம். பொன்னி - காவிரி.

ஙஎஉ. மருங்கிடைச் சரியோம். சமழ்ப்பு - நாணம்.

ஙஎச. காதரம் - அச்சம்.

ஙஎஅ. செங்கைத்தினம் - திருவாதிரைநாள்.

ஙஎக. என்பையும் ஒட்டையுமணிந்த. போதகம் - யானை.

ஙஅஉ. இறவாது - கடவாதபடி.

ஙஅச. தீது அத்தம் - வெம்மையையுடையதாகிய அருநெறி.

ஙஅரு. ஆத்திமுடியான் ஆதரவுறும். அனைத - அமையாத. இவன் திருமாலானன். மங்கை அச்செல்வியாயினள். (செல்வி - திருமகள்.)

ஙஅஅ. வரை - மலை. இந்நாள் வரையும் - இந்நாள்காறும். தொய்யில் வரையும் - கோலமெழுதப்படும். வளையும் இக்கும் - மூங்கிலும் கரும்பும்.

ஙக0. புரை - குற்றம்.

ஙகஉ. வால் - தூய்மை.

ஙகரு. பல்கிய - பெருகிய.

ஙகசு. ஊரன் - மருதநிலத்தலைவன். பகர்சூறை - பகற்கொள்ளை.

ஙகஎ. கமையாது - பொறாது.

ஙகஅ. திசையம்பரநாதர் - திகம்பரர்.

ஙகக. கொடியேன் நைய. செந்நெல் தலைவிக்கும் மேதிப்பசடு தலைவனுக்கும் வள்ளை பரத்தைக்குமுவமை.

ச00. உவருந்தி-உவரையுடைய சடல்; உவர்க்கடல் பரத்தைக்கும் மேகம் தலைவனுக்கும் பாற்கடல் தலைவிக்குமுவமை.

ச0க. கலர் - கீழ்மக்கள். குலமுல்லையில் - குலமாகிய முல்லைநிலத்தில். மானென்றது தலைவியை. சரம் - அம்பு.

ச0உ. ஒட்டினை உண்கணுகக் கொண்ட. முருக்கிளங்கொம்பு - முண்முருக்கையின் இளங்கொம்பு.

ச0ரு. இலம் - அற்பம். அலந்தார் - மெலிந்தார்.

ச0எ. உடீஇ - உடுத்தி. நல்ஆதிரையான் - நல்லதிருவாதிரைநாளையுடையவன்.

ச0க. சையாசலம் - சையகிரி.

சகஉ. உறுவர் - முனிவர். ஐயவித்தேய்வை - சிறுகடுகை அரைத்துக் கலந்தகுழம்பு; ஐய இத்தேய்வையெனப்பிரித்து, நின் மேனியிலுள்ள அழகிய இந்தச் சந்தனக் குழம்பெனினும் பொருந்தும்.

சகரு. பாடினி - பாடுபவள். தோடி - ஒரிராகம்.

சகசு. கூத்து இது என்.

சகஅ. தீர்க்கும்படி, பார்க்கும்படி தவம் விருந்தாய்வந்தது.

௪௨௧. படி - ஒப்பு.

௪௨௩. சிவப்பு - கோபம். தெய்வ குஞ்சரி - தெய்வயானை. கடம்பன் - முருகக்கடவுள். வேடிச்சி - வள்ளியம்மை.

௪௨௪. அன்று - உடன்போன அந்நாள்.

௪௨௫. தேம்பார்த்து - இடநோக்கி. உவர்த்தனிர் - வெறுத்தீர். மாயன் - கண்ணன். உம்ம - உம்முடைய.

௪௨௬. முன்னமே தலைவியின் அதரம், கண்கள், வயிறு, இடையென்னும் நான்கிற்குந் தோற்று அழகிழந்திருந்த செவ்விலவம்பூ முதலிய நான்கும் இவள் கருவுற்ற இந்நாளில் தமக்குரிய பண்டைத்தகவின் பெற்றன; இவளுறுப்புக்கள் வேறுபட்டிருந்தன என்றபடி.

௪௨௭. மாடு - பொன். புகை - ஓமத்திற் புகைக்கப்படும் பொருள்கள்; ஆகுபெயர். வாழ்த்தக் கைக்கொண்டு.

௪௨௮. புறவப்பதி - சீகாழி. அணையார் - படுக்கை. இச்செய்யுள் புறங்காட்டற்றுறையென்றுங் கூறப்படும்.

௪௨௯. ஆரன் - ஆத்திமாலையையுடைய சோழன். பேர், யாசிலாமணியென்பது. பேழையாய் - குற்றமற்ற மாணிக்கம்போல் வாய்.

௪௩௦. தூப்புரவு - தூய்மை. தாழ்ப்பர் கொல்லோ - தங்கச் செய்வாரோ.

௪௩௩. தனகு - விடயக்களிப்பு.

௪௩௬. கத்திகை - பூமாலை. முத்திறக்கல்வி - இயலிசைநாடகம்.

௪௩௭. குயின் - மேகம்.

௪௪௦. உறை - துளி.

௪௪௧. ஒல்லுநர் - நட்பினர். ஒல்லார் - பகைவர்.

௪௪௩. வன்றொண்டர் - ஸ்ரீசுந்தரமூர்த்தி நாயனார். இருகோக்கள் - இரண்டரசர்கள்.

௪௪௪. மேகம் தென்றிக்கு ஓடக் கமலம் கருக.

௪௪௭. சேந்தன் - முருகக்கடவுள். மகனார் - மன்மதன். உழைக்கன்று - மான்கன்று. மின் வேல் - ஒளியையுடையவேல்.

௪௪௮. படர்ந்தார் - சென்றார். சோ - மதில். நொச்சி - மதில்.

௪௪௯. குனித்தருள் - நடித்தருள்கின்ற. குரீஇக் குலம் - குருவியினம். பனித்து - நடுங்கி.

௪௫௦. என்பனி - என்னபனி. அன்பன், இமாசலை (உமை) கேள்வன். வன்பு அனியாயரை.

௪௫௧. எமம் - பொன். புகழ்ப்பேர் - சொன்னத் தியாகரென்பது.

௪௫௨. உலாயாத் தனக்குன்று - கொங்கைகள். உரைக்குந்தனம் - பொன்.

௪௫௩. அத்தம் - கை, கண்ணாடி, பொன், காடு, அருநெறி. வெண்டேர் - கானல்.

௪௫௪. கொக்கு - மாமரம், ஓர் பறவை.

௪௫௫. அவன்காகளம் - குயில்.

# செய்யுள் முதற்குறிப்பகராதி


| செய்யுள். | பக்கம். |
|---|---|
| **அ.** | |
| அக்குரகம் | ௫௨ |
| அகளனெங்கோ | ௫௩ |
| அங்குங்கும | ௬௯ |
| அங்கோகழி | ௪௫ |
| அடிகளெங்கோ | ௪௯ |
| அடையார்புரஞ் | ௧௨ |
| அணைமலர்க்கஞ்சி | ௫௧ |
| அதரெதிர் | ௫௭ |
| அந்நாள்வரு | ௫௪ |
| அப்பற்ற | ௨௬ |
| அம்பலம்புஞ் | ௨௮ |
| அயிற்றிரி | ௫௬ |
| அரங்கவை | ௫௫ |
| அரந்தொட்ட | ௧௬ |
| அரிதாந்துயி | ௩௭ |
| அருங்கடி | ௩௬ |
| அருளாவடு | ௧௬ |
| அழுந்தவிங் | ௪௨ |
| அள்ளற்பழன | ௪ |
| அளைவா | ௩௮ |
| அறிந்தில | ௬௪ |
| அறியாமை | ௩௩ |
| அறைவாயி | ௩௯ |
| அன்றுமென்பூ | ௫௪ |
| அனமும்பிடியு | ௨௩ |
| **ஆ.** | |
| ஆசிலக்கன்னி | ௧0 |
| ஆட்டுகெந் | ௩௨ |
| ஆடவரீர் | ௫௫ |
| ஆடிச்சிவந் | ௬௬ |
| ஆடுந்திரவி | ,, |
| ஆடுமென்றே | ௪௪ |
| ஆயவெண்ணீ | ௨௩ |
| ஆயிரமெண் | ௫௧ |
| ஆயினங்கோ | ௨௩ |
| ஆர்ப்பரவ | ௩௪ |
| ஆரத்தலர் | ௩௭ |
| ஆராகவென் | ௨0 |
| ஆராயுநாண் | ௪0 |
| ஆலடியார் | ௬௧ |
| ஆவித்துணை | ௭ |
| ஆவியொன் | ௬௫ |
| ஆருச்சின | ௩௮ |
| ஆரேந்துசென் | ௧௫ |
| ஆன்றவர்வந்து | ௫௮ |
| ஆனூர்துவச | ௬0 |
| **இ.** | |
| இகத்திலுமெய் | ௩௨ |
| இங்கேதர | ௩௪ |
| இடர்கெடுத்தா | ௪௨ |
| இடையாவரு | ௩௧ |
| இணையார்திரு | ௧௯ |
| இந்நானிலத் | ௭0 |
| இரவியந்தே | ௪௬ |
| இருகோடிவர் | ௧௨ |
| இருங்கல | ௬௩ |
| இருங்கன்னி | ௪ |
| இருந்தாமரை | ௨ |
| இருந்தாரணி | ௨௪ |
| இருந்துணையா | ௭0 |
| இருமைக்கு | ௪௧ |
| இலங்கியவா | ௨௪ |
| இலவிதழ் | ௬௪ |
| இழிவழிநாடி | ௪0 |
| இறைவளையாய் | ௩0 |
| இன்பார்துறக் | ௨௪ |
| இன்றளவும் | ௪௭ |
| **ஈ.** | |
| ஈகையர்வா | ௩௬ |
| ஈட்டும்வினை | ௪௭ |
| **உ.** | |
| உம்பர்க்கரசென் | ௧௪ |
| உம்மைப்பிறவி | ௬௭ |
| உமக்கேமுன் | ௧௮ |
| உமையாளெனு | ௬௨ |
| உயருந்தவத் | ௩௮ |
| உயிரிற்சிறந் | ௫௧ |
| உரக்கும்வண் | ௧௨ |
| உரற்காற் | ௩௧ |
| உருவார்வண் | ௩௩ |
| உலம்பும் | ௪௪ |
| உவருந்தி | ௬௨ |
| உள்ளாளை | ௧௬ |
| உள்ளீட்டினர் | ௨௧ |
| உன்னருஞ் | ௪௨ |
| **எ.** | |
| எட்டாந்திரு | ௪௫ |
| எண்கோட்டு | ௩௧ |
| எண்ணிய | ௧௩ |
| எண்ணும்பு | ௩௩ |
| எம்பரமா | ௬௨ |
| எம்போலினங் | ௫௭ |
| எளியார்க்கிரங் | ௩௩ |
| என்பனி | ௭0 |
| என்புகல் | ௩௪ |
| என்போடணி | ௫௯ |
| என்னூதிய | ௨௪ |
| **ஏ.** | |
| ஏணித்தடங் | ௪௩ |
| ஏதத்துட | ௬0 |
| ஏயும்விரக | ௬௧ |
| ஏறேறுகோ | ௬௫ |
| **ஐ.** | |
| ஐயானன | ௬௪ |
| ஐவனம்வித் | ௪௫ |
| **ஒ.** | |
| ஒண்ணந்தி | ௬௩ |
| ஒருகேள்வி | ௪௯ |
| ஒருதிருக் | ௫௨ |
| ஒருவதுவை | ௫௭ |
| ஒள்ளொளி | ௫௬ |
| ஒற்றைப்பொரு | ௪௨ |
| ஒன்றுமிரு | ௪௫ |
| **ஓ.** | |
| ஓங்கியசெம் | ௫ |
| ஓங்குமெங்கு | ௨௧ |
| ஓராழியங்கை | ௧௪ |
| **க.** | |
| கங்கையஞ் | ௬௫ |
| கட்டாரணி | ௩ |
| கடப்பந்தொடை | ௩௪ |
| கடுக்கண்ட | ௩௭ |
| கத்திகை | ௬௮ |
| கமரேயிக் | ௬0 |
| கருங்காலற் | ௬௬ |
| கருப்பாசந் | ௫0 |
| கல்லாலுக | ௫௪ |
| கலந்தார் | ௬௩ |

| செய்யுள். | பக்கம். |
|---|---|
| கலராலறி | ௬௩ |
| கவையேயழ | ௫௬ |
| கற்கண்டு | ௮ |
| கற்பாருமை | ௩௨ |
| கறைகொண்ட | ௬௮ |
| கா. | |
| காதரந்தீ | ௫௮ |
| காதாடும்வெண் | ௪௧ |
| காதும்பரச | ௧௮ |
| காந்திகொள் | ௫௬ |
| காம்பார்வளா | ௫௭ |
| காயத்திரு | ௧௬ |
| கார்நாட்டு | ௧௮ |
| காரொத்த | ௪௬ |
| காரொன்று | ௩௯ |
| காழிமன்ன | ௨௨ |
| கி. | |
| கிள்ளையஞ் | ௬௨ |
| கிளியாக | ௩௯ |
| கு. | |
| குயிலாய | ௩௧ |
| குயிற்குல | ௭ |
| குவலயந் | ௩௨ |
| குழையேறு | ௨௨ |
| குறிதாம்பிறை | ௪௯ |
| குனித்தருள் | ௭௦ |
| கூ. | |
| கூத்தாடவல் | ௨௬ |
| கூற்றமுமஞ்சு | ௫௧ |
| கூற்றுண்மை | ௪௩ |
| கை. | |
| கையாரநும் | ௫௯ |
| கையாழி | ௩௧ |
| கொ. | |
| கொங்குற்ற | ௫௩ |
| கொய்யாள் | ௨௧ |
| கோ. | |
| கோங்கேரிள | ௧௭ |
| கோன்மாறி | ௪௦ |
| ச. | |
| சத்தாமெங் | ௩௮ |
| சதிர்கொண்ட | ௬௩ |
| சதுவேதர் | ௪௮ |
| சரியோமறு | ௫௮ |
| சலம்புரி | ௪௬ |

| செய்யுள். | பக்கம். |
|---|---|
| சி. | |
| சிட்டர்கொண் | ௪ |
| சித்துக்கியான் | ௨௯ |
| சிரத்தார் | ௪௧ |
| சிரமங்கை | ௬௧ |
| சிரமாலே | ௫௫ |
| சில்வங்க | ௪௦ |
| சிலைமேரு | ௨௭ |
| சீ. | |
| சீயாது | ௩௫ |
| சீரியலா | ௨௫ |
| சீரேறுயர் | ௧௮ |
| சீரொப்பில் | ௭ |
| சீருடரவர் | ௫௦ |
| சு. | |
| சுகந்தாவி | ௪௮ |
| சுடுங்கார் | ௬௯ |
| சுத்தருக்கின் | ௪௬ |
| சுராதிபர் | ௪௮ |
| சுரும்பாடு | ௨௨ |
| சுரும்புறங் | ௬௬ |
| சுவையாரமிர் | ௪௬ |
| சுழியொன்று | ௧௯ |
| சுற்றியவார் | ௧௫ |
| சுற்றுஞ்சடி | ௧௦ |
| சூ. | |
| சூட்டம்பு | ௪ |
| சூட்டழற்க | ௩௦ |
| சூடாமணி | ௧௭ |
| சூலேந்துசெம் | ௧௦ |
| சூழ்ந்தார்கலி | ௬௭ |
| சூளாமணியெங் | ௨௬ |
| செ. | |
| செங்காவி | ௩௨ |
| செங்கைத் | ௫௯ |
| செந்நாப்புல | ௬௭ |
| செப்பநன் | ௫௬ |
| செப்பறைபூண் | ௩௫ |
| செம்பாதபத் | ௨௫ |
| செம்மலர்மா | ௩ |
| செய்யலர்வாச | ௩௭ |
| செழிக்குந்துறை | ௨௪ |
| செறிதேம்பொழி | ௩௪ |
| சென்னிக்கரு | ,, |

| செய்யுள். | பக்கம். |
|---|---|
| சே. | |
| சேதாம்பல் | ௬௮ |
| சேந்தற்கு | ௭௦ |
| சேயழலேங் | ௪௯ |
| சேயானமே | ௧௪ |
| சேலாடுகண் | ௮ |
| சேவார்பதா | ௩௬ |
| சேவேறுசெம் | ௧௮ |
| சொ. | |
| சொரிந்தசொல் | ௩௬ |
| சொல்லும்பெரு | ௬௯ |
| சொன்னலங் | ௨௬ |
| சொன்னேசருக | ௧௨ |
| சோ. | |
| சோகந்தவிர் | ௩௨ |
| சோணாடர் | ௪ |
| த. | |
| தக்கோர்பணி | ௧௩ |
| தங்குவந்தார | ௪௩ |
| தடக்கும்பராசி | ௧௪ |
| தடுத்துளையாத | ௩௬ |
| தண்டாதகி | ௨௮ |
| தண்டுறைசை | ௫௭ |
| தண்ணங்குமுத | ௨௧ |
| தண்ணார்சிறு | ௬௫ |
| தயங்கும்பிரசத் | ௪௧ |
| தளையவர் | ௩௦ |
| தலைவனெங் | ௬௧ |
| தவத்தின்மிக் | ௩௭ |
| தவமேரு | ௪௨ |
| தழலத்தமே | ௭௧ |
| தழையெடுத்தா | ௨௩ |
| தனத்தோடணை | ௨௭ |
| தா. | |
| தாயினுமின்ப | ௧௧ |
| தாளையன்பர் | ௫௩ |
| தி. | |
| திக்காடை | ௪௧ |
| திண்மூதரண | ௨௫ |
| திருக்காவிரி | ௧௩ |
| திருத்தத்துறை | ௯ |
| திருநாணரவர் | ௫௦ |
| திருவாவடுதுறை | ௨ |
| திருவீற்றிருந்த | ௪௩ |
| திளையார்புனற் | ௧௫ |

| செய்யுள். | பக்கம். |
|---|---|
| தினைக்காகோக் | ௧ ௬ |
| தினைபோக | ௨ ௯ |
| **தீ.** | |
| தீவாயவெஃ | ௭ 0 |
| **து.** | |
| துடியிடை | ௬ ௩ |
| துண்டப்பிறை | ௨ |
| துத்தியராவணி | ௩ |
| துதிப்பார் | ௧ ௪ |
| துதியைப்பெறுங் | ௧ ௧ |
| துப்பார்திரு | ௫ |
| துய்யவெண் | ௧ ௯ |
| துவ்வாவிட | ௨ 0 |
| துள்ளும்பொன் | ௪ ௪ |
| துளவேயணி | ௧ 0 |
| துறந்தனமே | ௩ ௭ |
| துறைசையுண் | ௨ ௪ |
| **தூ.** | |
| தூண்டற்கரு | ௫ ௭ |
| தூவேதவாசி | ௨ 0 |
| **தெ.** | |
| தெற்றியவார் | ௫ ௪ |
| தென்கோகழி | ௬ ௪ |
| தென்னரசூர் | ௨ ௧ |
| தென்னவிர் | ௧ ௧ |
| தென்னாவடுதுறைச் செம்......சிலம் | ௭ |
| தென்னாவடுதுறைச் செம்......செழுங் | ௨ |
| **தே.** | |
| தேக்கந்தரு | ௬ ௮ |
| தேமாங்கனி | ௩ ௫ |
| [illegible]ணிவீதி | ௧ ௧ |
| தேன்[illegible]ருங் | ௧ 0 |
| தேன்றுஞ்சு | ௫ ௩ |
| தேனக்கபூங் | ௫ ௯ |
| தேனுங்கிழங்கு | ௨ ௫ |
| **தை.** | |
| தைக்கின்றவேற் | ௭ ௧ |
| **தொ.** | |
| தொங்கலேம் | ௩ 0 |
| தொடுக்குங் | ௫ |
| தொடைத்தே | ௪ ௯ |
| தொண்டாநமை | ௪ ௩ |
| தொத்திட்ட | ௧ ௫ |
| தொம்மென | ௭ ௧ |
| தொல்லாவடு | ௧ ௭ |
| தொழுக்கேத | ௩ ௫ |
| தொழுதவர்க் | ௩ |
| தொழும்புசெய் | ௧ ௬ |
| தொளிகொண்ட | ௧ ௯ |
| **தோ.** | |
| தோட்டார்கது | ௩ ௮ |
| தோட்டெருக் | ௧ ௭ |
| தோட்டேறுகன் | ௪ ௪ |
| தோளுலிரண் | ௯ |
| தோற்றமுங்கேடு | ௧ ௯ |
| **ந.** | |
| நகிர்கொடி | ௪ ௫ |
| நஞ்சமுதா | ௨ ௯ |
| நஞ்சிக்கொ | ௬ |
| நடங்கொண்ட | ௧ ௧ |
| நடத்திற்சிறந் | ௬ |
| நடமேசெய | ௫ ௫ |
| நத்துறையா | ௭ |
| நந்தலேவாவி | ௩ 0 |
| நந்தாவளத் | ௨ ௪ |
| நந்தித்தனி | ௪ ௬ |
| நம்மனையாந் | ௨ ௮ |
| நம்மாசிலாமணி | ௧ ௯ |
| நல்லாவடுது......நளி | ௧ ௨ |
| நல்லாவடுது......நற் | ௩ |
| நல்லோர்ப | ௪ ௮ |
| நலம்பாவுநம் | ௨ ௨ |
| நவ்வியங்கை | ௬ ௬ |
| நளியற்றவெஞ் | ௫ ௫ |
| நற்பலதேவ | ௭ |
| நற்றாய்க்கினி | ௫ ௮ |
| நறைக்கோவை | ௧ |
| நறையாரிதழியர் | ௧ ௯ |
| நன்மாணிடம் | ௪ ௧ |
| நன்னத்தின் | ௬ |
| **நா.** | |
| நாகத்திரு | ௨ |
| நாவியம் | ௨ ௭ |
| நானேதுமெண் | ௮ |
| **நி.** | |
| நிதிவளர்கோ | ௫ ௨ |
| நிந்தையுரும | ௩ ௯ |
| நிரைக்கும்பகி | ௭ ௧ |
| நிலக்கோர்பசும் | ௯ |
| நிவந்தமராமர | ௫ ௨ |
| நின்றுறைசை | ௧ |
| **நீ.** | |
| நீடுநின்கண் | ௫ 0 |
| நீநித்துறைசை | ௩ ௬ |
| நீந்தாநெடும் | ௬ ௯ |
| நீர்கொண்ட | ௧ |
| நீருண்டவார் | ௪ ௯ |
| நீலார்முகின் | ௩ ௧ |
| **நெ.** | |
| நெறிவார்குழலி | ௩ ௭ |
| **ப.** | |
| பஞ்சடிதாம | ௧ ௭ |
| பஞ்சூட்டுமெல் | ௫ 0 |
| பண்ணையம் | ௪ 0 |
| பணிக்கடகம் | ௫ ௫ |
| பதவாரணத்த | ௧ ௪ |
| பதியாதென் | ௧ ௫ |
| பரசம்புயமலர் | ௪ ௭ |
| பரம்புமலர் | ௫ ௧ |
| பரிவேமருவி | ௫ ௯ |
| பருக்குந்தன | ௧ ௩ |
| பருங்கங்கு | ௨ ௯ |
| பல்கியசீ | ௬ ௨ |
| பல்லாரவண்ட | ௬ |
| பற்றேதுமி | ௫ ௪ |
| பன்னுமத்தெய் | ௯ |
| பனிச்சந்திர | ௧ ௧ |
| **பா.** | |
| பாட்டரியாலி | ௩ |
| பாதலமோ | ௧ |
| பாம்பார்த்த | ௬ ௬ |
| பாராட்டுநல் | ௬ ௪ |
| பாரோர்விண் | ௨ ௬ |
| பானத்துலா | ௯ |
| பானலம்போ | ௩ ௮ |
| **பி.** | |
| பிடிக்கத்தகு | ௨ ௨ |
| பிடிவளமென் | ௩ ௩ |
| பிரியாதுவள் | ௧ ௫ |
| பிறவாநெறி | ௫ |
| பிறைவார்நுத | ௨ 0 |
| **பு.** | |
| புகலுந்துதி | ௪ 0 |

| செய்யுள். | பக்கம். |
|---|---|
| புயலாய்மி | ௫௨ |
| புணைவிடையப் | ௬௧ |
| புள்ளிப்புலியத | ௨௮ |
| புனலூற்றபூ | ௬௭ |
| **பூ.** | |
| பூமாரன்றே | ௫௩ |
| **பெ.** | |
| பெண்ணுழை | ௧௩ |
| பெருந்தவர் | ௫௯ |
| **பே.** | |
| பேதாதிபேதங் | ௬0 |
| **பை.** | |
| பைஞ்சூரன் | ௩௧ |
| பைம்போதி | ௧0 |
| **பொ.** | |
| பொருவொன் | ௬௭ |
| பொற்பயன் | ௪௧ |
| பொற்றோர் | ௫ |
| பொன்மறுகோ | ௬௬ |
| பொன்னணியாது | ௩0 |
| பொன்ஞேதி | ௧௫ |
| **போ.** | |
| போதார்புரி | ௬௯ |
| போர்க்குஞ்சர | ௬௫ |
| **ம.** | |
| மகரக்கருங் | ௬௮ |
| மஞ்சனமாட்டி | ௫௪ |
| மடக்கொடி | ௬௪ |
| மடங்காத | ௨௨ |
| மணந்தரு | ௫௮ |
| மணிப்பாந்த | ௩௯ |
| மதிவைத்த | ௨௯ |
| மயில்போனட | ௧௧ |
| மருக்கொண்டிட | ௪௫ |
| மருதாளூமூர | ௨௮ |
| மருவளர்கோதை | ௭௧ |
| மருவியகாதலர் | ௨௭ |
| மல்லார்மலே | ௨௫ |
| மலங்காவகை | ௬௮ |
| மழுவலனேந்தி | ௪௩ |
| மழைதரு | ௧௩ |
| மறைகட்கரிய | ௧௭ |
| மன்றேறி | ௨௭ |
| மன்னிருவாணி | ௮ |
| மனையாவடு | ௧௯ |
| **மா.** | |
| மாசிலைக்கா | ௮ |
| மாட்சிமெயன் | ௨௭ |
| மாண்டகுபூ | ௩௩ |
| மாணுர்கடு | ௫0 |
| மாமன்றற்கை | ௪௭ |
| மாமேனிக் | ௧௩ |
| மாரனேநீறு | ௬௭ |
| மாவேரிக் | ௪௪ |
| மாற்சந்தரணி | ௨௯ |
| **மி.** | |
| மின்னுக்கதிர் | ௫ |
| மின்ஞேது | ௨௧ |
| **மு.** | |
| முடித்திட | ௨0 |
| முடியாறு | ௪௭ |
| முத்தமிழ் | ௮ |
| முத்தலேவே | ௩௮ |
| முத்திமெயன் | ௧௪ |
| முதுக்குறை | ௪௮ |
| முற்றுமுலே | ௩௨ |
| முறுவற்படை | ௬௪ |
| முன்வரக்கண் | ௫௮ |
| முன்னந்தடவனை | ௪0 |
| முன்ஞண்மறை | ௬0 |
| **மூ.** | |
| மூப்பாயிளை | ௬ |
| மூலாகமங் | ௪௬ |
| மூவாமுதல்வ | ௪௯ |
| மூளாவழலி | ௬௫ |
| **மெ.** | |
| மெய்வரந் | ௪௮ |
| மெல்லதரத் | ௪௪ |
| **மை.** | |
| மைப்போதன | ௪௭ |
| மையார்கருங் | ௨௮ |
| மைவண்ணவார் | ௨௨ |
| **வ.** | |
| வடிக்கணல் | ௧௭ |
| வடியிட்ட | ௨௫ |
| வடுப்பான் | ௨௩ |
| வண்டார் | ௪௫ |
| வண்டிலதா | ௯ |
| வண்ணச்சடா | ௩ |
| வயலாம்பல் | ௩௯ |
| வருணத்திற் | ௫௬ |
| வருமந்தமாதி | ௫௧ |
| வனையும்பொற் | ௬௧ |
| வன்புடன் | ௫௨ |
| **வா.** | |
| வாடாதபோ | ௨ |
| வாமத்திலோர் | ௩0 |
| வார்க்கும்ப | ௩௫ |
| வார்தங்கு | ௨௭ |
| வாழிதிருவர | ௭௧ |
| வாளொன்று | ௪௨ |
| வானும்பரன் | ௬௧ |
| **வி.** | |
| விடவாள் | ௨௬ |
| விடைக்கண் | ௬௨ |
| விடையார் | ௧௨ |
| விண்ணுற்ற | ௪ |
| வினையார் | ௬௩ |
| வில்லாரவே | ௨0 |
| வில்விலங்கு | ௫௫ |
| விழிகாட்டு | ௫௬ |
| விளக்கமரு | ௧0 |
| விற்படும் | ௧௮ |
| விறப்பறியா | ௩௪ |
| **வீ.** | |
| வீணர்க்கருமை | ௪ |
| வீரியமாக | ௬௫ |
| **வெ.** | |
| வெங்கட்கரி | [illegible] |
| வெங்காள | ௫௨ |
| வெட்டும்படை | ௩௫ |
| வெப்பார்வட | ௫௧ |
| வெள்ளாங்குரு | ௨0 |
| வெள்ளிப்பிறை | ௩௫ |
| **வே.** | |
| வேண்டும்பத | ௪௩ |
| வேய்வந்த | ௨௩ |
| வேர்சூழ்ந்த | ௫௩ |
| வேலேநஞ்சு | ௫௪ |


துணைவந்த கணபதிதுணை.